August 29 - September 04, 2010 பக்கங்கள் - 28 25.00


ஒகஸ்ட் 29 - செப்டெம்பர் 04, 2010


REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்





உயிர் வலிக்கும் கனவுகள்

மஹிந்த ராஜபக்ஷவும் தமிழர்களும்



புலம்பெயர்ந்தோர் விடயத்தில் கண்வைக்கும் இலங்கை



ஏன் இந்த வஞ்சனை?

சாதனைகள் பல செய்யும் எந்திரன்

# புலம்பெயர்ந்தோர் விடயத்தில் 'கண்' வைக்கும் இலங்கை!

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை, உரிமைப் போராட்டத்தைத் தனது நட்பு நாடுகளின் ஆதரவுடன் முடிவுக்குக் கொண்டு வந்த இலங்கை, இப்போது புலம்பெயர்ந்த, புலம் பெயரும் தமிழர்கள் மீது 'கண்' வைத்துள்ளது.

இலங்கைக்கு எதிராகச் சர்வதேச நாடுகளில் இருந்து போராட்டங்களை நடத்திவரும் ஈழத்தமிழர்கள் எல்லோரையும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று காட்டி, அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் இரகசியத் திட்டம் ஒன்றை இலங்கை முன்னெடுக்க முனைந்துள்ளது.

சர்வதேச மட்டத்தில் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பை முற்றுமுழுதாக ஒடுக்க சர்வதேச இன்ரபோலின் உதவியை நாடவும் இலங்கை முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாகத் தகவல்கள் கசிகின்றன.

இந்தச் செயற்பாட்டின் ஓர் அங்கமாக, வியட்நாமில் இடம்பெற்ற ஆசியான் பிராந்திய மாநாட்டில் வைத்து சர்வதேசத்துக்கு இலங்கை செய்தி ஒன்றை விடுத்துள்ளது.

இலங்கையில் இருந்து அகதிகள் எனக் கூறிக் கொண்டு வருபவர்களின் புகலிடக் கோரிக்கையை ஏற்கின்றமை சட்டத்துக்குப் புறம்பான ஆள்கடத்தல், சட்ட விரோதக் குடியேற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதாக அமை



யும் என சர்வதேசத்துக்கு இலங்கை எச்சரிக்கை விடுத்துள்ளது.

எந்தவொரு நாடும் இலங்கையில் இருந்து வருபவர்களின் புகலிடக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் இலங்கை பகிரங்கமாக அறிவித்துள்ளது. 'துன்புறுத்தப்படுவர்' என்று புகலிடம் கோரினால் அதை ஏற்கவே கூடாது என்று இலங்கை சார்பில் அந்த மாநாட்டில் உரையாற்றிய வெளிவிவகார பிரதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன கூறியுள்ளார்.

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் நிம்மதியாக வாழ்ந்த தமிழர்கள் மீது அரச பயங்கரவாதம் ஏவப்பட்டதன் எதிரொலியாகவே ஈழத்தமிழர்கள் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து அகதி அந்தஸ்துக்கோர ஆரம்பித்தனர்.

இளைஞர்களைக் கைது செய்து சிறைகளில் வருடக்கணக்கில் அடைத்து வைத்திருத்தல், இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுதல், காணாமல் போகச் செய்தல், கொலை செய்தல் போன்ற செயற்பாடுகள் தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்டதன் காரணமாகவே தமிழர்கள் புலம்பெயர ஆரம்பித்தனர்.

புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கக்கூடிய காரணங்கள் இருந்த காரணத்தால் மேற்குலக நாடுகள் அகதி அந்தஸ்து வழங்கி, தமது நாட்டுப் பிரஜைகளாக அவர்களை ஏற்றுக் கொண்டன.

தமிழர்கள் தமது சொந்த இடத்தில் வாழமுடியாத சூழல் ஒன்றை உருவாக்கிய இலங்கையின் நடவடிக்கைகள்தான் தமிழர்களை வேற்று நாட்டுப் பிரஜைகளாகத் தாரைவார்க்க உதவின.

இன்று புலம் பெயர்ந்த மக்கள் பரந்து பட்டு பல நாடுகளில் வாழ்ந்தபோதும், அவர்கள் தமது தாயகத்தை நேசிக்கின்ற காரணத்தால், அந்த தாயகத்தில் அரங்கேறும் அராஜகங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர். போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். தமக்கென 'நாடு கடந்த தமிழீழ அரசு' ஒன்றை உருவாக்க முனைந்துள்ளார்கள். அதற்கான ஆதரவைப் பெற தேர்தல்களை அங்கு நடத்துகின்றார்கள். அரசியல் தஞ்சம் கோரி, அந்த நாடுகளின் பிரஜைகளாக அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் புலம் பெயர்ந்தவர்களை, பயங்கரவாதத்துக்கு உதவுவதாகக் குற்றம் சுமத்துவது எந்தவிதத்தில் நியாயமாகும் என்று புலம்பெயர் அமைப்புக்கள் கேள்வி எழுப்புகின்றன.

கடந்த 60 வருடங்களாக இலங்கையின் எரியும் பிரச்சினையாக இருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டு, தமிழ் மக்களை நண்பர்களாக, உடன்பிறப்புக்களாக அங்கீகரிக்க இலங்கை விரும்பவில்லை.

அந்த மக்களைத் தொடர்ந்து இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தி, அவர்களின் நிலங்களை, சொத்துக்களை அபகரித்து, தமிழினம் ஒன்று இந்த நாட்டில் இருக்கவில்லை என்று காட்டுவதற்கு இலங்கை முனைந்துள்ளது என்று புலம்பெயர் தமிழர்கள் கூறுகின்றனர்.

எந்தவித அச்சுறுத்தல் இலங்கையிடம் இருந்து வந்தாலும், அதைப் பொருட்படுத்தாது, எமது தாயகம், மொழி காப்பாற்றப்படத் தொடர்ந்து போராடுவோம் என்கிறார்கள் புலம் பெயர் தமிழர்கள்.

இலங்கையில் பயங்கரவாதம் என்று கூறி தமிழரின் உரிமைப் போராட்டத்தைத் ஒழித்துக் கட்டிய இலங்கை, அடுத்து கைவைத்துள்ள புலம் பெயர் தமிழர் விடயத்தில் வெற்றி கொள்வது இலேசான விடயம் அல்ல எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

புலம் பெயர்ந்தவர்கள் தொடர்பாக இலங்கையின் எச்சரிக்கையைச் சர்வதேசம் ஏற்குமா? இல்லையா? என்பதற்கு காலம்தான் பதில் கூறவேண்டும்.

# இரு தலைமைகளின் பேச்சு நாட்டுக்கு நன்மை பயக்குமா?

அது நிற்க - தொடர்ந்து எவ்வாறு ஆட்சியில் இருக்கலாம், அதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற விடயமே இப்போது தெற்குத் தலைகளைக் குடைந்து கொண்டிருக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை மேலும் ஒரு காலத்துக்கு நீடிக்கும் முயற்சி தோல்வியில் முடிவடைந்ததால், நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர்

**யாழவன்**

பதவி முறையை அறிமுகம் செய்ய முனைப்புக் காட்டப்படுகிறது.

இதற்கு ஏற்ற வகையில் அரசமைப்பை மாற்றுவதற்கான பேச்சுக்களில் பிரதான கட்சிகளான சுதந்திரக் கட்சியும் ஐ.தே.கட்சியும் பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரித்த வலையில்

## அரசுக்குள் இருந்து புறப்பட்டுள்ள இடதுசாரிகளின் எதிர்ப்புப் போர்

ஐ. . . சி வீழ்ந்துவிட்டதாக, மூன்றாவது பலம் வாய்ந்த கட்சியான ஜே.வி.பி. குற்றஞ்சாட்டி வருகின்ற போதும் -

சுதந்திரக் கட்சி - ஐ.தே.கட்சிப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நாட்டின் எரியும் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இரு பிரதான கட்சிகளும் பேச்சுக்களை நடத்தி, தீர்வு ஒன்றை எட்டுவதற்குப் பதிலாக எந்தக் கட்சியாக இருந்தாலும் தமது ஆட்சிக் கதிரையிலேயே கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது.

எரியும் பிரச்சினைக்கு இரு கட்சிகளும் சேர்ந்து தீர்வு ஒன்றை முன்வைக்குமானால், நாட்டின் மீது உள்ள அச்சுறுத்தலுக்கு முடிவு ஏற்படும். நாடு சுபீட்சமான பாதையில் செல்ல வாய்ப்புக் கிட்டும். இந்த யதார்த்த நிலை இரு கட்சிகளின் தலைமைகளுக்கும் புரியாமல் இருப்பதுதான் வேடிக்கையான விடயமாகும்.

அரசமைப்பு மாற்றம் மூலம் இருகட்சிகளும் தமது ஆட்சிக் கதிரை தொடர்பாக மாற்றங்களைக் கொண்டு வந்தால் மட்டும் நாட்டின் பிரச்சினைக்கு முடிவு ஏற்படப் போவதில்லை.

இந்தநாடு சுபீட்சமான பொருளாதார முன்னேற்ற மான நாடாக மாறவேண்டுமாயின், எரியும் பிரச்சினைக்கு இரு கட்சிகளும் இணைந்து தீர்வைக் காண வேண்டும். இல்லாவிட்டால் தணலாகக் கிடக்கும் பிரச்சினை மீண்டும் நாட்டை எரிக்கும் நிலைக்குச் செல்ல இரு தலைமைகளும் பொறுப்பேற்க வேண்டிவரும்.

இந்த யதார்த்த நிலையை இருதலைமைகளும் உணர்ந்து செயற்பட எப்போது முன் வருவார்களோ, அப்போதுதான் நாட்டை அழிவில் இருந்து காப்பாற்ற முடியும்.

இந்த யதார்த்த நிலையை இருதலைமைகளும் புரிந்து செயற்படுவார்களா என்பதற்குக் காலம்தான் பதில் கூற வேண்டும்.

தமது ஆட்சிக் கதிரைக்கு இருதலைமைகளும் பேச்சு நடத்தும் நிலையில் -

வாழ்க்கைச் செலவு, சம்பள உயர்வு ஆகியன தொடர்பாகப் போராட்டம் நடத்த இடதுசாரிக் கட்சிகள் முன்வந்துள்ளன.

அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகளே இந்தப் போராட்டத்தில் குதிக்கின்றன.

அடுத்தமாதம் 12 ஆம் திகதி ஹர்த்தால், ஆர்ப்பாட்டம் என அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்த் அரசில்



அங்கம் வகிக்கும் கட்சிகளே முன் வந்துள்ளதை நோக்கும் போது -

நாட்டின் வாழ்க்கைச் சுமை எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஊகிக்க முடியும்.

அரசுக்குள்ளேயே இருந்து அரசுக்கு எதிராக இடதுசாரிகள் கொடுக்கப்போகும் குரல் நிச்சயம், வாழ்க்கைச் சுமையால் அல்லாடும் மக்களுக்கு விமோசனத்தைத் தரும் என எதிர்பார்க்கலாம்.

நாட்டின் எரியும் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முனைப்புக் காட்டாதது போல், மற்றொரு எரியும் பிரச்சினையான வாழ்க்கைச் செலவு உயர்வு பிரச்சினைக்கும் தீர்வுகாண அரசு முனையா விட்டால், நாடு மோசமான நிலைக்குள் செல்லும் என்பதில் ஐயமில்லை.

இந்த அபாயநிலையை உணர்ந்து தெற்குத்தலைமைகள் செயற்பட முன் வரவேண்டும். இல்லாவிட்டால் நாட்டுக்கு விமோசனம் ஏற்பட வாய்ப்பே இல்லை.

*****

# நடந்தது என்ன?

குடாநாட்டில் அண்மைக்காலமாக நிலவி வந்த அமைதியைக் குலைப்பது போல ஒரு சம்பவம் சமீபத்தில் நிகழ்ந்து முடிந்திருக்கிறது. கொக்குவில் பிரம்படி வீதியில் அம்மன் கோயில் பகுதியில் கால் நடையாகச் சென்று தளபாடங்களை விற்று வரும் தென்னிலங்கை வியாபாரிகள் மூவர் மீது இனந்தெரியாத குழுவொன்று தாக்குதல் நடத்தி அவர்களைக் காயமுறச் செய்திருக்கிறது.

தமிழ் சினிமாக்களில் வருகின்ற சண்டைக்காட்சியைப் போல கண்ணிமைக்கும் நேரத்தில் இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த அந்த இடம் இரத்தக் களரியாக மாறியது. தமது முகத்தை கறுப்புத் துணிகளால் இறுகக் கட்டியிருந்த 10 பேர் அடங்கிய அந்தக் கும்பல் தமது கைகளில் இருந்த பொல்லுகள், வாள் என்பவற்றை சகட்டு மேனிக்கு வீசியவாறு தமது கைவரிசையை காட்டினர். தென்னிலங்கை வியாபாரிகளில் ஒருவர் மாத்திரம் நாலாபுறத்திலிருந்தும் அடிகளையும், வெட்டுகளையும் சந்திக்க வேண்டியேற்பட்டது. ஏனைய இருவரும் ஓரளவுக்கு அடி வாங்கினாலும் தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர். ''இனிமேல் இஞ்ச நீங்கள் 'பிஸ்னஸ்' செய்யக்கூடாது'' என்று கொச்சைச் சிங்களத்தில் உரக்கக் கத்தியவாறு தான் வாள்களைச் சுழற்றிக் கொண்டு சைக்கிள்களில் ஏறி விரைந்தது அந்தக் கும்பல். போகிற போக்கில் அருகில் நின்ற வாகனத்துக்கும் தீ மூட்டி விட்டுச் செல்லவும் அவர்கள் மறக்கவில்லை. அதன் பின் அயலவர்களும், காயப்பட்டவர்களும் சக வியாபாரத் தோழர்களும், படையினரும் பொலிஸாரும் விரைந்தோடி வந்து காயப்பட்ட மூவரையும் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர். எரிந்து கொண்டிருந்த தீயைக் கட்டுப்படுத்தி வாகனத்தினையும் பத்திரமாக மீட்டனர்.

காயப்பட்டவர்களில் இருவர் சிறு காயங்களுடன் தப்பித்துக் கொண்டாலும், ஹமல் என்பவருக்கு உடலில் சரமாரியான வெட்டுக் காயங்கள் ஏற்பட்டு, ஆபத்தான நிலையில் இருந்து மயிரிழையில் தன் உயிரைத் தக்க வைத்திருக்கிறார்.

மேலோட்டமாகப் பார்க்கும் போது சாதாரண அடிதடி நிகழ்வு போலவே இச் சம்பவம் தோற்றமளித்தாலும் உண்மையில் மிகப் பாரதூரமான பின் விளைவுகளை உண்டு பண்ணும் நோக்கிலேயே தாக்குதலாளிகள் தளபாட வியாபாரிகள் மீது தமது கைவரிசையைக் காட்டியிருக்கிறார்களோ என்பதே பலரதும் சந்தேகமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை திரும்பிய பின்னர் இப்போது அது ஒரு பிரதான சுற்றுலா மையமாக மாறியிருக்கிறது. பயணிகள் வருவதும் போவதுமாகவே இருப்பதால் எந்நேரமும் சனக் கூட்டத்தால் குடாநாடு நிரம்பி வழிந்தபடியே இருக்கிறது. இதுபோதாதென்று இப்போது குடாநாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களான செல்வச் சந்நிதி முருகன், நல்லூர்க் கந்தன், தெல்லிப் பழை துர்க்கை அம்மன் போன்ற ஆலயங்களின் வருடாந்த உற்சவங்களும் ஏக காலத்தில் நடந்து வருகின்றன. பாடசாலைகளுக்கும் இரண்டாம் தவணை விடுமுறை விடப்பட்டுள்ளது. புலம் பெயர் நாடுகளிலும் இப்போது விடுமுறைப் பருவம் என்பதால் அவர்களும் தம் சொந்த மண்ணுக்கு படையெடுத்தபடியே உள்ளனர். இம் மூன்று காரணிகளும் ஒரே புள்ளியில் சந்திப்பதால் குடாநாட்டின் சன நெரிசல் இந்த மாதத்தில் இன்னும் அதிகரித்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் உல்லாசப் பயணிகளின் தலைகள் தான் தெரிகின்றன. இவ்வாறு எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற மையமாக யாழ்ப்பாணம் மாறியிருக்கும் சூழலில் இங்கு நிகழும் சிறிய சம்பவங்கள் கூட பெரியளவிலான தாக்கத்தையும் பிரபல்யத்தையும் பெற்று விடுவது இலகுவானது. இந்தக் காரணிகளை கணக்கில் கொண்டே தளபாட வியாபாரிகள் மீதான கத்திவெட்டு நடந்திருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் இதுவரை நடைபெற்ற விசாரணைகளின் படி குறித்த தளபாட வியாபாரிகளுக்கு தனிப்பட்ட எதிரிகளோ, தொழில் முறைப் போட்டியாளர்களோ எவரும் இங்கில்லை. அத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஒரு பிரதேசத்தில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த வியாபாரிகள் மீது தாக்குதல் நடத்துமளவுக்கு யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களுக்கும் குறித்த வியாபாரிகளுக்கும் இடையில் கோபதாபங்கள் கூட எதுவுமில்லை. இத்தகைய நிலையில் படுகாயம் ஏற்படுமளவுக்கு வெறித்தனமான தாக்குதலை நிகழ்த்தியவர்கள் யார்? என்பது இதுவரை புரியாத புதிராகவே இருக்கிறது. எனினும் தமிழ் - சிங்கள இன உறவைச் சீர்குலைக்கும் ஒரு நடவடிக்கையின் முதற்கட்டமாகவும் இதைக் கொள்ள முடியும். அதற்குத்தான் தாக்குதலாளிகள் விரும்பினார்களோ தெரியவில்லை.

தென்னிலங்கை மக்களும் புலம் பெயர் மக்களும் ஏக காலத்தில் குவிந்துள்ள நேரத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் மீது - அவர்கள் இரத்தம் சிந்தும் அளவுக்கு - தாக்குதலை நடத்தினால் அதற்குப் பதிலடியாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களோ அல்லது படைத் தரப்போ தமிழ் மக்கள் மீது இதே வகையிலான இரத்தம் சிந்துதலை ஏற்படுத்தலாம் என்றும் அதன் படிமுறை வளர்ச்சியால் சடுதியாக மீண்டும் ஒரு இனக்கல வரத்தை தூண்டிவிடலாம் என்றும் தாக்குதலாளிகள் கணக்கிட்டிருக்கக்கூடும். ஆயினும் நல்ல வேளையாக அவ்விதமான அசம்பாவிதம் எதுவும் உருக்கொள்ளவில்லை.


''எனினும் சிறியதொரு விடுமுறை கிடைத்து விட்டால் கூட சட்டி பானைகள் சகிதம் யாழ்ப்பாணத்திற்கு வண்டியைக்கட்டுகின்ற தென்னிலங்கைப் பயணிகள் இனிமேல் யாழ்ப்பாணம் வருவதற்கு தயங்கவே செய்வர்'' என்று பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர் கூறினார். அவர் கூறியது உண்மை என்பதை நிரூபிப்பது போல கடந்த சில நாள்களாக தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வருகின்ற பயணிகளின் எண்ணிக்கை திடீரென வீழ்ச்சி கண்டிருக்கிறது. இது தவிர நாலைந்து நாள்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து இங்குள்ள பிரதேசங்களின் அழகைப் பருகி தமது விடுமுறையைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்காக வந்திருந்த தென்னிலங்கை வாசிகள் குறித்த சம்பவம் நிகழ்ந்த அடுத்த நாள் காலையே தமது திட்டங்களையெல்லாம் மூடை கட்டி வைத்து விட்டு மீளவும் தம் இடத்திற்கே விரைந்துவிட்டனர்.

அத்துடன் கால் நடையாகத் தளபாடங்களைக் கொண்டு சென்று விற்பனை செய்யும் வியாபாரிகளையும் கடந்த இரு நாள்களாக யாழ்ப்பணத்தில் காண்பது அரிதாகவே இருக்கிறது. சம்பவம் நடைபெற்ற பகுதியில் இப்போதெல்லாம் படையினரின் பிரசன்னமும் அப்பகுதியால் செல்லும் வாகனங்களின் மீதான சோதனை நடவடிக்கைகளும் அதிகரித்திருக்கின்றன. மூன்று பேருக்கு வீழ்ந்த கத்திவெட்டு ஒட்டுமொத்த குடாநாட்டின் நிலவரத்தையே ஒரு வித பதற்றத்திற்குள் ஆழ்த்திவிட்டது. இயல்பு வாழ்வு கேள்விக்குறியாகி, எப்போதும் பதற்றமான சூழலுக்குள்ளேயே யாழ்ப்பாணத்தை வைத்திருக்க விரும்புகின்றவர்களே இத்தாக்குதலை நிகழ்த்தியிருக்க வேண்டும் என்று படைத்தரப்பு நம்புகிறது.

ஆயினும் இன்னொருவிடயத்தையும் இங்கே குறிப்பிட்டேயாகவேண்டும். யாழ்ப்பாணத்தின் வளங்களைச் சுரண்டிச் செல்லும் நடவடிக்கையில் தென்னிலங்கை வியாபாரிகள் முழுமூச்சாக இறங்கியிருக்கிறார்கள் என்றொரு கருத்து பரவலாகத் தோன்றியிருக்கிறது. குடாநாட்டின் விளைபொருள்கள், பாரம்பரிய முதுசொமான மரபுரிமைப் பொருள்கள் என்பவற்றை இங்கிருந்து வழித்துத் துடைத்துக்கொண்டு தென்னிலங்கைக்கு அவர்கள் அனுப்பி வருவதாகவும், இதே வேளை தென்னிலங்கையில் விலைபோகாமல் தேங்கியிருந்த தரமற்ற பொருள்களையெல்லாம் யாழ்ப்பாணத்தவர்களின் தலையில் கட்டி அவர்களின் பணத்தை சுரண்டிச் செல்வதாகவும் ஒரு எண்ணக்கரு வேரூன்றி விட்டது. இது தவிர தென்னிலங்கையில் இருந்து வருகின்ற பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் தமது வியாபார நோக்கம் கருதி யாழ்ப்பாணத்து வர்த்தகர்கள் சிலர் பெரும்பான்மையினத்தவர்களுக்கு ஏற்ற விதத்தில் சிங்கள மொழியிலான பெயர்ப் பலகைகளை எழுதுதல், பேருந்துகளில் சிங்களப் பாடல்களை ஒலிக்க விடுதல், வாடகைக்கு குடியிருந்தவர்களை ஈவிரக்கமின்றி வெளியேற்றி விட்டு வீடுகளை தங்குமிட விடுதிகளாக மாற்றுதல் என்பன போன்ற செயற்பாடுகளில் பணத்தைக் குறியாக நினைக்கும் சில யாழ்ப்பாணத்தவர்கள் ஈடுபட்டு வந்தார்கள். இது தமிழ் மொழி மீதும் காலாதிகாலமாக பின்பற்றி வந்த கலாசாரத்தின் மீதும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, ஏழை யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலையும் கேள்விக்குள்ளாக்குகிறது என்று ஒருசிலர் பொங்கியெழுந்தனர். இதன் வெளிப்பாடாக சில மாதங்களுக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறுத்துமாறும் இல்லாவிட்டால் பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படும் எனவும் எச்சரிக்கை செய்யும் சுவரொட்டிகள் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்தன. ஆயினும் இதைப்பற்றியெல்லாம் எவரும் இலட்சியம் செய்யவில்லை. சாதாரண 'வெருட்டு' என்றே பலரும் எண்ணினர்.


ஆயினும் எவ்வித காரணகாரியமும் இன்றி தளபாட வியாபாரிகள் மீது வீழ்ந்திருக்கிற வெட்டு, குறித்த வியாபாரிகள் மீதான தனிப்பட்ட கோபதாபத்தால் நிகழவில்லை என்று கருதிக்கொண்டால் இனப்பிரச்சினையை மீள உருவாக்கும் நோக்கிலேயோ அல்லது தென்னிலங்கைப் பயணிகளின் வருகையைத் தடுத்து நிறுத்தும் நோக்கிலேயோ தான் நடந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கே வர முடியும். எந்தக் காரணமாயினும் அப்பாவிப் பொதுமக்கள் மீது நிகழ்த்தப்படும் எந்தவொரு சிறு கீறலையும் உண்டாக்கும் தாக்குதல் முயற்சிகளை இனிமேலும் வளரவிடாது தடுக்க வேண்டியது பாதுகாப்புத் தரப்பின் உடனடிக் கடமை.

- பிரமன் -



# மஹிந்த ராஜபக்ஷவும் தமிழர்களும்

-அருள் மனோகரன்-



மஹிந்த ராஜபக்ஷவைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்? என்று யாரையாவது கேட்டால், எல்லோரும் பொதுவாகச் சொல்லும் சில மாதிரியான கருத்துகள் உண்டு.

''மஹிந்த சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் கெட்டிக்காரர் யுத்தத்தில் வெற்றியடைந்தது மட்டுமல்ல, தான் நினைத்ததை நடத்திமுடிக்கும் ஆள்.''

அதைப்போல, ''சந்தேகத்திற்கிடமில்லாத அதிகாரப் பிரியர் அல்லது அதிகார வெறியர். தன்னை, தனது குடும்பத்தை, தனது கட்சியை, தனது விருப்பத்தைத் தவிர்த்து வேறெதையும் விரும்பாதவர். அவரைப் பொறுத்தவரை அவருடைய இரண்டு கால்களுக்கிடையில்தான் இந்தப் பூமியே, இந்தப் பிரபஞ்சமே இருக்கின்றது என எண்ணிக்கொண்டிருப்பவர்.''

இன்னுமொரு அபிப்பிராயமும் பொதுவாக உண்டு. ''மஹிந்த நல்ல காரியங்களையும் செய்யக்கூடியவர். அவர் ஒரு தேசியவாதி. தனித்துவங்களை விரும்புகிறவர்'' - என்ற மாதிரி.

இவை இலங்கை ஜனாதிபதியைப் பற்றிய பொதுச்சித்திரம்.

இங்கேதான் பிரச்சினையே உருவாகிறது. ஒரு கெட்டிக்காரர், ஒரு தேசியவாதி, தனித்துவங்களை விரும்புகின்ற ஒருவர் எப்படி பிற இனங்கள் சந்தேகிக்கின்றவராக இருக்க முடியும்? பிற சமூகத்தவர்களின் கண்ணீருடன் விளையாட முடியும்? பிற இனத்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல், தீர்ப்பதைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்கமுடியும்?

மஹிந்த ராஜபக்ஷவைப் பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அவர் யுத்தத்தை நடத்திய விதத்தைப் பற்றி, அதில் வெற்றியடைந்ததைப் பற்றி, இலங்கையில் நிலவும் ஜனநாயக நிலையைப் பற்றி எதிர்க்கட்சிகளை அவர் உடைத்துச் சிதறடித் திருப்பதைப் பற்றி, அவரை ஆதரித்தும், அனுசரித்தும் நிற்கின்ற கட்சிகளையும் அரசியல் தலைவர்களையும் அவர் நடத்துகின்ற விதத்தைப் பற்றி எல்லாம் எல்லோருக்கும் நன்றாகவே விளங்கும். சிலவேளை இதையெல்லாம் பிறர் விளங்கிக்கொள்ளாமல் இருக்கிறார்கள் என ஜனாதிபதி கருதிக்கொண்டிருக்கலாம்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ மிக அரிய வாய்ப்புகளையும் தன்னுடைய கையிலும் காலடிகளிலும் வைத்திருக்கிறார். போரை முடிவுக்குக் கொண்டுவந்து, அரசியல் தீர்வொன்றைக் காணக்கூடிய அரிய வாய்ப்பு இதில் ஒன்று. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை வைத்திருப்பது இன்னொன்று. யுத்தத்திற்குப் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்து, அவர்களை ஆறுதல்படுத்தி, அவர்களுக்கான மறுவாழ்வை ஏற்படுத்தி பாரபட்சமற்ற ஆட்சியை ஏற்படுத்தும் வாய்ப்பு மற்றொன்று.

இப்படிப் பல நல்வாய்ப்புக்களைத் தன்வசம் வைத்துள்ள ஒரு தலைவராக மஹிந்த ராஜபக்ஷ இருக்கிறார். மஹிந்த ராஜபக்ஷவை நன்றாகத் தெரிந்த சிலர் சொல்கிறார்கள், ''அவர் மிக நல்லவர். ஆனால், அவருடைய சகோதரர்கள் விரித்த வலையினாலும் அவரைச் சுற்றியுள்ளவர்களின் சகவாசத்தினாலும் அவர்-எதையும் செய்யமுடியாதவராக இருக்கிறார். அவர்களுடைய நிகழ்ச்சி நிரல்களின்படி இயங்கவேண்டியவராகிவிட்டார்'' என்று.

இது எப்படியோ நன்மை தீமைகளின் அறுவடையை மஹிந்த ராஜபக்ஷவே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவை அவரையே சென்றடையும்.

இத்தகைய ஓர் உள்ளடக்க நிலையுள்ள நாட்டின் தலைவருடன் சம்பந்தப்பட்டே சிறுபான்மையின மக்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியுள்ளது. தமது தேவைகளை நிறைவேற்றவும் வேண்டியிருக்கிறது.

இங்கேதான் சிக்கலே இருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷ என்னதான் தேசியவாத முகத்தைக் காட்டினாலும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் இயல்பை ஒத்தவர்தான்.

தனக்கு முன்னேயிருந்த எதிர்க்கட்சிகளையெல்லாம் உடைத்துச் சிதறடித்து, அவற்றின் இருப்பை நசித்துத் தன் காலின் கீழே போட்டவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கம் நாட்டைவிட்டே தப்பியோடினார். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையே பறிக்கப்பட்டது.

சிறுபான்மையின மக்களின் மேல் போரைப் பகிரங்கமாவே தொடுத்து இன வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருந்தார் ஜே.ஆர். அது மட்டுமல்ல, அதிகாரத்தின் அத்தனை கனிகளையும் சுவைத்துப்பார்த்தார். இதற்கெல்லாம் வசதியாக அப்போது ஜே.ஆருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்துமிருந்தது.

ஆகையால், மஹிந்த ராஜபக்ஷ தன்னை மீளமைத்துக் கொள்ளாதவரையில், நாட்டின் அமைதி, இயல்பு, அபிவிருத்தி, ஜனநாயகச் சூழல் என எவையும் கிட்டப்போவதில்லை. பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியிலிருந்த ஜே.ஆர். நாட்டில் பெரும் இரத்தக்களரி ஓடும் அரசியலையே உற்பத்தியாக்கியிருந்தார்.

ஜே.ஆரின் அரசியல் அணுகுமுறைகளின் விளைவுகளால் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களின் தலைவர்களும், ஆயிரக்கணக்கான மக்களும் அழிவுக்குள்ளாகியதோடு இலங்கையின் பொருளாதார வளங்களும் அழிந்தன.

பதினேழு ஆண்டுகால ஆட்சியை வைத்திருந்த ஐ.தே.க. நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இல்லை, பின்னர், அதனால் ஆட்சியைக் கைப்பற்றவும் முடியவில்லை. இப்போது அது கட்சியையே காப்பாற்றமுடியாமல் திணறிக்கொண்டி ருக்கிறது.

ஏறக்குறைய இதையொத்த நிலைமைகளில் அல்லது தன்மைகளுடன்தான் மஹிந்த ராஜபக்ஷவும் இருக்கிறார். விடாப்பிடியான நிலைப்பாடுகளுடன் மஹிந்த ராஜபக்ஷ விட்டுக்கொடுப்புகளைச் செய்வதன் மூலமே தன்னையும் தனது கட்சியின் எதிர்காலத்தையும் காப்பாற்றிக் கொள்ளமுடியும்.

மஹிந்த ராஜபக்ஷவின் பிடிவாதங்கள், தந்திரங்கள், அவருடைய அதிகாரம் ஆகியவற்றை எதிர்கொண்டே தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய எதிர்காலத்தைக் கண்டடைய வேண்டியுள்ளது.

இந்த நிலையில் நாம் சில கேள்விகளைக் கேட்கலாம். மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கவில்லை என்றால் தமிழ்பேசும் இனங்கள் அடுத்தாக என்ன செய்வர்?

மீள்குடியேறும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு அரசாங்கம் எதையுமே செய்யவில்லை என்றால் இதற்குப் பதிலான மாற்று முயற்சிகள் என்ன?

அரசியல் கைதிகள், காணாமற்போனோர் தொடர்பாக அரசாங்கத்தின் இதே மந்தப் போக்குத் தொடருமானால் இவற்றுக்கான தீர்வு என்ன? அதை எப்படிக் காண்பது?

உயர்பாதுகாப்பு வலயங்கள், இராணுவ வலயங்கள், அவசர காலச்சட்டம் போன்றவற்றை அகற்றவில்லை என்றால் அதற்கு என்ன செய்யலாம்? அதை எப்படிச் செய்வது?

இப்படி முக்கியமான எந்தப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதியோ அரசாங்கமோ எத்தகைய தீர்வுகளையும் முன்வைக்கவில்லையெனில் தமிழ் பேசும் மக்களின் கட்சிகளும் தலைவர்களும் எப்படி நடந்துகொள்வர், நடந்துகொள்ளக்கூடும் என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

சில கட்சிகள் அறிக்கைகளை விட்டுக்கொண்டேயிருக்கும். அந்த அறிக்கைகளில் கண்டனம், குற்றச்சாட்டு, எதிர்ப்பு என்ற அம்சங்கள் மட்டும் உணர்ச்சிப்பிரவாகத்தோடு இருக்கும்.

வேறு சில கட்சிகள் சொல்லவும் முடியாமல், சொல்லாமல் இருக்கவும் முடியாமல் கைகளைப் பிசைந்து கொண்டிருக்கும். கண்களை நேரே சந்திக்க முடியாமல் தாழ்ந்த புருவங்களோடு அவை காலத்தைக் கடத்தும்.

வெற்றிகளின் சிம்மாசனத்தில் ஜனாதிபதி கொலுவிருப்பார். ஆனால், வரலாறு ஜே.ஆருக்கு அளித்த பரிசையே, ஐ.தே.காவுக்கு அளித்த வெகுமதியையே ஜனாதிபதிக்கும் அவருடைய கட்சிக்கும் கொடுக்கும். ✱





உங்களின் உடலினை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?
மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக் மற்றும்
உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப்படுகறீர்களா......
இதோ! அதற்கான தீர்வு எமயிடமிருந்து...
நாம் இப்போது பம்பலப்பிட்டியிலும் (மிலாகிரி புனித போல் பள்ளிக்கு முன்பாக)
PUNCHING MAN
TOTAL TRAINER (TOTAL GYM)
HOME GYM
GYM BALL
YOGA MAT
COMMERCIAL GYM 4 STATION
WEIGHT LIFTING BENCH
SIT-UP BENCH
ரூ. 32,500/- விலிருந்து
AB PRO
PLASTIC DUMBBELLS FOR LADIES
FOOT TARGET
PUNCHING TARGET
ரூ. 13,900/- விலிருந்து
ரூ. 6,900/-
ரூ. 8,900/-
ELECTRONIC TREADMILL
WEIGHT BENCH
ரூ. 9,500/- விலிருந்து
BODY STRIDER
WEIGHT & BARS
WEIGHT LIFTING BELTS & GLOVES
PUNCHING BAG & PUNCHING GLOVES
ரூ. 43,500/- விலிருந்து
விளையாட்டு உபகரணம்
FOOT BALL
VOLLEY BALL
BASKET BALL
CRICKET HELMET
CRICKET BAT
BADMINTON RACKET
LEATHER BALL
CRICKET PAD
கி. 1 ரூ. 99/- விலிருந்து
ரூ. 12,900/-
ரூ. 450/- விலிருந்து
ரூ. 450/- விலிருந்து
ரூ. 750/- விலிருந்து
ரூ.1750/- விலிருந்து
CARROM BOARD
ரூ. 290/- விலிருந்து
TENNIS RACKET
TENNIS BALL
CRICKET GLOVES
THIGH PAD
TABLE TENNIS RACKET & BALL
ரூ. 1950/- விலிருந்து
ரூ. 295/- விலிருந்து
ரூ. 39/- விலிருந்து
MIKASA YONEX RDM Wilson AS CHAMP
VISA
HSBC
SEYLAN
BODY SCULPTURE
ESER MARKETING
ESER MARKETING (PVT) LTD
நாடளாவிய கிளைகள்
கோட்டை - தொ: 011 5731888
பம்பலப்பிட்டி - தொ: 011 2585330
நுகேகொடை - தொ: 011 5529888
மொறடுவை - தொ: 011 5528888
ஜா-எல - தொ: 011 5731730
களனி - தொ: 011 5552008
இராஜகிரி - தொ: 071 4440555, 5347632, 5357632
கண்டி - தொ: 081 5673333
குருநாகல் - தொ: 037 5672562
மாத்தளை - தொ: 066 5678886
கம்பஹா - தொ: 033 5628889
காலி - தொ: 091 5457777
மாத்தறை - தொ: 041 5629888
இரத்தினபுரி - தொ: 045 5678887
நீர்கொழும்பு - தொ: 031 5678880
களுத்துறை - தொ: 034 5629888
அம்பலன்கொடை - தொ: 091 5678888
அநுராதபுரம் - தொ: 025 5628889
கேகாலை - தொ: 035 5628889
பண்டாரவல - தொ: 057 5678889
முகவர்கள்
மட்டக்களப்பு - சனபில் ஸ்போட்ஸ், 362, பிரதான வீதி, காத்தான்குடி. தொ: 060 2652848, 077 3512341
மன்னார் - உஷா சேல்ஸ் சென்டர். தொ: 023 2222010
திருகோணமலை - அஜ்மீர் டிரேடர்ஸ், 186, என்.சி. வீதி. தொ: 026 2222702
வவுனியா - 'கணேஷ்' 100, ஸ்டேசன் வீதி, வைரவ புளியங்குளம். தொ: 024 4924775
யாழ்ப்பாணம் - 'யாழகம்' 568, ஹொஸ்பிடல் வீதி. தொ: 021 2225563
HOTLINE: 5652652
www.esermarketing.com

# குளிர் சீதோஷண நிலை ஆஸ்துமாக்கு காரணமா?

**கேள்வி:-** எனது மகன் வயது 10. அடிக்கடி அவருக்கு மூக்கு அடைக்கிறது. இது அவருக்கு கடந்த 4 வருடங்களாக இருந்து வருகிறது. கொதிநீரில் ஆவி பிடித்து வந்தால் ஓரளவு குறையும். ஒரு மருத்துவர் - மூக்கினுள் போட NASAL SPRAY தந்தார். தினமும் இரவில் இந்த மருந்தில் மூன்று சொட்டு விட்டு வருகின்றேன். மருந்து போடாவிடில் மூக்கடைப்பு ஏற்படுகிறது. மூக்கடைப்பு முழுமையாக குணமாக பரிகாரம் கூறவும்.

**பதில்:-** உங்கள் மகனுக்கு அடிக்கடி மூக்கடைப்பு ஏற்படக் காரணம் என்ன என்பது முதலில் அறியப்படவேண்டும். மூக்கினுள் ஏதாவது வளர்ச்சி ஏற்பட்டுள்ளதா அல்லது மூக்கு பிரிவுச் சுவர் ஒரு பக்கம் சாய்ந்துள்ளதா - DEVIATED NASAL SEPTUM அல்லது மூக்கடைப்பு பீனிச நோயினால் ஏற்படுகின்றதா என்பது ஒரு ENT வைத்தியர் எனப்படும் மூக்கு, தொண்டை, காது வைத்திய நிபுணரின் ஆலோசனை பெற்று கண்டறியப்பட வேண்டும். சில குழந்தைகளுக்கு ஒவ்வாமை காரணமாகவும் - சிலருக்கு மகரந்தத் துகள்கள் காற்றில் பரவியிருக்கும் காலத்தில் மகரந்த துகள்களின் ஒவ்வாமை காரணமாகவும் இப்படி ஏற்பட வாய்ப்பு உண்டு. HOUSE MITES அல்லது DUST MITES எனப்படும் நுண்ணங்கி வகைகள் குழந்தைகளின் மெத்தை, படுக்கை விரிப்புகள், தலையணை என்பவற்றில் இருப்பதாலும் இப்படி மூக்கடைப்பு ஏற்படலாம். எனவே, காரணத்தை சரியாகக் கண்டறியாமல் - கைக்கு கிடைத்த மருந்துகளை உபயோகிப்பது பலன்தராது. அத்துடன் ஆபத்தையும் விலைக்கு வாங்கும் நிலையை ஏற்படுத்தலாம். உதாரணமாக - NASAL SPRAY எனப்படும் மருந்தை எடுத்துக் கொள்ளலாம். மூக்கு துவாரத்தினுள்ளே ஏற்படும் வளர்ச்சிகளை - சுருங்கச் செய்து - இலகுவாக மூச்சு விட இந்த மருந்து உதவுகின்றது என்பது உண்மை. எனினும், தொடர்ந்து இந்த மருந்தை உபயோகப்படுத்தும் போது - அதாவது மருத்துவ குணமான சுருங்க வைத்தல் தன்மைமெல்ல மெல்ல குறைந்து பலன் தராமல் போகும். அதைவிட அப்படி ஏற்படும் பட்சத்தில் இந்த மருந்து மூக்கினுள் ஏற்படும் வளர்ச்சியை அதிகரிக்கவும் கூடும். எனவே, குழந்தையை முன்னர் கூறிய வைத்திய நிபுணரின் ஆலோசனை பெற அழைத்துச் செல்வது முக்கியம். அப்படி மூக்கினுள் விடக்கூடிய - பலன் தரக்கூடிய சொட்டு மருந்து SALINE DROPS எனப்படும் உப்பு கரைசல் மாத்திரமே.



**கேள்வி:-** வயது 35. ஆண். கடந்த 16 வருடங்களாக புகையிலை மெல்லும் பழக்கம் எனக்கிருக்கிறது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் எனக்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் உள்ளது. இந்த கெட்ட பழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்று எத்தனையோ தடவைகள் முயற்சித்துள்ளேன். ஒவ்வொரு தடவையும் எனது முயற்சி தோல்வியில்தான் முடிந்தது. இந்த பழக்கத்தை விடும்போது - எனக்கு தேவையின்றி ஆத்திரம் சினம் ஏற்படுகிறது. மூளை வேலை செய்யாமல் இருப்பது போல தெரிகிறது. பாதுகாப்பில்லாமல் இருப்பது போல் ஒரு மனத்தோற்றம் ஏற்பட்டு அச்ச உணர்வு ஏற்படுகிறது. இது தவிர எனக்கு பால் உணர்வும் குறைவாக ஏற்படுகிறது. எனக்கு சுவாசக் கோளாறு உண்டு. அடிக்கடி தும்மலும் அதிகப்படியான வியர்வையும் ஏற்படுகின்றன. கை கால்களில் சிறிது நடுக்கம் ஏற்படுகிறது. எனது இந்த கெட்ட பழக்கத்தை எப்படி விடுவது?

**பதில்:-** ADDICTION எனப்படும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகும் குணம் - அபின் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடுத்ததாக புகையிலை மெல்லுதல், புகையிலைத் துகள் கொண்டு மூக்குப்பொடி போடுதல் ஆகியவற்றால் தான் ஏற்படுகிறது. இந்தப் புகையிலை மெல்லுதல், பொடி போடுதல் என்பவற்றால் - வாய்ப்புற்று நோய், மூக்கு புற்று நோய் ஏற்படுவது என்பது ஒரு புறம் இருந்தாலும் இந்தப் பழக்கங்களை விட்டுவிட முடியாமல் திரும்பவும் அதே பழக்கத்துக்கு இழுத்துச் செல்லும் 'அடிமை' நிலையிலிருந்து மீள்வதுதான் பெரும் பிரச்சினை என்று கூறப்படுகிறது. புகையிலை எந்த விதமாக உபயோகப் படுத்தப்பட்டாலும் அது நரம்பு மண்டலத்தைத்தான் பாதிக்கின்றது. அதனால்தான் அதை உபயோகிப்பதை விடநினைத்ததும் நரம்புத் தளர்ச்சி கோளாறுகள் ஏற்படுகின்றன. ஆத்திரம், சினம், கை - கால் நடுக்கம், மனம் ஓரிடத்தில் நிலைபெறாமல் பதற்றம், பால் உணர்வு குறைபாடு, மனப் பேதலிப்பு என்பவை இந்த கோளாறுகளில் சில. ஆனால், இவற்றை சகித்து, கெட்ட பழக்கத்தை நிறுத்த - மன உறுதி தேவை. அறிஞர் அண்ணா கூட மூக்குப்பொடி பழக்கத்தை கைவிட பல தடவை முயன்றும் தோற்றுப்போய் இறுதியில் மூக்கு - தொண்டை புற்றுநோய்க்கு சரணடைந்தார் என்றால் நாம் எல்லாம் எங்கே? எந்த கெட்ட பழக்கத்தையும் மற்றவர்கள் சொல்லிக் கைவிட முடியாது. அந்த பழக்கம் உள்ளவர் - தானாகவே உணர்ந்து அறிந்து - உறுதிபூண்டால்தான் தீய பழக்கத்தை வெல்லும் முயற்சியில் முதலாவது வெற்றியைப் பெற்று விடுகிறார். அதன் பின் அவரது குடும்பம், நண்பர் என்போரின் அரவணைப்பு, ஆதரவு, ஊக்கம் என்பவை மீதி வெற்றிக்கு அடிகோலும். உங்களைப் பொறுத்த வரையில் நீங்கள் முதல்படி வெற்றியைப் பெற்று விட்டீர்கள். ஆமாம் - உங்கள் கெட்டபழக்கத்தை அறிந்துணர்ந்து அதை விடவேண்டும் என்ற எண்ணம் எப்போது ஏற்பட்டதோ - அன்றே உங்கள் வெற்றிப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. உங்கள் பயணம் வெற்றிபெற மேற்கூறிய உதவிகளுடன் கொஞ்சம் வைத்திய உதவியும் தேவை. பழக்கத்தை விடுவதால் ஏற்படும் கோளாறுகளுக்கு மருத்துகள் உள்ளன. அது தவிர உங்களை இந்தப் பயணத்தில் மனச்சோர்வு பெறாமல் ஊக்குவிக்க உளவலி ஆலோசனை, மனோ சிகிச்சை என்பவையும் தேவை. எனவே, ஒரு மருத்துவர் மற்றும் மனநோயியல் நிபுணர் ஆகியோரது ஆலோசனையையும் பெறவும் உங்கள் முயற்சி கட்டாயம் வெற்றிபெறும்.


**கேள்வி:-** பெண். வயது 37. எனக்கு கருப்பையில் கட்டி (FIBROIDS) இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. மாதவிலக்கு வந்து 10 நாட்கள் கழிந்த பின்னர் எனக்கு அடிவயிற்றில் வலி ஏற்படுகிறது. எனக்கு திருமணமாகியுள்ளது. இன்னும் கருத்தரிக்கவில்லை. கருப்பையில் கட்டி இருப்பதனால் தானா எனக்கு கருத்தரிக்கவில்லை? மருத்துவர் ஆலோசனையின் போது - இந்த கட்டிக்கும் நான் கருத்தரியாமல் இருப்பதற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னார். அது உண்மையா? என்னால் ஒரு குழந்தைக்குத் தாயாகும் பாக்கியம் உள்ளதா?

**பதில்:-** கருத்தரிப்பதற்கு ஆண், பெண் இருபாலனரின் உடலியல், ஒத்துழைப்பு அவசியம். தனியே, ஆண் அல்லது பெண்ணின் குறைபாடு மாத்திரம்தான் கருத்தரிக்க முடியாமல் இருப்பதற்கு காரணம் என்று பரிசோதிக்காமல் கூறமுடியாது. சுருக்கமாக சொல்லப்போனால் கருத்தரிப்பு அல்லது கருவுறுதல் (Fertilisation) என்ற செயலுக்கு ஆணிலிருந்து வீரியமான விந்தணுக்கள் தேவை. பெண்ணுக்கு முதிர்ச்சியடைந்த முட்டைகளை உற்பத்தி செய்யும் சூலகம் தேவை. ஆணின் விந்தணுக்களை பொருத்தமான நேரத்தில் சரியான வேளையில் இந்த முட்டைகள் சந்திப்பது அவசியம். இந்த சந்திப்பு நிகழ பெண்ணின் கருக்குழாய்கள் (Fallopian Tubes) தடை ஏதும் இல்லாது திறந்து இருக்க வேண்டும். குழாயில் ஆணின் விந்தணுவும், பெண்ணின் முட்டையும் சந்தித்து கருக்கட்டப்பட்டு, கருக்கட்டப்பட்ட முட்டை அதாவது கரு - குழாய் வழியாக கருப்பை சென்று கருப்பை சுவற்றில் பதியம் பெற கருப்பை நோயின்றி நலமாக இருக்க வேண்டும். எனவே, கருவுறாமல் இருக்கும்போது மேற்கூறிய செயல்கள் யாவும் சரியாக நடைபெறுகின்றனவா என்பது பரிசோதனைகள் மூலம் அறியப்பட்டிருந்தால் தவறு எங்கே என்பது கண்டறியப்படலாம். இவ்வளவு காரணங்களும் சரியாக செயற்பட்டாலும் மருத்துவ ரீதியில் எதுவித பிரச்சினை காணப்படா விடினும் ஒரு சில தம்பதியர் மலடாக இருப்பதுண்டு. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. சிலர் விதியிலும், சிலர் ஆண்டவனிலும் பழி போடுகின்றார்கள். இப்படி நூற்றுக்கு 2 வீதம்தான் நடைபெறுகிறது. எனவே உங்கள் கருப்பைக் கட்டிதான் நீங்கள் கருத்தரிக்க இயலாமல் இருப்பதற்கு காரணம் என்று உறுதியாக சொல்லமுடியாது. மாதவிலக்கின் பின்னர் ஏற்படும் வயிற்று வலிக்கு இந்தக் கட்டிதான் காரணம் என்றும் உறுதி செய்ய முடியாது. திருமணமாகி 18 மாதங்களில் பின்னரும் நீங்கள் கருவுற முடியாமல் இருப்பின் தகுந்த பெண் நோயியல் நிபுணரின் (Gynaecologist) ஆலோசனை பெற்று சில பரிசோதனைகள் செய்வது அவசியம்.

**கேள்வி:-** எனது தாயாருக்கு வயது 50. அவருக்கு ஆஸ்துமா நோய் உள்ளது. அவர் வசிக்கும் நாடு மிகவும் குளிரானது. அடிக்கடி தடிமல், காய்ச்சல் ஏற்படும். அப்படி ஏற்பட்டால் கட்டாயம் ஆஸ்துமா ஏற்படுகிறது. இந்த குளிர் சீதோஷணநிலைதான் ஆஸ்துமாவுக்கு காரணமா?

**பதில்:-** ஆஸ்துமா என்பது ஏதோ ஒரு காரணத்தின் நிமிர்த்தம் (Bronchial Tubes) விட்டம் குறுகி - காற்று போய் வர தடையாக இருக்கும் பிரச்சினை தான். இந்த சுவாசக்குழாய் குறுகுவதற்கு தூசி, குளிர்காற்று, மிக அதிக உடல் உழைப்பு என்பவை காரணமாக இருக்கும். எனவே இந்த காரணங்களை தவிர்ப்பதன் மூலம் ஆஸ்துமாவை வராமல் செய்யலாம். தூசி மற்றும் குளிர் காற்றுள்ள சூழ்நிலைகளுக்குள் செல்லும்போது வாயையும், மூக்கையும் மூடி கவசம் (Masks) அணிவதன் மூலம் ஆஸ்துமா ஏற்படுவதை தவிர்க்க முடியும். ஆனால், ஆஸ்துமா ஏற்படும் போது Inhalers என்கின்ற மருந்து உறிஞ்சிகளை கைவசம் வைத்திருந்து உடனடியாக உபயோகிப்பதன் மூலம் ஆஸ்துமாவின் உக்கிரத்தை குறைக்கலாம். இது தவிர Anti Inflamatory எனப்படும் வீக்கம் குறைக்கும் மருந்துகள் நிரப்பிய உறிஞ்சிகளை தினமும் உபயோகிப்பதன் மூலம் ஆஸ்துமா ஏற்படுவதைத் தவிர்க்கலாம். உங்கள் தாயாருக்கு ஏற்படும் மூச்சிரைப்பு ஆஸ்துமா காரணமாகத்தான் என்று மருத்துவர் கூறினாரா அல்லது நீங்களாகவே அனுமானித்துக் கொள்கின்றீர்களா? ஏனென்றால், ஆஸ்துமா போன்ற மூச்சிரைப்பு Wheezing குணங்களுக்கு - இதய சம்பந்தமான அல்லது நுரையீரல் சம்பந்தமான வேறு நோய்க் காரணிகளும் இருக்கலாம் என்பதை மனதில் கொள்ளவும். அவருக்கு முழுமையான மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுவது விரும்பத்தக்கது. ✱





**இலவச மருத்துவ ஆலோசனைகளை**

'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்

டாக்டர்

**எஸ்.அருள் ராமலிங்கம்**

நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை கொழும்பு - 14.



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

சில நாட்களின் பிற்பாடு, மீண்டு(ம்) உயிர்வலிக்கும் கணங்களின் ஊடாக உறவுகளைக் காண்பதில் சந்தோஷித்தபடி தொடர்கிறேன். இந்த இடைவெளிக்குள் எத்தனையோ மாறுதல்கள் வன்னி மண்ணிலும் அரகேறிவிட்டன. ஜனாதிபதியின் விஜயம் தொடக்கம் வவுனியாவுக்கு அசின் வருகை வரை!

இலவு காத்து ஏமாந்து போகும் கிளிகளாக, இப்போது எம் வன்னித் தமிழர்களும்... காத்திருந்து காத்திருந்து ஏமாற்றப்பட்டு விட்டார்கள். இந்தக் காத்திருப்புகள் எதற்காக?

அகதி முகாம்களில் உள்ளவர்கள் தாம் மீள்குடியேற்றப்பட வேண்டும், மீள்குடியேற்றப்பட்டவர்களின் வாழ்வாதார உயர்த்தப்பட வேண்டும். புணர்வாழ்வளிக்கப் படும் உறவுகள் விடுவிக்கப்பட வேண்டும் - இப்படி ஏராளமான அத்தியவசியமான கோரிக்கைகளோடு தான் காத்திருந்தார்கள்.

ஆனால், எதுவுமே முழுமையாக நிவர்த்தி செய்யப்படவில்லை.

அவர்கள் இவர்களென யார்யாரோ வந்து நோட்டமிட்டுக்கொண்டும், தீர்வுகாணவேண்டும் என சபதமிட்டபடியும் செல்வார்கள். 'ஏதாவது நடக்கும்...' என, எதிர்பார்க்கும் மக்களுக்கு எதுவுமே நடப்பதில்லை. தொடராக ஐம்பது வருடங்களைக் கடந்து நடந்து வருகிறது. வடக்கிற்கான வசந்தம் என வார்த்தைகள் மட்டுமே உலாவுகின்றன. மாறாக, செயலில் எதுவுமே நிகழ்வதாக தெரியவில்லை. இவைகளை கேட்காதவர்களே இல்லை. கேட்பவை அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே பயனற்றுப் போய்விட்டன. 'சமாளிப்பு' எனும் அஸ்திரத்தால், மக்களின் கேள்விகள் மூடப்படுகின்றன. என்ன செய்வது? சரி! விடயத்துக்கு வருவோம்.

இதுவரை, நான் சதாபொழுதும் சந்தித்துக் கொண்ட உறவுகளின் வலிகளை, இப்பகுதியில் அதிகமாகப் பதிவாக்கியிருக்கிறேன். இந்த வாரம்... என் பிறந்த மண்ணிலிருந்து ஒரு சகோதரனின் வலிகளை, அதாவது என் வகுப்புத் தோழியின் கணவரின் வலிகளை வரிகளாக்கித் தருகிறேன். வேதனை தான். என்ன செய்ய யாரால் முடியும்?

கடந்த ஜூன் மாதம் 7 ஆம் திகதி அளம்பில் மீளவும் மக்களால் தொடப்பட்டது. மீள்குடியேற்றப்பட்டது. மண்ணின் மைத்தர்கள் அனைவரும் கனத்த இதயத்தோடும், கசியும் விழிகளோடும் தம் இல்லங்களைத் தேடியது மனதை உருக்கியது. அந்நேரம்தான், அவர் என் கண்களில் தென்பட்டார். ஏற்கனவே பரிச்சயமானவர் என்பதால் என் கேள்விகளை உரையாடல்களாக உருமாற்றி வினவத் தொடங்கினேன்.

**எத்தனையோ நாட்கள் கடந்து திரும்பவும் சந்திக்கிறோம் எங்கள் மண்ணில். சரி! எப்படியிருக்கிறீங்கள்? அம்மா, வீட்டுக்காரர்கள் எங்கே?**

## மனைவியை இழந்தவரின் மனக்குமுறல் வரிகள்



''ஓமடா தம்பி, நீயும் நானும்... எங்கட சனமும் மாறினது போல... அளம்பிலும் மாறித் தானே கிடக்கு. நான் இப்ப தனிமரமடா. என்னுடைய அம்மா யாழ்ப்பாணத்தில் அண்ணி வீட்டில் இருக்கிறா. அண்ணாக்களும் அங்கேதான் இருக்கிறார்கள். நான் மட்டும்தான் இப்போது இங்கே வந்திருக்கிறேன். ஏனென்றால்....'' அத்தோடு நிறுத்தி விட்டு மிகுதி உனக்குத் தெரியாதா என்பது போல, என்னைப் பார்த்தார். எனக்கு நடந்த சம்பவத்தின் சுருக்கம் தெரியும். ஆனால், விரிவாக அறிவதற்கு மீண்டும் அமைதியைக் கலைத்துவிட்டு கேட்டேன்.

**சரி! அனுஷாவுக்கு என்ன நடந்தது? நீங்கள் அளம்பிலில் இருந்து பின்னர் எங்கே போனீர்கள்? விளக்கமாகச் சொல்லுங்களேன்?**

நீண்ட பெருமூச்சோடு தொடர்ந்தார். ''நான் அம்மாவுடனும், அனுஷா அவளின் வீட்டாருடனும் இடம்பெயரத் தொடங்கினோம். எங்களுடைய காதல் வாழ்க்கையில் முதலாவது பிரச்சினை இடப்பெயர்வு. அவள் அப்போது முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் ஏ.எல். (2009) படித்துக் கொண்டிருந்தாள். இடப்பெயர்ந்து நேரே வலைஞர்மடத்தில் தான் இருந்தோம். ஏதோ வசதியாக இருக்க முடிந்தது. அந்நேரம் சனம் அங்க இருக்கவில்லை. நாங்கள் இருந்த இடத்துக்கு கிட்டடவாகத் தான் அவளும், அம்மாவும், தம்பி, தங்கைகளும் இருந்தார்கள். நான் இடையிடையே அங்க போய் ஏதாவது வாங்கிக் கொடுத்துவிட்டு வருவேன். இப்படி இருக்கும்போதுதான் கட்டாயத்தின் பேரில் ஆட்களைப் பிடிக்கத் தொடங்கினார்கள். அவள் வீட்டில் அவள்தான் போக வேண்டியவள். எனக்கும் கொஞ்சம் பயம்தானே....! அம்மாவின் சம்மதத்தோடு அனுஷாவை திருமணம் செய்துகொண்டேன்.

முள்ளிவாய்க்காலும், வட்டுவாகல் வடக்குமே மக்களால் நிறைந்திருந்தன. ஒவ்வொரு பொழுதும் இரத்தமும் சதையும் தான் காட்சிகளாக எம்மைச் சூழ்ந்து தெரியும். நாங்கள் இரண்டு குடும்பமும் முள்ளிவாய்க்காலுக்குப் போய் கொட்டிலடித்து இருந்தோம். அவளுக்கும் அப்பா கிடையாது. நான்... பங்கரும் அடித்து, எங்களின் இரண்டு குடும்பத்தையும் அதுக்குள்ளேதான் வைத்திருந்தேன்.

அப்படித்தான் அன்றொரு நாள்... நான் சொல்லச் சொல்லக் கேட்காமல் பக்கத்துக் காணிக்கு தண்ணீர் அள்ளப் போனாள். அதுதான் அவளை நான் இறுதியாக உயிரோடு கண்டது. எங்கிருந்தோ பறந்து வந்த 'பிப்றி' ரவுண்ஸ் ஒன்று அவளின் நெற்றியைத் துளையிட்டபடி தலைக்குள்ளே புதைந்து நின்றது. ஐயோ! என்ர அனுஷா... கத்தி அழவேயில்ல... அப்படியே பேச்சில்லாமல் விழுந்திட்டாள். ஒரு பதினைஞ்சு நிமிஷத் தால... என்ர மடியில் அவளின் உயிர் போனது. இத்தனைக்கும் அவள், இன்னொரு அவதாரமாக நான்கு மாதம் என் வாரிசையும் வயிற்றில் சுமந்திருந்தாள். அவளோடு என் உலகமறியாத சிசுவும் பிரிந்து போனது...''

கீழே குனிந்தபடி கண்ணீர் சிந்தினார். நானும் அதன் பின்னர் எதுவுமே கேட்கவில்லை. வேறு கதைகளை புகுத்தி, சூழலை மாற்றிவிட்டேன்.

அனுஷா நான் முதலாம் தரம் படித்ததிலிருந்து ஏ.எல். வரை என் தோழியாக இருந்தாள். நல்ல திறமைசாலி. அவளின் பள்ளிக்கால நினைவுகள் என் நெஞ்சை நனைக்க, விடைபெற்றேன்.

**அளம்பில் மகன்**

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நடந்த அவலங்கள்

## இறந்த அப்பாவைப் புதைக்கவில்லை

எங்களது குடும்பத்தில் ஆறு சகோதரர்கள். இரண்டு ஆண்கள். நான்கு பெண்கள். மூத்த மூவரும் அக்காமார் அடுத்தது அண்ணா. அடுத்து நான். எனக்குப் பின்பு தங்கை. அக்காமார் மூவரும் திருமணம் செய்து விட்டார்கள். எங்களை விட்டு மாத்தளன் பகுதியில் வாழ்ந்தனர். நாங்களும் ஒரு அக்காவும் முள்ளிவாய்க்கால் பகுதியில் வாழ்ந்தோம்.

10.05.2009 அன்று நாங்கள் இருந்த இடத்தை விட்டு மக்கள் இடம்பெயர ஆரம்பித்தனர். நாங்களும் எங்களது உழவு இயந்திரத்தில் பொருட்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட போது வீதியில் கடுமையான வாகன நெரிசல் இருந்தது. ஆனால் நாங்கள் அன்று இடம்பெயரவில்லை.

அன்று எங்களுடன் இருந்த அக்காவையும் அண்ணாவையும் தங்கையையும் வேறு இடத்துக்கு அனுப்பிவிட்டு நானும், அம்மாவும் அப்பாவும் மாமாவும் மாமியும் எங்களது வீட்டு பொருட்களுடன் நின்றோம்.

நாங்கள் இருந்தது சேரன் வாணிபத்துக்கு அருகில். எங்களுடைய உழவு இயந்திரத்தில் எங்களுது பொருட்களை ஏற்றி கொண்டுபோய் சேரன் வாணிபத்துக்கு அருகில் விட்டிருந்தோம். அன்று சேரன் வாணிபத்திலும் பொருட்களை ஏற்றிக்கொண்டு இருந்தமையால், ஒருவர் வந்து சொன்னார், எங்களது உழவு இயந்திரத்தை ஓரமாக எடுத்து விடும்படி. அப்பா உழவு இயந்திரத்தை எடுத்து விடுவதற்காக சென்றார். அப்பா உழவு இயந்திரத்தை இயக்கிய சிறிது நேரத்தின் பின் ஷெல்கள் விழ ஆரம்பித்தன. என்னுடைய அம்மா எங்களது தறப்பாள் குடிசைக்குள் இருந்தபோது எறிகணைகள் அருகில் விழ சிறிய பங்கருக்குள் வந்து இருந்தார். அம்மா இருந்த தறப்பாள் குடிசைக்கு மேல் ஷெல் வீழ்ந்து வெடித்தது.

அப்பா அம்மாவைத் தேடி குடிசைக்குள் வந்து பார்த்துவிட்டு அம்மா இல்லை என்று எண்ணிக்கொண்டு குடிசையை விட்டு வெளியே வந்தார். வெளியில் வந்ததும் அப்பா அருகிலும் ஷெல் வீழ்ந்தது. அப்பாவின் காலில் ஷெல் பட்டு கால் முறிந்து விட்டது. நான் அம்மாவுக்குச் சொன்னேன் ''அப்பா காயப்பட்டு விட்டார். வாங்கோ போய் பார்ப்போம்.'' என்று. அப்போதும் ஷெல்கள் விழுந்த வண்ணம் இருந்தன. நானும் அம்மாவும் மாமியும் அழுதுகொண்டு, அப்பாவைப் பிடித்துத் தூக்கி ஒரு சிறிய பங்கருக்குள் வைத்தோம். நான் துணி ஒன்றை எடுத்து எனது அப்பாவின் காயத்துக்கு கட்டினேன். அப்பொழுது அப்பா சொன்னார் ''நான் தப்ப மாட்டேன். நீங்கள் பங்கருக்குள் போங்கோ'' என்று. சிறிது நேரத்தில் அப்பாவின் உயிர் பிரிந்தது. இது அம்மாவுக்குத் தெரியாது.

ஷெல் ஓய்ந்தால் கூட அம்மா வேறு இடம் போவதற்கு வரமாட்டார் என்று எண்ணி, நான் அம்மாவிடம் அப்பாவின் மரணம் குறித்து சொல்லவில்லை. நான் அம்மாவுக்கு சொன்னேன். ''அப்பாவை வைத்தியசாலைக்கு கொண்டு போகிறார்கள். நீங்கள் வாங்கோ நாங்கள் பங்கருக்குள் போய் இருப்போம்'' என்று. தான் வரமாட்டேன் என்று அம்மா கத்தினார். நான் கையில் பிடித்து இழுத்துக்கொண்டு பங்கருக்குள் போனேன். ஷெல் அடி ஓய்ந்ததும் நான் அம்மாவையும் மாமியையும் மாமாவையும் கூட்டிக் கொண்டு என் சகோதரங்கள் இருக்கும் இடத்துக்குப் போனேன். அங்குதான் அம்மாவுக்கு அப்பா இறந்த செய்தியைச் சொன்னேன்.

எனது அப்பா உயிர் விடும்போது பார்த்தேன். அதன் பின் அவரின் உடலுக்கு என்ன நடந்தது என்று இன்று வரைக்கும் தெரியாது.

**எம். நிசாந்தன்**

# கூட்டணியைக் காத்துக் கொள்ள கலைஞர் கடும் முயற்சி



தமிழகத்தில் காங்கிரஸ் - தி.மு.க கூட்டணியை உடைத்தே தீருவது என ஜெயலலிதா கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுவது வெளிப்படையாகவே தெரியும் விடயமாகும். கடந்த வாரம் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் கூட காங்கிரசை அவ்வளவாக ஜெயலலிதா சாடவில்லை. இளங்கோவனையும், சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்தையும் உசுப்பேற்றி விட்டு பலனை எதிர்பார்த்திருக்கும் ஜெயலலிதா காங்கிரஸுடன் மோதமாட்டார் என்பது தெரிந்த விடயமே. அ.தி.மு.க கூட்டணியில் ஏற்கனவே வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் உள்ளபோதும் அவை தேவையில்லை; காங்கிரஸே வேண்டுமென பிடிவாதம் பிடிக்கும் ஜெயலலிதாவின் நிலைப்பாடு அந்த தோழமைக்கட்சிகளுக்கு வெறுப்பையே தருகிறது. பி.ஜே.பியோ காங்கிரஸ் - அ.தி.மு.க அணி அமைந்துவிட்டால் தங்கள் கட்சி அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர முடியாது போகுமே என்ற அங்கலாய்ப்பில் உள்ளது. கடைசிநேரம் வரை அ.தி.மு.க - காங்கிரஸ் அணி அமையாது விட்டால் பி.ஜே.பியுடன் அணி சேர ஜெயலலிதா முடிவு செய்யலாம் என்ற நப்பாசை பி.ஜே.பிக்கு உண்டு.

கடந்த வாரமும் இளங்கோவன் தி.மு.கவைத் தாக்கிப்பேசி இருப்பதுடன் அவர் பேசுவது சரியே என்பது போல் `மத்திய அமைச்சர் சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம் வேறு வக்காலத்து வாங்கியிருப்பது பலரது புருவங்களையும் உயரவைத்திருக்கிறது. சிதம்பரம் ஜெயலலிதாவுக்கு பரமவைரி என்பது யாவரும் அறிந்ததே.



1993இற்குப் பின் இன்றுவரை சிதம்பரம் ஜெயலலிதாவுடன் முகம் கொடுத்துப் பேசவே இல்லை என்பது கவனிக்கத்தக்கது. மத்திய அமைச்சராக நரசிம்மராவின் அமைச்சரவையில் இருந்த சிதம்பரம் காவிரி பிரச்சினையில் தமிழகம் சார்பாக பேசவில்லை என்பதற்காக அன்று ஆட்சி செய்த அ.தி.மு.கவினர் அவரது காருக்கு கல்வீச்சு நடத்தினர். நரசிம்மராவ் அரசில் உள்ள சகல காங்கிரஸ் அமைச்சர்களும் பதவி விலகவேண்டுமென ஜெயலலிதா பகிரங்கமாக அறைகூவல் விடுத்தார். ராமமூர்த்தி, ரங்கராஜன் குமாரமங்கலம் போன்றோர் விலகினர். ஆனால், சிதம்பரம் மறுத்திருந்தார். இதன் பின் 1996 இல் மீண்டும் நரசிம்மராவ் ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்த போதும் மூப்பனார் அதை எதிர்த்து தமிழ் மாநில காங்கிரஸை அமைத்தார். அப்போது சிதம்பரமும் அவருடன் இணைந்தமை குறிப்பிடத்தக்கது. 2001 தமிழக சட்டசபை தேர்தலில் மூப்பனாரும் ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்தபோது ஜெயலலிதாவுடன் இனி உறவே இல்லை என்பதில் உறுதியாக நின்ற சிதம்பரம், தமிழ் மாநில காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை என்ற கட்சியை தொடங்கினார். பின்பு 2004 இல் காங்கிரஸ் - தி.மு.க கூட்டணி உருவானதும் நிம்மதிப் பெருமூச்சு விட்ட சிதம்பரம் மீண்டும் காங்கிரஸுக்குத் திரும்பினார். இவ்வாறு 17 வருடமாக ஜெயலலிதாவை எதிர்த்தே அரசியல் செய்த அந்த சிதம்பரத்தின் மகனா இப்படிப் பேசுவது என கலைஞரே நொந்து போயிருக்கிறாராம். சமீபகாலம் வரை கூட சிதம்பரம் அடிக்கடி சென்னை வரும்போதெல்லாம் கலைஞரை சந்திப்பதை வழக்கமாக கொண்டிருந்தார். சிதம்பரம் - கலைஞர் உறவு வலுவாக இருக்க சிதம்பரத்தின் மகன் துள்ளுவது எதனால் என்ற கேள்வி எழுவது இயல்பே.

இளங்கோவனுக்கு வாய்ப் பூட்டுப் போட காங்கிரஸ் தலைமை இன்னும் இணங்காதது குறித்து தி.மு.க வட்டாரம் கவலையடைந்திருக்கிறது. காங்கிரஸ் கூட்டணியை தக்கவைக்க கலைஞர் படும்பாடு பெரும்பாடு என்பது சொல்லத் தெரியவேண்டியதில்லை. சென்ற வாரம் சேலத்தில் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் வீட்டுத் திருமணத்தில் கலந்துகொள்ள கலைஞரும் அமைச்சர்களும் சேலம் வந்திருந்தனர். மறுநாள் ஆகஸ்ட் 20 ஆம் திகதி ராஜீவ் காந்தியின் பிறந்த தினமாகும். எனவே, சகல அமைச்சர்களையும் தமிழக அரசு தலைமை செயலகத்தில் நடக்கும் 'நல்லிணக்க நாள்' விழாவில் கலந்துகொள்ள இரவோடிரவாக சென்னை புறப்பட்டுச் செல்லும்படி கலைஞர் உத்தரவிட்டாராம். ஸ்டாலின், பேராசிரியர் அன்பழகன் உட்பட சகல அமைச்சர்களும் விழாவில் பங்கேற்றனர். இளங்கோவன் வேறு காலை வாருகிறார். இத்தருணத்தில் காங்கிரஸ் கட்சியினர் கோபமடையும் படி நடந்துவிடக்கூடாதே என்ற சிரத்தை கலைஞர் செயலில் வெளிப்பட்டது. இது தவிர இளங்கோவனுக்குப் பதிலடியாக எதுவும் பேசக்கூடாதென தி.மு.க பேச்சாளர்களுக்கு விசேட வாய்ப்பூட்டும் கலைஞரால் போடப்பட்டுள்ளதாம். அதாவது, தி.மு.கவைப் பெறுத்தவரை நேர்மையாக கூட்டணியைக் காப்பாற்ற போராடுவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

-எஸ்.சுரேந்திரஜித்-

அப்படி காரியம் மீறினால் கம்யூனிஸ்ட்களை தமது அணியில் சேர்க்கலாம். பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ப்பது தி.மு. கவினருக்கு இஷ்டமான விடயமல்ல. ஒரு கூட்டணிக் கட்சியாக - தோழமைக் கட்சியாக பா.ம.கவை சமாளிப்பதை விட காங்கிரசை சமாளிப்பது இலகு என்பது கலைஞருக்கு நன்கு தெரியும். பா.ம.கவின் கட்சிமாறும் கைங்கரியம் தான் மட்டும் கரை சேரும் சுயநலம் என்பவை எல்லைமீறுவதாக தி.மு.கவினர் நினைக்கின்றனர். ஏற்கனவே மீண்டும் தி.மு.க - பா.ம.க முறுகல் வருவதற்கு அறிகுறியாக பா.ம.கவின் காடுவெட்டி குரு மீது பழைய வழக்குகள் தூசுதட்டி எடுக்கப்பட்டுள்ளன. ஆக, பா.ம.க - தி.மு.க உறவென்பது வரும் சட்டசபை தேர்தலில் சாத்தியமில்லை என்றே தெரிகிறது. ஆனால், காங்கிரஸ் கட்சியும் அ.தி.மு.க. அணிக்குப் போய்விட்டால் கூடுதல் தொகுதிகளை கொடுத்தாவது பா.ம.கவை இழுப்பது என தி.மு.க தரப்பு முடிவு செய்திருக்கிறது. கூட்டணிகள் இன்னும் உறுதியாகாததால் தொண்டர்கள் உச்சக்கட்ட குழப்பத்தில் உள்ளனர்.

விஜய்காந்த்தை இழுக்க காங்கிரஸ், அ.தி.மு.க இருதரப்புகளுமே முயன்று வருகின்றன. காங்கிரஸ் தலைமையில் மூன்றாவது அணி அமைப்போமென பா.ம.க. கூறிவருவது மேலும் குழப்பத்தை அதிகரித்திருக்கிறது. மூன்றாவது அணிக்கு தான் தலைமை தாங்கத் தயாரென விஜயகாந்த் அறிவித்துள்ளார். அதாவது, காங்கிரஸ், தே.தி.மு.க, பா.ம.க. அடங்கிய அணிக்கு முதலமைச்சர் வேட்பாளராக இருக்கத் தயாரென அவர் கூறி உள்ளார். எனினும், காங்கிரஸோ, பா.ம.கவோ இது பற்றி வாய் திறக்கவில்லை. தி.மு.கவிற்கு வெற்றி அவ்வளவு லேசாக கிடைக்காது என்பதையே இந்த கால நிகழ்வுகளும் எடுத்துக் காட்டுகின்றன. திருச்சிக் கூட்டத்தில் ஜெயலலிதா கூறிய அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க கலைஞர் முயன்றுள்ளார். விவசாயிகளுக்கு தி.மு.க. அரசு எதுவுமே செய்யவில்லை என கூறப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதிலாக மறுநாளே இலவச தண்ணீர் பம்ப் செட்டுகளை விவசாயிகளுக்கு வழங்கும் அறிவிப்பை கலைஞர் வெளியிட்டார். மறுநாள் சுதந்திரதின விழாவில் கலைஞர் பேசும் உரை முதலே தயாரிக்கப்பட்டதாம். திடீரென திருச்சிக் கூட்டத்தில் ஜெயலலிதாவின் முழக்கத்தைக் கேட்டுவிட்டு இரவோடிரவாக இலவச பம்ப் செட் திட்டம் இடைசெருகப்பட்டதாக கூறப்படுகிறது. அ.தி.மு.க. முகாமில் உற்சாகம் கரை புரண்டு ஓடினாலும் அதை மோப்பம் பிடித்து சரிப்படுத்தல்களை செய்ய தி.மு.க. தரப்பு முந்திக்கொண்டு நிற்பது கவனிக்கத்தக்கது. முன்பு ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது தன் பதவிக்கு ஆபத்து வருகிறது என்பதை கடைசிவரை உணர வில்லை. அரச ஊழியர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர், தொழிளாளர்கள் என பலதரப்பையும் ஒருங்கே பகைத்துக் கொண்டு அதைப்பற்றிச் சற்றும் கவலைப்படாமல் ஜெயலலிதா தேர்தலைச் சந்தித்தார். அவர் பதவியை இழந்தார். இந்த முறை கலைஞரோ மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் ஜெயலலிதா எழுப்பும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் பதிலாக மக்கள் நல்வாழ்வு செயற்பாடுகளை முன்னெடுக்க முயன்றுவருகிறார். எனவே, அவரது ஆட்சி தேறிவிடவும் வாய்ப்பு உள்ளது. களத்தில் என்ன நடக்கிறது என்பதை கலைஞர் கவனத்தில் கொண்டே நடந்துவருகிறார். ஜெயலலிதா இந்த விடயத்தில் தவறு செய்ததனாலேயே தோற்றார் என்பது கவனிக்கத்தக்கது. எவ்வாறாயினும் ஒரு வலுவான ஜனநாயகத்தின் பிரதான எதிர்க்கட்சி என்பது மக்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று என்ற உண்மை ஜெயலலிதாவின் கோவை, திருச்சி கூட்டத்தில் வெளிப்பட்டது. ஆளும் கட்சி செய்யும் அராஜகம் பிரதான எதிர்க்கட்சியில் வெளிக்கொணரப்படும் போது அதற்கு மக்களின் அமோக ஆதரவு உண்டென்பதும் தெளிவானது. திருச்சிக் கூட்டத்தில் தி.மு.கவை தாக்கிய ஜெயலலிதாவின் உரையின் பெரும்பகுதி அடித்தட்டு மக்களின் பிரச்சினைகள் பற்றியதாகவே இருந்தது. எனவே, தி.மு.கவினர் இந்தப் பிரச்சினைகளை நிச்சயமாக உதாசீனம் செய்யமுடியாது. ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்ற நிலை தி.மு.கவுக்கு ஏற்பட்டுள்ளது. ஆக, பிரதான எதிர்க்கட்சியாக

> விஜய்காந்த்தை இழுக்க காங்கிரஸ், அ.தி.மு.க இருதரப்புகளுமே முயன்று வருகின்றன. கங்கிரஸ் தலைமையில் மூன்றாவது அணி அமைப்போமென பா.ம.க. கூறிவருவது மேலும் குழப்பத்தை அதிகரித்திருக்கிறது. மூன்றாவது அணிக்கு தான் தலைமை தாங்கத்தயாரென விஜயகாந்த் அறிவித்துள்ளார்.


அதிமுக இருப்பது தி.மு.கவை நல்வழியில் செல்ல நிர்ப்பந்திப்பதாக உள்ளது. ஜனநாயகத்தில் பிரதான எதிர்க்கட்சியின் பிரதான கடமையும் இதுவே.

இதற்கிடையில் கோவை, திருச்சி இரு கூட்டங்களையும் தங்கள் கட்சியின் சொந்தமானதாகக் காட்டிய அ.தி.மு.க. அடுத்தடுத்த கூட்டங்களுக்கு கூட்டணிக் கட்சிகளை அழைக்கத் திட்டமிட்டுள்ளது. ம.தி.மு.கவினர் மற்றும் கம்யூனிஸ்ட்கள் போன்றோர் தம்மை கோவை, திருச்சி மாநிலங்களுக்கு அழைக்காதது குறித்து கவலை கொண்டிருந்தனர். எனினும், அ.தி.மு.கவினர் தமது சொந்தப்பலம் என்ன என்பதை ம.தி.மு.க, கம்யூனிஸ்ட் போன்ற தோழமைக் கட்சிகளுக்கு மட்டுமன்றி காங்கிரஸுக்கும் முதலில் எடுத்துக் காட்டிவிட்டு பின்பு கூட்டணிக் கட்சிகளையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று அ.தி.மு.க தரப்பு கருதுகிறதாம்.

இதற்கிடையில் இளங்கோவனின் அதிரடிக்கு காங்கிரஸ் தலைமை கட்டுப்பாடு விதிக்காதது குறித்து பலமான ஊகங்கள் அடிபடுகின்றன. அ.தி.மு.கவுடன் கூட்டணி அமையாவிட்டாலும் கூட தி.மு.க கூட்டணியில் காங்கிரஸுக்கு அதிக இடங்களைப் பெற்றுக்கொள்ள இளங்கோவனின் அதிரடி உதவும் என காங்கிரஸ் கருதுவதாகத் தெரிகிறது. இப்போதுள்ள நிலவரப்படி தி.மு.க 165 இடங்களிலும், காங்கிரஸ் 60 இடங்களிலும் போட்டியிடலாம் எனத் தெரிகிறது. இந்த 60ஐ இன்னும் அதிகரிக்க கங்கிரஸ் விரும்புகிறது. ◆

# செருப்புச் சாமியார்

திருட்டு சாமியார், சுருட்டு சாமியார், குட்டி சாமியார், குவாட்டர் சாமியார் வரிசையில் செருப்பு சாமியார்.



தமிழ்நாடு ஈரோட்டை ஒட்டி இருக்கும் கொடுமுடி அருகே மரவாபாளையத்தில் 'அருள் புரியும்' மூதாட்டியான இந்த சாமியாரின் தோட்டத்து பங்களாவுக்கு செய்தியாளர்கள் சென்றபோது பக்தர் ஒருவருக்கு செமத்தியான செருப்படி விழுந்துகொண்டு இருந்தது. 'ஐயோ... அம்மா' என்று பரவசமாகக்கதறிக் கொண்டு இருந்தவர், ஒரு கட்டத்தில் மயங்கி விழவே சொந்தக்காரர்கள் கைத்தாங்கலாக தூக்கிச் சென்றார்கள். இந்த செருப்படிக்குக் காணிக்கை 500 ரூபாயாம்!


முன்னவரின் நிலைமையைப் பார்த்து கதிகலங்கிப் போனவராக மனைவி சகிதம் வந்து நின்றார் அடுத்த பக்தர். பயத்தினால் அவருக்கு கால் நடுங்கிக்கொண்டு இருந்தது. சாமியார் தன் கையில் இருந்த செருப்பைத் தூரப் போட்டதும் ஒரு தட்டில் பழங்களுடன் 100 ரூபாய் கட்டு ஒன்றை வைத்துவிட்டு தனது கஷ்டங்களை தன் சகதர்மிணியை இழுத்துக்கொண்டு நைஸாக நழுவத் தொடங்கினார்.

ஆனால், அதைக் கவனித்துவிட்ட செருப்படி சாமியார் சத்தமாக, ''டேய், எங்கே ஓடப்பார்க்குறே..? வந்து என் முன்னாடி சம்மணம் போட்டு உட்காரு.'' என்று கட்டளை பிறப்பிக்க... பரிதாபமாக வந்து அமர்ந்தார் அந்த ஆசாமி. கூடுதல் ஆவேசமான சாமியார், அந்த பக்தரின் தலையில் இருந்த கொஞ்ச நஞ்ச முடியைப் பிடித்து உலுக்கியபடி, 'பளார், பளார்' எனக் கன்னத்தில் அடிக்கத் தொடங்கினார்.

''ஐயோ இனிமே தப்பு பண்ண மாட்டேன் சாமி!'' என்று அவர் அலற... சாமியோ, ''இல்லடா! நீ தொடர்ந்து பண்ணுவே... பண்ணிட்டு திரும்பவும் எங்கிட்ட வந்து செருப்படி வாங்குவ. உன்கிட்ட காணிக்கைக் காசு வாங்குறதே பாவம்'' என்று காறித் துப்பி அனுப்ப... ஓடியே போனார் அவர். பின்னாலேயே ஓடினார் மனைவி. அவர் அப்படி என்ன தப்பு செய்தார் என்று அன்றைக்கு வீட்டில் உயர்மட்ட விசாரணை கட்டாயம் நடந்திருக்கும்.

காத்திருப்போர் பட்டியலில் இருந்த வேறு ஒரு தம்பதியிடம் செய்தியாளர்கள் பேச்சுக் கொடுத்தனர். ''என் பெயர் கந்தசாமி. இவ என் பொண்டாட்டி வசந்தி. குமாரபாளையத்தில் இருந்து வாறோம். இந்த சாமியைப் பற்றிக் கேள்விப்பட்டு போன வாரம் நான் மட்டும் வந்திருந்தேன். என்னை நிறையவே திட்டுனாங்க. தண்ணிப் போத்தலால் அடிச்சாங்க. வாங்கிட்டு வீட்டுக்குப் போயிட்டேன். மறுநாள் வீட்டு வாசல்ல ஒரு குரங்கு வந்து உட்கார்ந்து இருந்துச்சு. எங்க ஏரியாவுலேயே குரங்கு கிடையாது. ஆச்சரியமாப்போச்சு. இரண்டு நாளில் ஒரு அதிசயம் நடந்தது. சொத்துப் பிரச்சினையில நீதிமன்றில் என் பக்கம் சாதகமா தீர்ப்பு சொல்லிட்டாங்க. நன்றி சொல்லத்தான் இவளையும் கூட்டிட்டு வந்து இருக்கேன்!'' என்றார் உணர்ச்சி பொங்க!

செய்தியாளரின் கண் முன்பாகவே கந்தசாமியை விளக்குமாறால் விளாசினார் சாமியார். எதுவும் பேசாமல் தலை குனிந்து பவ்யமாக அடி வாங்கிக்கொண்டவரின்



சொல்லத் தொடங்கினார் பக்தர்.

சாமியாரோ, ''பொத்துடா வாயை, ஊதாரிப் பயலே (வார்த்தையை லேசாக மாற்றிப் போட்டிருக்கிறோம்)... வயித்துக்கு சோத்தை திங்குறியா... இல்லாட்டி வேற ஏதும் திங்குறியா... கிளியாட்டம் இருக்கிற இவளை விட்டுட்டு, குரங் காட்டம் இருக்கிற ஒருத்தியுடன் தினமும் படுக்குறியே...'' என்று வசை பொழிய... அருகில் இருந்த அவரது மனைவி ''ஓ, அப்படியா சங்கதி'' என்று பத்ரகாளியாய் மாறி தனது கணவரை முறைக்க ஆரம்பித்து விட்டார்.

வரிசையில் அடுத்ததாக அமர்ந்து இருந்த ஒரு வழுக்கைத் தலை ஆசாமி என்ன நினைத்தாரோ... 'வா பிள்ள... அப்புறமா அருள் வாக்கு கேட்போம்' என்றபடி முகத்தில் கருணையாக காறி துப்பிய சாமியார், அடுத்து செய்தது அதிர்ச்சியிலும் அதிர்ச்சி. இவருடைய மனைவி வசந்தியை அருகில் அழைத்தவர், பட்டென்று அவரது கழுத்தில் இருந்த தாலியைப் பிடுங்கி வீசினார். அதையும் ஏற்றுக்கொண்டு காணிக்கை கொடுத்துவிட்டு வந்தார்கள் அந்த தம்பதியர்.

''என்னங்க இதெல்லாம்..?'' என்று செய்தியாளர்கள் கேட்க, ''அட, உங்களுக்குப் புரியலியா? தாலி பாக்கியத்துக்கு வரவிருந்த தோஷம் நீங்கியே போச்சு...'' என்றார்கள் சந்தோஷமாக!

சாமியிடம் அடுத்தடுத்து அடி வாங்கி வந்த ஈரோட்டை சேர்ந்த பழனிசாமி, பெரியசாமி ஆகியோர், ''சாமிக்கு சிக்கன் பிரியாணியும், சிக்கன் வறுவலும் வாங்கி வந்தோம். நல்லா சாப்பிட்டார்!'' என்றார்கள்.

''என் சட்டைப் பொக்கெட்டில் இருந்த செல்போனையும் பணத்தையும் தூக்கி எறிஞ்சிருச்சு. இவரு கழுத்துல போட்டு இருந்த தங்கச் சங்கிலியைப் பிடுங்கி தனது கழுத்துல போட்டிச்சு''. சாமி அடிச்சதை எல்லாம் தாங்கிக்கிட்டேன். ஆனால், திடீர் என்று என் உயிர் நாடியைப் பிடித்து நசுக்குனப் போதுதான் வலி தாங்காமக் கத்திட்டேன். சாமி நம்ம மேல கை வச்சாலே நமக்கு திருஷ்டி எல்லாம் கழிஞ்சுடும் என்று சொல்றாங்க!'' என்றபடியே கெந்திக் கெந்தி நடந்தார் அதில் ஒருத்தர். சாமிக்கு அருகில் பணிவிடை செய்தபடி இருந்த பூர்ணிமாதேவி என்பவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், ''இந்த பங்களா என்னுடையதுதான். இங்கே எனக்கு 50 ஏக்கர் தோட்டம் இருக்கு. 15 வருடத்துக்கு முன் இந்த இடத்தை வாங்கினேன். சாமி இங்கே வந்து இரண்டு வருஷம்தான் ஆகுது. அதுக்கு முன்னாடி தோட்டத்துக் கிணறு வறண்டு கிடந்தது. சாமி வந்த மறுநாளே கிணத்துல ஊற்று வந்துடுச்சு. இரண்டு நாளில் குடிநீர் பைப்பும் போட்டுட்டாங்க. அன்றிலிருந்து சாமியை எங்கேயும் போக விடாம இங்கேயே வைத்துப் பார்த்துக்கிறேன்.

சாமி இரண்டு வேளைதான் சாப்பிடுவாங்க. மினரல் வாட்டர்தான் குடிப்பாங்க. குளிக்கவே மாட்டாங்க. ஆனாலும் அவங்க மேல மல்லிகைப் பூ வாசம் வீசும். என்னையும் அப்பப்பக் கூப்பிட்டு அடிப்பாங்க. வாங்க, நீங்களும் வந்து நாலு அடி வாங்கிட்டுப் போங்க. நீங்க நினைச்சது எல்லாம் நடக்கும்.!'' என்று செய்தியாளர்களையும் இழுக்க ஆரம்பித்தார் பூர்ணிமாதேவி.

# ஒட்டிய இரட்டையர்

தாய்லாந்தில் பிறந்த இரண்டைப் பெண் குழந்தைகளையே படத்தில் காண்கிறீர்கள். இருவரும் ஈரல் பகுதியில் ஒட்டிப் பிறந்தவர்கள். இவர்களைப் பிரிப்பதற்காக எதிர் வரும் 23 ஆம் திகதி சத்திர சிகிச்சை நடைபெற இருக்கிறது. ஒட்டிப் பிறந்த இந்த இரட்டையர்கள் கடந்த 14 ஆம் திகதி தமது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினர். படத்தில் தந்தையுடன் இவர்கள் காணப்படுகின்றனர்.





பிரபல பூங்கா விடுதியில், ரீமா சென், ஸ்ரேயா, த்ரிஷா கூட்டணி அடிக்கடி பார்ட்டி என்று கூடிக் கும்மி அடிக்கிறார்களாம். நள்ளிரவு வரை நீளும் இந்த ஆட்டத்தைப் பார்க்கவே ஸ்பெஷல் கூட்டம் கூடுகிறதாம்.

சல்மான் ருஷ்ரியின் 'மிட் நைட் சில்ரன்' நாவல் படமாகிறது. ஆங்கிலத்தில் இந்தப் படத்தை இயக்க இருக்கிறார் தீபா மேத்தா. இதில் பாலியல் தொழிலாளியாக நடிப்பது கங்காணா ரணவத்.

# 6 மாதம் உறக்கம் விழிப்பு

வருடத்தில் 6 மாத காலம் தொடர்ந்து உறங்கி 6 மாத காலம் தொடர்ந்து விழித்திருக்கும் விநோத நோயொன்றால் நபரொருபர் பாதிக்கப்பட்டுள்ளார்

லி ஷிமிங் ( 74 வயது) என்ற நபரை உறக்கத்திலி ருக்கும் 6 மாத காலம் அவரது குடும்பத்தினரே சிரமப்பட்டு பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவர் தன்னிலை மறந்து உறக்கத் தில் இருக்கும் காலகட்டத்தில் அவர் பட்டினியால் இறந்து விடாமலிருக்க அவரை அமர வைத்து அவரது வாயினூடாக சிறிது சிறிதாக சூப் உணவை அவரது குடும்பத்தினர் பருக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விழித்தெழுந்தால் தொடர்ந்து 6 மாத காலத்திற்கு சிறிதும் உறங்காது இருப்பார். அவர் வீதிகளில் அலைந்து திரிவதிலும் தொலைக்காட்சி பார்ப்பதிலும் இரவைக் கழிப்பாராம்.

# மாப்பிள்ளை

சிக்னலுக்காக நின்றுகொண்டிருந்த ஒரு பஸ் ஸின் அருகில் ஸ்கூட்டரை நிறுத்தினான் கவின்.

அப்போது பஸ்ஸின் ஜன்னல் ஓரமாக அமர்ந்திருந்த ஒரு பெரியவர் வெற்றிலையைத் துப்பினார்.

கவினின் புதுச் சட்டை பார்க்கப் பரிதாபமாக ஆனது.

பின்னாலிருந்த பாலு, ''ஏய்... பெரிசு கொஞ்சமாவது அறிவு இருக்கா? இப்படி பண்ணிட்டியே...'' கண்டபடி திட்டினான்.

''சரி... விடு மச்சான்... தப்பு எம் மேலதான். நாம் தான் அவர் துப்பும் போது வந்துட்டோம்'' சமாதானப்படுத்தினான் கவின்.

பெண் பார்க்கும் படலம். பெண்ணை கவினுக்கு மிகவும் பிடித்து விட்டது. ஆனால், மாப்பிள்ளை சரியான கறுப்பா இருக்காரே என்று எல்லோரும் முணுமுணுப்பது கவினின் காதுபடவே கேட்டது. நெளிந்து கொண்டிருந்தான். அப்போது...

''மாப்பிள்ளைக்கு என்ன குறைச்சல் கறுப்பா இருந்தாலும் மனசு தங்கம்'' குரல் வந்த திசையை திரும் பிப் பார்த்தான் கவின். அங்கே பஸ்ஸில் துப்பிய பெரிசு தனது பொக்கை வாயில் புன்சிரிப்பைத் தவழ விட்டு கண் சிமிட்டியது.



ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் தற்பொழுது துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ இந்த ஆணைக்குழு முன் அளித்த சாட்சியம் ஊடகங்களினால் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. புலிகளுக்கு எதிரான போரில், பின்னணியில் நின்று செயற்பட்ட முக்கியஸ்தர் கோட்டாபய ராஜபக்ஷ. வெள்ளைக் கொடியுடன் சரண் அடைய வந்த புலிகளின் தலைவர்களை சுட்டுக்கொல்ல உத்தர விட்டதாக அவர் மீது போர்க் குற்றச்சாட்டுக்களும் உள்ளன. இந்த நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ ஆணைக்குழு முன்னிலையில் அளித்த சாட்சியம் முக்கியத்துவம் அடைகிறது.

பாதுகாப்புச் செயலாளர் தனது சாட்சியத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பு எப்படியான சர்வ வலிமைகளும் கொண்ட ஓர் அமைப்பாக இருந்தது என்பதை தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். அதே சமயம் இப்படியான அமைப்பை இலங்கை அரசபடைகள் தோற்கடித்ததை நாட்டின் அனேக மக்கள் மறந்து விட்டனர் என்றும் வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

புலிகள் இயக்கம் இவ்வளவு சக்தி வாய்ந்த இயக்கமாக வளர்வதற்கு காரணமாக இருந்த காரணிகள் என்ன என்பதை அவர் தனது சாட்சியத்தில் தெரிவிக்கத் தவறி விட்டார். புலிகள் இயக்கம் போன்று மீண்டும் ஓர் இயக்கம் எழுச்சி பெறத் தடுக்க வேண்டிய அவசியத்தையும் தெரிவிக்க மறந்துவிட்டார்.

புலிகள் இயக்கம் குறித்து ஆணைக்குழு முன்

சுடர் ஒளி

29, ஓகஸ்ட் - 04, செப்டெம்பர், 2010

85, ஜெயந்தமல் லிமாறாச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## செவிடன் காதில் ஊதிய சங்கு

கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தவற்றில் முக்கியமானவை வருமாறு:-

* விடுதலைப்புலிகள் வன்னி மற்றும் கிழக்கின் பெரும்பாலான பகுதிகளில் 30 ஆயிரம் போராளிகளை வைத்திருந்தனர்.

* புலிகள் அமைப்பு ஏனைய போராளிகள் அமைப்புகளைப் போன்று சிறு அமைப்பு அல்ல மிகவும் வல்லமை பொருந்திய பரிணாம வளர்ச்சியைக் கொண்ட ஓர் அமைப்பு.

* புலிகளின் ஆயுத பலம் இலங்கை அரச படைகளின் ஆயுத பலத்துக்கு சமமானதாகவே இருந்து. இலங்கை அரச படைகளால் பயன்படுத்தப்பட்ட சகல ஆயுதங்களும் புலிகளிடமும் இருந்தன.

* 30 மில்லி மீற்றர் துப்பாக்கிகள், 120 மில்லி மீற்றர் மோட்டார் துப்பாக்கிகள் உள்ளிட்ட கனரக ஆயுதங்களை புலிகள் பயன்படுத்தி உள்ளனர்.

* கடற்புலிகள், கரும்புலிகள், வான் புலிகள் என்று புலிகள் தமது படைகளை வகுத்து மிகவும் பலம் வாய்ந்த படை அணியை வைத்திருந்தனர்.

* தற்கொலைத் தாக்குதலுக்கென்றே புலிகள் ஒரு பிரிவை (கரும்புலிகள்) அமைத்திருந்தனர். ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் எண்ணிக்கைக்குச் சமனான தற்கொலைத் தாக்குதல்களை இந்தப் பிரிவினர் குறுகிய காலப் பகுதியில் மேற்கொண்டுள்ளனர்.

* இலங்கை இராணுவம் மீது சகலவிதமான வழிகளிலும் பதிலடித் தாக்குதலை நடத்தக் கூடிய சகல ஆயுதங்களையும் புலிகள் வைத்திருந்தனர். அவற்றை இயக்குவதில் அவர்கள் வல்லமை பெற்றிருந்தனர்.

* இலங்கை அரச படைகளால் இதுவரை பயன்படுத்தாத புதிய ஆயுதங்கள் கூட புலிகளிடம் பாவிக்கப்படாத நிலையில் இருந்தன.

இப்படி புலிகளின் பலத்தை விலாவாரியாக விவரித்திருக்கிறார் கோட்டாபய ராஜபக்ஷ.

புலிகளின் 30 வருட கால வளர்ச்சியில் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன என்பதே இன்று விவாதிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் ஆகும்.

புலிகள் இயக்கம் தோன்றியதுக்கான காரணிகள் இன்னும் இருப்பதால் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு துரிதமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியா உட்பட சில நாடுகள் கோருகின்றன. ஆனால் இவைகள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குதான்.




# ஒரு பகல் நோக் கதை

- வே.தில்லைநாதன் -

நிலைக்கண்ணாடியில் தனது மிடுக்கான அழகிய தோற்றத்தை ஒரு நிமிடம் கண்கொட்டாமல் பார்த்து மிகுந்த திருப்தியுடன் புன்னகை பூக்கிறான் சந்திரன். அவனது கை அவனை அறியாமலே மீசையை வருடுகிறது.

சந்திரனது நீண்டகாலக் கனவு அண்மையில் நிறைவேறியிருந்தது. இப்பொழுது அவன் காவல்துறை இளநிலை அதிகாரி. மாணவப் பருவத்திலிருந்தே அவனுக்கு பொலிஸ் சேவையில் இணைய வேண்டும் என்ற கனவு இருந்தது. இப்பொழுது அது நிறைவேறிவிட்டா லும் இன்னொரு விருப்பம் அவன் மனதில் மொட்ட விழ்கிறது. அவன் பெயரும் புகழும் பெறவேண்டும்; கடமை வீரனாகத் திகழவேண்டும்.

பொலிஸ் சேவையில் அவனது அளவற்ற நாட்டம் காரணமாக நல்லதோ கெட்டதோ காவல்துறை சம்பந்தப்பட்ட அனைத்து செய்திகளையும் அவன் விடாது வாசித்துவிடுவான். தலைசிறந்த அதிகாரிகளது வீரதீரச் செயல்கள் அவனது கவனத்தை ஈர்க்கும் போதெல்லாம் தன்னை அவர்களது இடத்தில் வைத்துப் பார்த்துக் கற்பனைக் கோட்டைகள் கட்டுவான்; பரவசமடைவான்.

வெளிநாடுகளில் காவல் துறையினர் பெரியவர், சிறியவர், ஆள்பவர், ஆளப்படுபவர் என்ற பேதமின்றி யாவரையும் சமமாக நடத்துவது பற்றி வாசித்து அவன் வியப்படைந்திருக் கிறான். ஒரு நாட்டுப் பிரதமர் செய்த ஒரு சிறிய குற்றத்திற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்தும் இன்னோரு நாட்டில் வேகமாகக் காரோட்டிய உயர் பொலிஸ் அதிகாரி மடக்கப்பட்டமை குறித்தும் அவன் ஆச்சரியம் அடைந்தி ருக்கிறான். அதே வேளை நீக்ரோ இனத்தவர் வெள்ளையினப் பொலிஸாரினால் இம்சைக்குள்ளாவதையறிந்து வேதனையுமடைந்திருக்கிறான்.

எமது இளநிலை அதிகாரி, திறமை மிக்க அயல்நாட்டு அதிகாரிகளைப் போல் பெயரெடுக்க வேண்டுமென்ற ஆசை உந்தித்தள்ள, வேகமாக செயற்பட ஆரம்பித்திருக்கிறான். இன்றைய பொழுதில் அவன் பெற்ற அனுபவங்களே இந்தப் பகல் நோக் கதை.

வேலைக்குப் போகும் வழியில் தனது தீட்சண்யமான பார்வையை அங்குமிங்கும் செலுத்திக்கொண்டு ஜீப்பில் பயணிக்கும் சந்திரனது கண்களில் நிறுத்தக்கூடாத இடத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு வாகனம் தென்படுகிறது. ஜீப்பை நிறுத்தி வைத்து அவன் அந்த வாகனத்தை அணுகுகின்றான். சாரதியை அவன் கண்டிக்கிற போது அவர் சிவில் உடை யில் இருக்கும் ஓர் உயர் பொலிஸ் அதிகாரி என்பது அவனுக்குத் தெரிகிறது.

விறைப்பாக நின்று அவருக்கு சல்யூட் போடும் சந்திரன் அவரை நோக்கி, ''சேர், இது நோ பார்க்கிங் ஏரியா. நீங்கள் வாகனத்தை மற்றப் பக்கம் கொண்டு போக வேண்டும். இல்லையெண்டா நான் உங்களிலை நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.'' என்று பணிவாக அதே நேரம் உறுதியுடன் எச்சரிக்கிறான். அந்த அதிகாரியும் சிரித்தவாறே, ''ஐ ஏம் ஸொறி'' என்று கூறியவாறு காரைக் கிளப்பவே தானிருப்பது கனவுலகமா அல்லது நனவுலகமா என்று திகைப்புக்குள்ளாகும் சந்திரன் உள்ளார்ந்த உவகையுடன் தனது காவல் நிலையத்தை நோக்கிப் பயணத்தைத் தொடர்கிறான்.

காவல் நிலையத்தில் ஓர் இளைஞன் தலையில் காயத்துக்குக் கட்டுப்போட்டபடி சந்திரனின் வருகைக்காகக் காத்திருக்கிறான். அவனருகில் ஓர் இளம் பெண்ணும் இன்னும் இரு இளைஞர்களும் நிற்கின்றனர்.

விசாரணையின்போது முதல் நாள் இரவு ஒரு கேளிக்கை விடுதியில் இளைஞனின் காதலியோடு ஓர் ஆளும் கட்சிப் பிரமுகரின் மகன் சேட்டை விட முயன்றதாகவும் அதைத் தட்டிக் கேட்க முயன்ற இளைஞனும் நண்பர்களும் தாக்கப்பட்டதாகவும், காவல்நிலையத்தில் அதிகாரிகள் இளைஞனது முறைப்பாட்டை ஏற்க மறுப்பதாகவும் தெரியவருகிறது.

சக உத்தியோகத்தர்களின் புத்திமதியை அசட்டை செய்து புகாரைப் பதிவுசெய்யுமாறு பணித்தபின் சந்திரனது ஜீப் அந்த அரசியல் பிரமுகரது இல்லம் நோக்கி உறுமியவாறு பறக்கிறது. அரை மணி நேரத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் திரும்புகிறது ஜீப். வெற்றி பெருமிதத்துடன் ஜீப்பிலிருந்து குதிக்கிறான் சந்திரன்.

இன்றைக்கு இவ்வளவும் போதும் என்ற மனத்திருப்தியுடன் சந்திரன் ஓய்வாக தேநீர் அருந்திக்கொண்டிருக்க அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத தொலைபேசி அலருகிறது. யாரோ ஒரு மந்திரியின் ஆட்கள் ஓர் அரச அதிகாரியை மரத்தில் கட்டி வைத்திருக்கிறார்களாம் என்கிறது தொலைபேசி.

தேநீர் குடித்தது பாதி, குடிக்காதது பாதியாக ஜீப்பில் தாவி ஏறுகிறான் சந்திரன். குறித்த இடத்தில் சனத்திரள் தெரிகிறது. சந்திரனும் ஏனைய காவலர்களும் அவசர அவசரமாக இறங்குகிறார்கள்.

கட்டப்பட்டிருக்கும் ஆளுக்கருகில் சென்று நிற்கும் சந்திரன் அனுதாபத்துடன் ''உங்களை யார் கட்டிப் போட்டது'' என்று கேட்டான்.

''என்னை யாருமே கட்டேல்லை, இன்ஸ்பெக்டர். என்னை நான்தான் கட்டினேன்.'' என்று அமைதியாக கூறுகின்றார் அந்த மனிதர்.

''என்ன! உன்னை நீயே கட்டினியா?'' என்ற நகைச்சுவை நடிகர் விவேக்கின் பாணியில் அலறும் சந்திரன் அதிர்ச்சியில் பின்னுக்கு இரண்டடி எடுத்து வைக்கிறான்.

ஏதோ சந்தேகம் அவன் மனம் உலுப்பவே கேள்விக் கணைகளைத் தொடுப்பதற்காக அவன் வாயை அசைக்கிறான். எனினும், அதிர்ச்சியில் உறைந்துபோன அவனது நா அசைய மறுக்கிறது. ''கொக்... கொக்... கொக்... கொக்...'' என்ற ஒலிமட்டும் எழும்புகிறது.

''என்னடா கோழி மாதிரி கொக்கரிக்கிறா? கனவு கினவு கண்டியா? இந்தா இந்தத் தேத்தண்ணியைக் குடி. பின்னேரம் நாலுமணிக்கு மேலையாச்சு.'' சந்திரனின் தாய் அவனை உலுப்புகிறாள்.

திடுக்கிட்டுப் புரண்டு படுக்கும் சந்திரனின் மார்பிலிருந்து மடித்தபடி ஒரு பத்திரிகை கீழே விழுகிறது. அதில் பொலிஸ் அராஜகங்கள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. பட்டாளத்திலிருந்து தப்பியோடிய இளம் பெண் மீது பொலிஸ் நிலையத்தில் பாலியல் வல்லுறவு, பல்கலைக்கழக மாணவன் பொலிஸ் தாக்குதலில் மரணம், மருத்துவமாது கொலைச் சந்தேகநபரான வைத்தியர் எளிதில் பிணையில் செல்லக்கூடிய வகையில் பொலிஸார் திட்டமிட்டுத் தவறான குற்றச்சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்ததாக நீதிமன்றில் வழக்கறிஞர் செய்த முறையீடு போன்ற பொலிஸ் தரப்பினால் இழைக்கப்பட்ட பல குற்றச் செயல்கள் கட்டுரையில் விவரிக்கப்பட்டிருந்தன.

நித்திரைச் சோர்வுடன் கண்ணாடி முன்நின்று தலைவாருகிறான் சந்திரன். கனவில் கண்ட அதே கண்ணாடி; அதே முகம் ஆயினும் இந்த முகம் சோபையிழந்து காணப்படுகிறது. அவனது வண்ணக் கனவுகள் இனித் தொடர வாய்ப்பில்லை என்பது அவனுக்கு நன்றாகவே புரிகிறது. *

## பதவி வெற்றிடம்

★ பத்திரிகையாளர்கள்
★ பயிற்சிப் பத்திரிகையாளர்கள்
★ பக்கவடிவமைப்பாளர்கள்

கல்வித் தகைமைகள், அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். கொழும்பைச் சூழ வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:
ஆசிரியர்,
சுடர்ஒளி வாரமலர்,
இல. 85, ஜெயந்த மல்லிமராச்சி
மாவத்தை,
கொழும்பு - 14.

வன்னியைப்பற்றி ஒரு தவறான அபிப்பிராயத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெறுகின்றன.

யுத்தத்திற்குப் பின்னரான வன்னியை தமிழ் ஊடகங்கள் மட்டும் கொஞ்சம், உண்மைத்தன்மையோடு வெளிப்படுத்தியுள்ளன.

இதிலும், எந்த தமிழ் ஊடகத்தின் முன்னணி ஊடகவியலாளர்களோ, பிரதம ஆசிரியர்களோ வன்னிக்குச் சென்று நிலைமைகளை அவதானிக்கவில்லை.



# ஏன் இந்த வஞ்சனை?



என்றாலும், தமிழ் ஊடகங்கள் வன்னி நிலைமையை ஓரளவுக்கு பகிரங்கப்படுத்தியுள்ளன. இதைத் தவிர்த்துப் பார்த்தால், வேறு எந்தத் தரப்பும் வன்னி நிலைமையை சரியாக வெளிப்படுத்தவில்லை.

அரசியற்கட்சிகளைப் பொறுத்தவரை வன்னி மக்களின் வாழ்வுடன் இணைந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் சில வேலைத்திட்டங்களைச் செய்துவருகின்றன.

ஆனாலும் இந்தப்பணிகள் மிகச் சிறிய அளவிலானதே. அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுவதாக எந்தப் பணியும் இதுவரை எவராலும் மேற்கொள்ளப்படவில்லை.

வன்னியில் அரசாங்கமும் சில வேலைத்திட்டங்களைச் செய்கிறது. இதற்காக ஜனாதிபதி தலைமையில் ஒரு அமைச்சரவைக் கூட்டமே கிளிநொச்சியில் நடந்தது.

ஆனால், வன்னியைப் பற்றி, வன்னி மக்களின் நிலைமையைப் பற்றிப் பேசாமல் அமைந்தது அந்த அமைச்சரவைக் கூட்டம்.

இவ்வளவுக்கும் போரினால் முற்றாகப் பாதிக்கப்பட்டது வன்னி. மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் வன்னிச் சனங்கள். ஆகவே, வன்னியின் மீளமைப்பு, புனர்வாழ்வுக்கு நிச்சயமாகச் சிறப்பு நிதி ஒதுக்கீடும், சிறப்பு வளப்பகிர்வும், சிறப்புக்கவனிப்பும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், அப்படி எதுவுமே நடக்கவில்லை. யுத்தம் முடிந்த பிறகு, மீள் குடியேற்றம் ஆரம்பமாகி ஏறக்குறைய பத்து மாதங்கள் கடந்துவிட்ட பின்பும் எந்த முன்னேற்றமும் இல்லாமலே வன்னி இருக்கிறது.

கூரையில்லாத வீடுகள், கூரையில்லாத பாடசாலைகள், புழுதி பறக்கும் தெருக்கள், பசிதீராத வயிற்றோடு சனங்கள், இருள் மயமாகியிருக்கும் ஊர்கள்... இப்படித்தானிருக்கிறது வன்னி.

ஆனால், ஏ9 வீதியை மட்டும் - வீதியின் அருகிலுள்ள கட்டடங்கள், இடங்களை மட்டும் கொஞ்சம் மினுக்கி வைத்திருக்கிறது அரசாங்கம். இது ஓர் அப்பட்டமான தந்திரம். அரசாங்கம் மட்டுமல்ல, அரசாங்க அதிகாரிகளும் கூட ஏ9 வீதிக்கு அப்பாலான வன்னியை வேறாகவும், ஏ 9 வீதிக்கு அண்மையான வன்னியை வேறாகவும்தான் வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல தொண்டர் நிறுவனங்களும் கூட அநேகமாக இப்படித்தான் நடந்து கொள்கின்றன.

இதற்கு நல்ல உதாரணம் கிளிநொச்சி கனகபுரம் ம.வி, கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளிநொச்சி ம.வி போன்றவை திருத்தப்பட்டுள்ளன. ஒப்பீட்டு அளவில் இந்தப் பாடசாலைகளுக்கும் சில வளங்களும் வழங்கப்பட்டுள்ளன. சில இடங்களுக்கு மின்சாரமும் கூட வழங்கப்பட்டிருக்கிறது.

இதெல்லாம் கட்டாயம் செய்யவேண்டியவையே; அவசியமானவையே. ஆனால், இதைப் போல பூநகரியிலும், முழங்காவிலிலும், அக்கராயன், கோணாவில், மல்லாவி, வற்றாப்பளை, புன்னை நீராவி, ஒட்டுசுட்டான், பாண்டியன் குளம், வெள்ளாங்குளம் போன்ற இடங்களிலும் ஏதாவது செய்யலாமே.

அங்கே கூரையில்லாத பாடசாலைகள், மரங்களின் கீழே நடக்கும் முன்பள்ளிகள், வீடில்லாத மனிதர்கள் இப்படி பலவற்றை வரிசைப்படுத்திக் கூறலாம்.

ஏ9 வீதியிலும் மாங்குளம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் தனியார் நிறுவனங்களும், வங்கிகளும், இராணுவத்தினரின் உணவு விடுதிகளும் சற்று மினுக்கத்தைக் கொடுக்கின்றன. யுத்தத்திற்கு பின்னர், வன்னிக்குப் படையெடுத்திருக்கும் தனியார் நிறுவனங்களின் முகவர் நிலையங்களும் ஒரு மேலதிக மினுக்கத்தை அளிக்கின்றன.

ஆனால், இவற்றின் மூலம் வன்னியில் அபிவிருத்தி ஏற்பட்டுவிடப் போவதுமில்லை. வன்னியில் அபிவிருத்தி நடந்துவிட்டதாகவும் இல்லை.

ஆனால், வன்னியின் வழியாக பயணிக்கும் ஒருவர் ஏ9 வீதியின் இரண்டு பக்கங்களையும் பார்த்தால் துரிதகதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடப்பதாகவே கருதுவார்.

இதில் படைமுகாம்களின் விரிவாக்கத்தையும் அவர் அவதானிக்கக்கூடும். படை விரிவாக்கத்தின் மத்தியிலும் வங்கிகளின் செயற்பாடுகள், சிவில் நிர்வாகம், வர்த்தக நிலையங்களின் எழுச்சி போன்றவற்றை அவர் அவதானிக்கலாம்.

ஆனால், ஏ9 வீதியை விட்டு 200 மீற்றர் உள்ளே இறங்கினால் இரத்தமும் சீழுமாகச் சிதம்பியிருக்கும் ஒரு பழைய புண்ணைப்போல வன்னி அப்படியே வேதனைகளோடும் வலிகளோடும் இருக்கிறது.

இந்தத் துயரத்தை எப்படிப் போக்குவது? இந்த நிலையை எப்படி மாற்றுவது?

வன்னி என்பது எப்போதும் இப்படித்தான் இருக்கிறது. ஓர் அரச உத்தியோகத்தர் வன்னிக்கு - முழங்காவிலுக்கோ செம்மலைக்கோ கடமைக்குச் செல்வதானால் அவர் காலை 11 மணிக்குத் தான் போய்ச் சேருவார். பாடசாலை ஆசிரியர்கள், நிருவாக உத்தியோகத்தர் எல்லோரும் இப்படித்தான் இந்தப்பகுதிக்குப் போய்ச் சேருகிறார்கள்.

இது அவர்களின் தவறல்ல. இந்த உத்தியோகத்தர்கள் அந்தந்த இடங்களில் தங்குவதற்கும், இலகுவாக - விரைவாகப் பயணிப்பதற்கும் எந்த வசதிகளும் செய்யப்படவில்லை.

ஆகையால் ஏ 9 வீதிக்கு அப்பாலான வன்னி என்பது வேறு. ஏ9 வீதியின் ஓரமாகத் தெரியும் வன்னி என்பது வேறு. வீதியோரமாக நின்று பார்த்தால் எல்லாமே வியப்பாகத்தானிருக்கும் வீழ்ந்தவர்கள், சடுதியாக எழுந்து நிமிர்கின்றார்கள் என்று.

இந்தமாதிரியான நிலை அபாயகரமானது. உண்மையை மறைக்கும் இன்னோர் முயற்சிக்காகவே இதைக் கருதவேண்டியுள்ளது. இது தொடர்பாக அந்தந்த பிரதேச மக்களும்

**-ஜோசவ் தயாளன்-**

மக்கள் அமைப்புகளும் தெளிவடைய வேண்டும். கவனமாகவும் இருக்கவேண்டும்.

இதற்கு நிச்சயமாக மாவட்ட ரீதியிலான திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் குழுக்கள் அவசியமானவை. அப்படியான குழுக்கள் இருந்தால், இந்த அபிவிருத்தித் திட்டங்களை பரவலாக்கலாம். தனியே ஒரு பகுதியில் மட்டும் குவிக்கப்படும் வளங்களையும் திட்டமிட்டு உருவாக்கப்படும் மினுக்கங்களையும் தடுக்க முடியும்.

ஆகவே, பிரதேசத்தின் உள்ளூர் அமைப்புகளுக்கு இப்போது முக்கியமான ஒரு பணியுள்ளது. இந்தப் பணியை இந்த அமைப்புகளும் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் செய்யவில்லையென்றால், அபிவிருத்தி என்ற பெயரில் நடக்கும் பாரபட்சப்படுத்தல்கள், தந்திரங்கள் போன்றவற்றால் ஏமாற்றப்பட நேரிடும். பாதிப்புகளைச் சந்திக்க வேண்டியும் வரும்.

ஆகையால், அபாய மணியொலியாக இதைப் புரிந்துகொண்டு விரைந்து செயற்படவேண்டிய அவசியம் பொறுப்புள்ள ஒவ்வொரு தரப்புக்கும் உள்ளது.

இதை இந்தத்தரப்புகள் புரிந்து கொண்டால் எழுச்சி; இல்லையென்றால் வீழ்ச்சியே. ★

# முரண்பாடுகளும் நெருக்கடிகளும்

மனித நாகரிகமானது முரண்பாடுகளும் நெருக்கடிகளும் கொண்டதாகும். பழமையானதும் இயற்கையானதுமாகும். மானிட நாகரிகங்கள் முழுவதிலும் காணப்படுகின்ற புனித நூல்களிலும் பூசனைக்குரிய எழுத்துக்களிலும் முரண்பாடுகளும் நெருக்கடிகளும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

முரண்பாடுகள் நெருக்கடிகள் என்ற வார்த்தைகளை நினைக்கும் போது பல விடயங்கள் தோன்றுகின்றன.

கடந்த நூற்றாண்டு கண்ட மிகப் பெரிய முரண்பாடும் நெருக்கடிகளும் உலக மகா யுத்தங்களாகும்.

அந்த இரண்டு உலக மகா யுத்தங்களும் உலகை அதன் இறுதிக்கட்டத்திற்கே கொண்டு வந்து விட்டன என்று துணிந்து கூறலாம். உண்மையில் இவை நெருக்கடிகளின் விளைவு என்றும் கூறலாம்.

**-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-**

பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார நெருக்கடிகள் எமக்குள் இருக்கின்றன.

நாம் அனைவரும் அதீத சக்தி படைத்தவர்களல்ல என்பதால் எமது வாழ்விலும் நிறுவனங்களிலும் ஏற்படும் முரண்பாடுகளையும் நெருக்கடிகளையும் எவ்வாறு கடக்கப்போகின்றோம் என்பதே எமது பிரச்சினையாகின்றது.

சண்டை, வேலை நிறுத்தம், சச்சரவு, ஆதிக்கம், அநீதி, கொடுமை, கோப மூட்டல், விரக்தி, திருப்தியின்மை,




என்பவை. இவை முரண்பாடு என்ற வார்த்தையின் மூலம் வெளிப்படுகின்ற எண்ணங்களும் உணர்வுகளுமாகும்.

இரு சக்திகளுக்கிடையே அல்லது இரு வேறுபட்ட கொள்கைகளுக்கிடையே ஏற்படும் சண்டை, சச்சரவு, போராட்டம் என்பனவே முரண்பாடு என ஒக்ஸ்போர்ட் அகராதி விளக்குகின்றது.

குறிப்பிட்ட நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைய இடையூறாக விருக்கும் தடங்கல்கள், தடைகள் போன்ற சக்திகளையும் முரண்பாடு குறிக்கின்றது.

எமது சக்திகளைத் தடைப்படுத்தும் - விரயமாக்கும் - அழிக்கும் காரணியாகவும் முரண்பாடு அமைகின்றது. முரண்பாடானது எமது சக்தியை இழக்கச் செய்கின்ற - உறிஞ்சக் கூடிய ஒரு காரணியாகும். மேலும் தமது தன்மைக்கும் தீவிரத்திற்கும் அமைய தனி மனிதர்களை, குழுக்களை, சமூகங்களை முரண்பாட்டினது விளைவுகள் பாதிக்கின்றன.

நெருக்கடியின் வரைவிலக்கணம்

நெருக்கடி என்பது நம்பிக்கையற்ற - வசதியற்ற நிலை, கவலை; சாதாரணமாகச் செயல்படுவதற்கோ அல்லது மறுதலிப்பதற்கோ முடியாத தன்மை என்பனவற்றைக் குறிக்கும்.

இது பெரும்பாலும் நோக்கங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் எதிரான சக்திகளையும் காரணிகளையும் எதிர்கொள்வதற்கான சக்தியற்ற நிலைமையைக் குறிக்கும்.

நெருக்கடி என்பதனை இடைநிறுத்த நிலை, நிச்சயமற்ற தன்மை, நன்மைக்கு அல்லது தீமைக்கான திருப்புமுனை என ஒக்ஸ்போர்ட் அகராதி வரைவிலக்கணப்படுத்துகின்றது. பெரும்பாலும் இது மோசமான நிலைமையையே குறிக்கும். நெருக்கடியின் விளைவுகள் அவற்றின் தன்மை, செறிவு என்பவற்றுக்கிணங்க தனிமனிதர்களை - குழுக்களை - சமூகங்களைப் பாதிப்படையச் செய்கின்றன.

முரண்பாடுகளும் நெருக்கடிகளும் பலவகைகளில் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியும் பிணைந்தும் இருக்கும்.

உங்களது

அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்

குடும்பப் பிரச்சினைகள்,

சந்தேகங்கள் தொடர்பான

கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்

உளநல ஆலோசகர்

**ஏ.எச்.ஏ.ஹுஸைன்.**

கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:

" A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR .

ஈமெயில் :

abdulhussein525@gmail.com

# பணிப்பெண்கள் போர்வையில் விலைமாதர்கள் இவர்களின் நிலை மாறுமா?

கேள்வி:

எங்களது அலுவலகத்தில் ஒரு நண்பி வேலை செய்கிறாள். அவளுக்கு 27 வயதைத் தாண்டுகிறது. குடும்பத்தில் எல்லோரும் பெண்கள். இவள் மூன்றாவது. மொத்தம் ஏழு பெண் பிள்ளைகள். தகப்பன் இறந்து விட்டதால் இவள் ஒரு பராமரிப்பு இல்லத்தில்தான் வளர்ந்தவள். இப்பொழுதும் அங்குதான் தங்கியிருக்கிறாள். என்ன பிரச்சினை என்றால், இவள் இத்தனை பெரியவளாக இருந்தும் சுயமாக இயங்கமாட்டாள். பராமரிப்பு நிலையத்தின் பொறுப்பாளரின் அனுமதி இல்லாமல் ஒரு கருத்தைக் கூடச் சொல்லமாட்டாள். சொல்லப் போனால் கிட்டத்தட்ட ஒரு றிமோட் கொன்ரோலில் இயங்குவது மாதிரியே இவள் இயங்குகிறாள். பிறரை எப்போதுமே சார்ந்திருக்கும் இவளது நிலைமை என்ன? இதை மாற்றமுடியாதா?

பதில்:

இத்தகைய நிலைமை ஒரு வகையான ஆளுமைக் குறைபாடுதான். இதனை 'சார்பு நிலை ஆளுமை' என உளவியல் உலகம் அழைக்கிறது.

ஒரு சிறிய விடயத்திற்குத் தீர்மானம் எடுப்பது கூட இவர்களால் முடியாததாக இருக்கும். உதாரணமாக, நடந்து செல்வதா, சைக்கிளில் போவதா அல்லது வாகனத்தில் போவதா என்பதைக்கூட இவர்களால் செய்யமுடியாது. காலுக்கு செருப்பு அணிவதிலிருந்து குடைபிடித்துச் செல்வது வரையில் எல்லாமே இன்னொருவரின் தீர்மானத்தில்தான் தங்கியிருக்கும். சுயமாக ஒரு கருத்தைக் கூட சொல்லமாட்டார்கள். விருப்பு வெறுப்பு, ஆசாபாசங்கள், நன்மை - தீமை, நல்லது - கெட்டது எல்லாவற்றுக்கும் தான் சார்ந்திருப்பவர்களையே நம்பிக்கொண்டு காலங்கழிப்பார்கள்.

இவர்கள் தனக்குத்தானே பச்சாதாபப்பட்டுக்கொண்டு இருப்பார்கள். இவர்களால் வாழ்வின் சந்தோசங்களை அனுபவிக்க முடியாதிருக்கும். வாழ்க்கையைப்பற்றிய எதிர்மறையான எண்ணங்களையே இவர்கள் கொண்டிருப்பதால் எப்போதும் சோகமயமாகவே காட்சிகனிப்பார்கள்.

அதேவேளை ரோபோ மாதிரி இயங்கும் இப்படிப்பட்டவர்களை ரகசியமாக தகவல் திரட்டுவதற்கும். துப்பறிவு வேலைகளுக்கும் பயன்படுத்துபவர்களும் உண்டு.

கிட்டத்தட்ட மூளைச் சலவை



செய்யப்பட்டவர்களாக இயங்கும் பிறரைச் சார்ந்து செயல்படுகின்ற 'சார்பு நிலை ஆளுமை' கொண்டவர்களை முதலில் அந்தச் சூழ்நிலையிலிருந்து வெளியே எடுக்க வேண்டும். பின்னர் தனித்துவமான சுய நடத்தைக்கு கொண்டுவர முடியும். பின்னர் இவர்களை சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு பண்புகளை மாற்றிச் செயல்படும் தன்மைக்கு கொண்டுவர முடியும். விரைவில் இத்தகைய இளம்பராய ஆளுமையின் வளர்ச்சிக்கான தடைகள் அகற்றப்படவில்லை என்றால் அது இளமைப் பருவம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்வதோடு சம்பந்தப்பட்ட நபர் வாழும் சமூகத்தையும் பாதிக்கச் செய்துவிடும்.

கேள்வி:

வீட்டுப்பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற பலர் தாம் எதிர்பார்த்துப் போன பொருளாதாரத்தைத் தேடும் கனவுகள் எல்லாம் சிதறடிக்கப்பட்ட நிலையில் தமது எதிர்காலத்தையே இழந்து நிற்கின்றார்களே! சர்வதேச ஊடகங்களும் இதனைப் படம்பிடித்துக் காட்டியிருந்தன. இப்படியிருக்கும்போது நம்மவர்கள் இன்னுமின்னும் கடல் கடந்து கள்ளத்தனமாகப் போகிறார்கள். பணிப்பெண்கள் செல்வதும் குறைந்தபாடில்லையே? வீட்டுப் பணிப்பெண்கள் என்ற போர்வையில் சிங்கப்பூருக்கு விலை மாதர்களாகவும் அனுப்புகிறார்களாமே. இந்த நிலைமைகள் மாறாதா?

பதில்:

மனப்பாங்கு பல்வேறு வடிவங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. இக்கரைக்கு அக்கரைப்பச்சை என்பதுதான் நிலைமை. பணிப்பெண்களாக வெளிநாடு செல்லும் எல்லோரும் வறுமையை விரட்டும் வழிவகைகளுக்காகவே அங்கு செல்கிறார்கள் என்பதற்கில்லை. அதுபோலவே கடல்கடந்து கள்ளத்தனமாக கப்பலில் செல்வோர் எல்லோரும் நாட்டில் வாழமுடியாது என்று தப்பிப்பிழைப்பதற்காக வேறு நாடுகளுக்குச் செல்கிறார்கள் என்ற முடிவுக்கும் வர முடியாது.

பல்வேறு பொய்மைகளாலும், பகட்டுக்களாலும் நாம் ஆளப்படுகின்றோம். அந்த வகையில் வெளிநாட்டு மோகம் முக்கிய இடத்தை வகிக்கிறது. அங்குள்ள வாழ்க்கை முறைமைகளைக் கேள்விப்பட்டு அந்த உந்துதலின் விளைவாக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கைதான் அதிகம்.

ஆரம்ப வாழ்க்கைக்கு அடிமைப்படும் ஆர்வமும், கலாசார பிறழ்வுகளை 'நாகரிகம்' என்று நம்பும் போக்கும் குறிப்பிட்ட ஒரு சாராரிடம் வந்துவிட்டது. இத்தகைய நாகரிக மோகத்தாலும், ஆடம்பரங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆர்வத்தாலும் இப்போது எமது சுயத்தை இழந்து நிற்கிறோம்.

இதற்கு தீர்வு காண்பதென்றால் சம்பந்தப்பட்டவர்களும் மற்ற அனைவரும் என அக்கறையுள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு விழிப்புணர்வுச் செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும். ✱

## மாதிரிக் கவிதைகள்

அதோ தேரோடும் தெருவில்
இருந்து சற்று முன்னர் தான்
துரத்தப்பட்டார்கள்.....
'பிச்சைக்காரர்கள்'

★ ★ ★

ஓலைக் குடிசையின் ஓட்டைகள்
வழியாக ஒழுகும் மழை நீரை
பாத்திரம் வைத்து ஏந்துகிறோம்
அப்படியே - குடிநீரும்
சேகரிக்கப்படுகிறது

★ ★ ★

கொடியில் காய்கிறது - பூ அலங்காரம்
போட்ட உனது சேலை
அதற்குள்ளும் மொய்க்கின்றன
தேனீக்கள்

★ ★ ★

அம்மா இல்லாத குருவிக் குஞ்சுகளே!
வாருங்கள் அனாதை இல்லத்தில்
இணைத்து விடுகிறேன் - அங்கே
அம்மா இல்லாத குழந்தைகளோடு
சேர்ந்து விளையாடலாம்

★ ★ ★

தாய்ப் பசுவை விட்டுவிட்டு
கன்றுக்குட்டிகள் பால்காரனுக்குப்
பின்னால் ஓடுகின்றன

★ ★ ★

மனைவியை மலடி என்று திட்டுகிறான்
வாசலில் நின்றவாறு - பிச்சைக்காரன்
அம்மா என்கிறான்

★ ★ ★

இப்போதும் பொம்மையை -
அணைத்துக் கொண்டே உறங்குகிறாள்
விழிகளிலோ கலியாணக் கனவு
வயதோ நாற்பத்தி மூன்று

★ ★ ★

கின்னஸ் புத்தகத்தில் பதிவு
செய்து கொள்ளுங்கள் - உரிமைகளை
அதிகம் இழந்தவர்கள்
நமது சந்ததிகள் என்று

★ ★ ★

என் வீட்டுத் தெருவில் ஒவ்வொரு
நாட்களும் பிச்சைக்காரர்கள்
தேர்தல் காலத்தில் ஒரு
புதுப்பிச்சைக்காரன்

★ ★ ★

கேலிச் சித்திரங்களை வரைபவர்களும்
உலகப் புகழ் பெறுகிறார்கள்

★ ★ ★

பிரம்புகளால் போதிக்கப்படுகிறது
மனித உரிமை

★ ★ ★

சுதந்திரப் பெண்ணுக்கு
வயதானபோதும் அதிகார
ஓமோன் சுரக்கின்றதே....

அந்த அகதிகளின் கிராமத்தின் ஊடாக
வீசும் காற்றில் காது வைத்து கேளுங்கள்
ஒப்பாரி ஒதுப்பட்டுக் கொண்டிருக்கிறது


★ ★ ★

நரம்பு அறுந்த யாழுக்கான....
இரங்கற்பாவை எழுதுகிறான்
விரல்கள் இல்லாத தொழுநோய்க்காரன்

★ ★ ★

மோசமாய் விரல்களையும் நீட்டாதீர்கள்
ஆயுததாரிகள் என்று...
கைது செய்துவிடக்கூடும்

(மாதிரிகள் தொடரும்)



# தமிழ் சினிமாவின் நாகரீகக் கோமாளி

மொழியில் சீர்திருத்த விதை தூவியவர். நூற்றாண்டைக் கடந்து வாழும் கலைவாணர் என்.எஸ்.கே. கிருஷ்ணன்.

★ நாகர்கோவில் அருகே உள்ள ஒழுகினசேரி கிராமத்தில் 1908ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் பிறந்தவர். தந்தை சுடலைமுத்துப் பிள்ளை, தாயார் இசக்கி அம்மாள். நாகர்கோவில் சுடலைமுத்து கிருஷ்ணன் என்பதன் சுருக்கமே என்.எஸ்.கே.

★ சுடலைமுத்து - இசக்கியம்மாள் தம்பதியருக்கு மொத்தம் ஏழு பிள்ளைகள். என்.எஸ்.கே. மூன்றாவது மகன். இவர்களில் தற்போது 90 வயதைக் கடந்த என்.எஸ்.கேவின் தம்பி திரவியம் மட்டும் உயிரோடு இருக்கிறார்.

★ வறுமையின் காரணமாக நான்காம் வகுப்புடன் கலைவாணரின் பள்ளிக்கூடப் படிப்பு நிறுத்தப்பட்டது. பின்னர், நாடகக் கொட்டகையில் சோடா, கலர் விற்கத் தொடங்கினார். அப்படித்தான் நாடக ஆர்வம் இவருக்கு ஆரம்பமானது.

★ ஆனந்த விகடனில் தான் எழுதிய 'சதிலீலாவதி' தொடரை அதே பெயரில் படமாக்கினார் எஸ்.எஸ்.வாசன். அதுதான் கலைவாணரின் முதல் படம். ஆனால், சதி லீலாவதியை முந்திக்கொண்டு என்.எஸ்.கே. அடுத்து நடித்த 'மேனகா' படமே முதலில் திரைக்கு வந்தது. இவர் மொத்தம் 122 படங்களில் நடித்திருக்கிறார்.

★ 'வசந்தசேனா' படப்பிடிப்புக்காக கலைவாணர் அடங்கிய குழு ரயிலில் புனே சென்றது. அப்போது படத்தின் தயாரிப்பாளர் ரயிலைத் தவறவிடவே, வழிச்செலவுக்கு மதுரத்தின் நகைகளை விற்றே குழுவினரின் பசி போக்கினார் என்.எஸ்.கே. அந்தச் சமயம்தான் இருவருக்கும் காதல் பூத்தது.

★ தனக்கு ஏற்கனவே திருமணம் நடந்ததை மறைத்தே டி.ஏ.மதுரத்தை என்.எஸ்.கே. மணந்தார். கலைவாணருக்கு ஏற்கனவே திருமணமான விடயத்தை அவரது குழுவில் இருந்த புளிமூட்டை ராமசாமி என்பவர் மதுரத்திடம் போட்டுடைக்க, இதனால் சில நாட்கள் கலைவாணரிடம் மதுரம் பேசாமல் இருந்திருக்கிறார். பின்னர், இருவரும் சமரசம் ஆனார்கள்.

★ என்.எஸ்.கேயின் 'கிந்தனார் கதாகாலட்சேபம்' பிரபலம். நந்தனாரை, கிந்தனார் ஆக்கியதற்கு மதுரம் கோபிக்கவே, சுப்பிரமணிய பாரதியார் சாப்பிட வராமல் நந்தனாரை எழுதிக்கொண்டு இருந்தபோது, ''நந்தனாரும் வேண்டாம் கிந்தனாரும் வேண்டாம், சாப்பிட வாங்க'' என்று சலித்துக்கொண்டாராம் அவர் மனைவி செல்லம்மா. அதில் இருந்து உருவியதுதான் இந்த கிந்தனார் - என்று மதுரத்தைச் சமாளித்திருக்கிறார்.

★ என்.எஸ்.கே - மதுரம் தம்பதிக்கு ஒரு பெண் குழந்தை (கலைச்செல்வி) பிறந்து நான்கே மாதங்களில் இறந்துவிட்டது. அதன் பின்னர், அவர்களுக்குக் குழந்தை இல்லை. அதனால், மதுரம் தன் தங்கை டி.ஏ.வேம்பு அம்மாளை கலைவாணருக்கு மூன்றாவது தாரமாகத் திருமணம் செய்துவைத்தார். அவர்களுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தனர்.

★ ஒருமுறை என்.எஸ்.கேயின் ரஷ்யப் பயணத்தைப்பற்றி செய்தியாளர்கள் கேட்க, ''ரஷ்யாவில் அக்ரஹாரமும் இல்லை... சேரியும் இல்லை'' - என்றவாறு நறுக், சுருக் என்று பதில் அளித்தார்.

★ 'மணமகள்' படத்தில் பத்மினியை அறிமுகப்படுத்தி, அவர் 'நாட்டியப் பேரொளி' என்ற பட்டம் பெறக் காரணமாக இருந்தார். அந்தப் படத்தில் பாலையாவின் நடிப்பைப் பாராட்டி, தனது விலை உயர்ந்த காரை அவருக்குப் பரிசளித்தார்.

★ உடுமலை நாராயணகவியைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தியவர். 'உடுமலைக்கவியை' கலைவாணர் வாத்தியாரே என்றுதான் அழைப்பார்.

★ 1957ஆம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தல். காஞ்சிபுரத்தில் அண்ணாவை எதிர்த்து நின்றவர் ஒரு டாக்டர். அண்ணாவுக்காகப் பிரசாரத்துக்கு வந்த கலைவாணர், ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை அந்த டாக்டரையே புகழ்ந்து பேசினார். ''இவ்வளவு நல்ல டாக்டரை நீங்கள் சட்டசபைக்கு அனுப்பினால், உங்களுக்கு இங்கு வைத்தியம் பார்ப்பது யார்? இவரை உங்கள் ஊரிலேயே வைத்துக்கொள்ளவேண்டும். அதனால், டாக்டருக்கு யாரும் ஓட்டுப் போடாதீர்கள். அண்ணாவையே தேர்ந்தெடுங்கள்'' - என்றார். அண்ணா உட்பட அனைவரும் கைதட்டி ரசித்தனர்.

★ 'இந்து நேசன்' பத்திரிகை ஆசிரியர் லட்சுமி காந்தன் கொலை வழக்கில், கலைவாணருக்கும் தியாகராஜ பாகவதருக்கும் மறைமுகத் தொடர்பு இருப்பதாகச் சந்தேகத்தின்பேரில் இருவரும் கைதானார்கள். லண்டன் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததில் கலைவாணர் விடுவிக்கப்பட்டார். ''உங்க அப்பா எப்படி ரிலீஸ் ஆனார் என்று தெரியுமா? கொலை நடந்த அன்று கோவையில் காருக்கு பெற்றோல் போட்டதுக்கான பற்றுச்சீட்டு அவரிடம் இருந்தது. அதை வைத்துத்தான் அவர் விடுதலை ஆனார்'' - கலைவாணர் குடும்பத்தினரைப் பார்க்கும்போது எல்லாம் நீதிபதி கற்பகவிநாயகம் இப்படி சொல்லிச் சிரிப்பார்.

★ சிறையில் இருந்து விடுதலையான என்.எஸ்.கேக்கு நடந்த பாராட்டு விழாவில் தான் அவருக்கு 'கலைவாணர்' என்று பட்டம் சூட்டப்பட்டது. பட்டம் சூட்டியவர் பம்மல் கே.சம்பந்தம் முதலியார்.

★ சிறையில் இருந்து வெளிவந்த பிறகு, தியாகராஜ பாகவதர் நடித்த 'ராஜ முக்தி' படத்தில் என்.எஸ்.கே. தம்பதியரின் நகைச்சுவை இல்லை. 'என்.எஸ்.கே - பாகவதர் ஜோடி பிரிந்துவிட்டதாக' பரபரப்பாக எழுதினார்கள். அப்போது நடைபெற்ற மதுரத்தின் தம்பியின் திருமணத்துக்கு வந்த பாகவதர், ''எங்களை யாரும் பிரிக்க முடியாது; ''எம்'' என்றால் மதுரம், ''கே'' என்றால் கிருஷ்ணன், ''டி'' என்றால் தியாகராஜா பாகவதர். இதுதான் எம்.கே.டி'' - என்று சொல்லி உணர்ச்சிவசப்பட்டார்.

★ என்னைச் சிலர் தமிழ்நாட்டு சார்லி சாப்ளின் என்று சொல்றாங்க. சார்லி சாப்ளினை ஆயிரம் துண்டுகள் ஆக்கினால் கிடைக்கும் ஒரு துண்டுக்குக்கூட நான் ஈடாக மாட்டேன் - என்பார் என்.எஸ்.கே. தன்னடக்கமாக.

★ கலைவாணர் தீராத வயிற்று வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எம்.ஜி.ஆர். வெளியூரில் இருந்ததால் அவரால் உடனே வந்து பார்க்க முடியவில்லை. என்.எஸ்.கே. எம்.ஜி.ஆருக்கு இப்படித் தகவல் அனுப்பினார், ''நீ என்னைக் காண வராவிட்டால், பத்திரிகைகள் உன்னைப் பற்றித் தவறாக எழுதும். நீ எனக்குச் செய்த உதவியை நான் அறிவேன்.''

★ ஒரு கட்டத்தில் கொடுத்துக் கொடுத்தே இல்லாமல் ஆகிப்போனார். அப்போது அவரிடம் வேலைசெய்த ஒருவர், 'எனக்குத் திருமணம்' - என்று வந்து நிற்கிறார். சுற்றும் முற்றும் பார்த்தபோது கண்ணில்பட்டது ஒரு வெள்ளி கூஜா. அதை எடுத்துக்கொடுத்து, 'இதை விற்றுத் திருமணச் செலவுக்கு வைத்துக்கொள்' - என்றார்.

★ தம்பி எவரேனும் என்னிடம் உதவிகேட்டு, நான் இல்லை என்று கூறும் நிலை வந்தால், நான் இல்லாமல் இருக்க வேண்டும் - என்று அடிக்கடி கூறுவார். யார், எவர் என்று கணக்குப் பார்க்காமல் வாரி வழங்கிய வள்ளல்.

★ தினமும் ஒரு பிச்சைக்காரர் கலைவாணர் வீட்டு வாசலில் வந்து நிற்பாராம். இவரும் பணம் கொடுப்பார். ''அவன் உங்களை ஏமாற்றுகிறான்'' - என்று வீட்டில் உள்ளவர்கள் சொல்லவே, ''அவன் ஏமாத்தி என்ன மாடி வீடா கட்டப்போறான். வயித்துக்குத்தானே சாப்பிடப்போறான். ஏமாத்திட்டுப் போகட்டுமே'' - என்பாராம்.

★ கலைவாணர், காந்தி பக்தர். நாகர்கோவிலில் காந்திக்குத் தன் சொந்தப் பணத்தில் தூண் எழுப்பினார்.

★ சென்னையில் 'சந்திரோதயம்' நாடகம் பெரியார் தலைமையில் நடந்தது. ''நாடகம், சினிமாவால்தான் மக்கள் பாழாகிறார்கள்'' - என்று அடித்துப்பேசி அமர்ந்தார் பெரியார். அடுத்துப் பேசிய என்.எஸ்.கே. ''பெரியார் சொன்னவை அனைத்தும் சரியே. நாங்கள் கொள்ளை அடிக்கிறோம், எங்களால் நன்மையைவிட கேடுகளே அதிகம்'' - என்றார். அந்த நேர்மையும் துணிச்சலும் கலைவாணர் கைவண்ணம்.

★ சேலம் அருகே தாரமங்கலம் பஞ்சாயத்தில் நடைபெற்ற அண்ணாவின் படத் திறப்பு விழாதான் கலைவாணர் கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சி. அதேபோல் அண்ணா கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சி, கலைவாணரின் சிலை திறப்பு விழா.

★ கலைவாணர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்த சமயம், அவர் இறந்துவிட்டதாக அடிக்கடி வதந்திகள் பரவின. 'மதுரம், நான் சாகலேன்னா இவங்க விடமாட்டாங்கபோல. இவங்க திருப்திக்காகவாவது ஒரு தரம் நான் அவசியம் சாகணும் போலிருக்கே'' - என்றாராம்.


★ ஒரு கட்டத்தில் என்.எஸ்.கேயின் உடல்நிலை மோசமானது. மருத்துவர்கள் கைவிரித்துவிட்டனர். மருந்து உண்பதை நிறுத்திவிட்டார். 1957ஆம் ஆண்டு ஒகஸ்ட் 30ஆம் திகதி காலமானார். தமிழகத்தின் ஒவ்வொரு வீடும் துக்கத்தில் மூழ்கிய தினம் அது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 432

சொற்சிலம்பம் 432 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித்தினம் 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் செப்டம்பர் 19 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 430 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 432



### சொற்சிலம்பம் போட்டி இல. 431

**இடமிருந்து வலம்**
1. மாற்றுத்திறனுடையோர் 5. சூழ்ச்சி 6. கடிந்துகொள். 7. தர்க்கம் செய் 9. புட்பமாலை 11. ஊன் 12. இந்திய, இலங்கைப் பெண்களின் முக்கிய உடை 14. பூக்கள் மழைபோல் பொழிதல் 16. ஐந்தாம் வேற்றுமை உருபு 17. கிட்டத்தட்ட 18. விலகிப்போ.20. உடல் 21. ஆகாயத்தில் மித 22. நித்திரையில் இருந்து எழு. 23. பாம்பு

**மேலிருந்து கீழ்**
1. பழிச்சொல் 2. மாசு/ஐயம் 3. தெரு 4. இல்லம் 6. வெளிமண்டபம் 8. திக்கு 9. கோயிலிற் புசைசெய்வோன் 10. மழைக்காலம் 13. தகாத பாலியல் உறவு 14. பூமித்தாய் 15.தமிழ் மாதங்களில் இறுதியானது. 16. இம்மை, மறுமை சார்ந்த 19. ஒரே

### சொற்சிலம்பம் போட்டி இல.429



### பரிசு பெறுவோர்

1. **ம. யதுர்ஷன்,**
11/46, தக்கயா லேன்,
திருகோணமலை.
2. **செல்வி. கேசவி. தயாபரன்,**
'ஜோதி அகம்'
மட்/ ஆரையம்பதி.
3. **ஐ. தாஜிடீன்,**
டீன்ஸ் வீதி,
அட்டாளைச்சேனை.

### பாராட்டுப் பெறுவோர்

- திருமதி. ஜெயா ஜேசுதாசன், கொழும்பு - 13.
- ஆ. சேதிமணி, அச்சுவேலி.
- திருமதி. ரஞ்சினி சிவஞானம், மட்டக்களப்பு.
- வை. தனபாலசிங்கம், சாவகச்சேரி.
- என். சஜேந்திரன், நற்பிட்டிமுனை - 02.
- சி. நீரஜா, மட்டக்களப்பு.
- ஆர். கார்த்திகேசு, கொழும்பு - 06.
- கோ. சாமினி, திருகோணமலை.
- க. ஜெயலட்சுமி, மாதகல்.
- வி. செல்வநாயகம், புத்தூர்.
- சேரன் அமரலிங்கம், வெள்ளவத்தை.




கே.விநோ,
கனகாம்பிகைக்குளம்

**கேள்வி:** பல்கலைக் கழகங்களில் பகிடிவதை தொடர்வது எதனால்?

**பதில்:** தன்னை வருத்திப் பிறர் பெற்ற இன்பானுபவத்தை தானும் பிறரை வருத்திப் பெற வேண்டுமென்ற ஆசையால் தான் என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், அதன் பின்னணியில் பொறாமையும் இருக்கத்தான் செய்கிறது.

எம். பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை

**கேள்வி:** அரசாங்கத்துடன் இணைந்து செயல்படும் தமிழ் அமைச்சர்களுக்கும் பெரிதாகத் தமது மக்களுக்குச் சேவை செய்ய முடியாதிருக்கின்றதே. ஏன்?

**பதில்:** புலிகளுக்கு எதிராகத் தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள அரசாங்கத்துடன் சேர்ந்திருந்தவர்களுக்குப் பேரம் பேசும் சக்தி இருக்காததால் அப்போது தனது சமூகத்துக்காக அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. இப்போது ஏதோ நோக்கங்களுக்காகச் சேர்ந்திருந்தாலும், அரசாங்கத்துக்குப் பெரும்பான்மைப் பலம் இருப்பதால் அவர்கள் சேர்ந்தாலும், சேராவிட்டாலும், அவர்களுக்காக எதுவும் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்த நிலைமை அரசாங்கத்துக்கு இல்லை. எனினும், இது விடயமாகப் புலம்பெயர்ந்த தமிழர்களும் தமிழ்க் கட்சிகளும் அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுக்க முடியும்.

தமிழ்,
கிளிநொச்சி

**கேள்வி:** பித்தரே, உலக நாடுகளால் பயங்கரவாதிகள் என்ற வகையில் தடைசெய்யப் பட்ட அனைத்து அமைப்புகளும் உண்மையிலேயே பயங்கரவாத அமைப்புகளா? எந்த வோர் அமைப்பும் நியாயமான கொள்கைகளுக்காகப் போராடவில்லை என உங்களால் கூற முடியுமா?

**பதில்:** இது மிக விரிவான நூலொன்றையே வேண்டிநிற்கின்ற ஒரு கேள்வி. 'பயங்கரவாதிகள்' என்ற சொல் சார்பு நிலை கொண்ட ஒரு சொல்லாகும். இந்தப் பெயரைக் கொடுப்பவர் யார்? எந்த நோக்கத்துக்காக இந்தப் பெயர் கொடுக்கப்படுகிறது. இதனால் யாருடைய நலவுரிமைகள் பாதிக்கப்படுகின்றன என்ற அடிப்படையிலேயே இது நோக்கப்பட வேண்டும். உண்மையாகவே சொல்லப் போனால் இன்றுள்ள மகா கொடிய பயங்கரவாதி யார் அல்லது எந்த நாடு என்று கேட்டால் சட்டென உங்களால் விடை சொல்லக் கூடியதாக இருக்கும். தாலிபான்களையோ, அல் கொய்தாவையோ ஒருபோதும் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்ட முடியாதென்றே நான் கருதுகிறேன். அதே போன்று, இலங்கையில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் எல்லாம் தமிழர்களை ஏமாற்றி, அவர்களுடைய நலவுரிமைகளை அங்கீகரிக்காமலும், உரிமைகளைக் கொடுக்காமலும் இருந்ததால் தான் விடுதலைப் போராட்ட அமைப்பு கள் தோற்றம் பெற்றன. நான் மேலே குறிப்பிட்ட அமைப்புகளை விட பிலிப்பைன்ஸில் சுயாட்சி வேண்டிப் போராடும் விடுதலை இயக்கம் கூட பயங்கரவாத அமைப் பல்ல. மத்திய கிழக்கு நாடுகளின் விவகாரங்களில் அமெரிக்கா மூக்கை நுழைக்கக் கூடாது என்பதற்காகவே இஸ்லாமிய இயக்கங்கள் போராடுகின்றன. ஆனால், உண்மையான இலட்சியங்களோடு போராடும் எந்த அமைப்பையும் எவருமே நசுக்கிவிட முடியாது. அதே நேரத்தில் இந்த அமைப்புகள் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளையும் அங்கீகரிக்க முடியாது என்ற உண்மையையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இந்த அமைப்புகள் யாருடைய நலவுரிமைகளுக்குச் சவாலாக இருக்கின்றதோ அவர்கள் தான் இவற்றுக்குப் பயங்கரவாத அமைப்புகள் என்று பெயர் சூட்டுகின்றனர்.

என். பரமசிவம்,
மலையாடி

**கேள்வி:** தமிழ்ச் சமூகத்தின் மீது கொண்ட பரிதாபத்தின் காரணமாகவா மேற்குலக நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் யுத்தக் குற்ற விசாரணையை வேண்டுமென்று தூக்கிப்பிடிக்கின்றன?

**பதில்:** இல்லவேயில்லை. மனித உரிமை மீதான அவற்றின் கரிசனை எள்ளளவு கூட இதற்குக் காரணம் அல்ல: மாறாக அவற்றின் நலவுரிமைகள் பாதிக்கப்பட்டதால் தான் அவை கூப்பாடு போடுகின்றன. மேற்குலகுக்கு மாறான வகையில் அரசியல், பொருளாதார அரங்குகளில் தலைதூக்கி வரும் ஈரான், சீனா ஆகிய நாடுகளுடன் வர்த்தக ரீதியான தொடர்புகளைக் கொண்டிருப்பதற்கு இலங்கையைத் தண்டிக்கவே இந்நாடுகள் முயல்கின்றன. இலங்கையின் உள்விவகாரங்கள் சம்பந்தமாக மேற்குலகு விடுத்த கோரிக்கைகளை இலங்கை மீறியிருப்பது அவற்றை ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கின்றன. புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டது கூட இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலையீட்டைத் தடுத்து நிறுத்தியுள்ளது என்ற உண்மையை நீங்கள் அறிவீர்களா?

ரவிச்சந்திரன்,
பண்டாரவளை.

**கேள்வி:** கல்வி, செல்வம், வீரம் இவற்றில் எது முக்கியம் பித்தரே?

**பதில்:** ....அறிவானது ஒருவனை நன்மை எது, தீமை எது என்று உணர்ந்து கொள்ளச் செய்கிறது. மோட்சம் அடைவதற்குரிய வழியைத்துலக்குகிறது. பாலைவனத்தில் நண்பனாகவும், தனித்திருக்கும்போது துணைவனாகவும், தோழன் இல்லாத போது கூட்டாளியாகவும் இருக்கின்றது. மகிழ்ச்சிக்கு வழிகாட்டுகிறது. துன்பத்தின் போது ஆறுதல் அளிக்கிறது. நண்பர்களிடையே ஆபரணமாகவும், எதிரிகளிடையே கேடயமாகவும் அறிவு அமைந்திருக்கிறது என்று நபிநாயகம் கூறினார்கள். அறிவுடையார் அனைத்தும் உடையார் என்பது வள்ளுவர் வாக்கு. அதனால், கல்வியே அனைத்திலும் சிறந்தது.

தனஞ்ஜயன்,
கொக்குவில்.

**கேள்வி:** இயற்கை பற்றியும் மனிதனைப் பற்றியும் இலகுவாகப் படித்துக்கொள்ள ஒரு வழி கூறுங்கள்.

**பதில்:** பிரயாணம் செய்யுங்கள்.

டிரோன்,
வவுனியா.

**கேள்வி:** மனிதனின் உயர்வுக்கு ஒரு வழி கூறுங்களேன்.

**பதில்:** மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு.

டேவிட்,
கொழும்பு.

**கேள்வி:** சிறு குழந்தைகளுக்குக் காது குத்துவது அக்யூபஞ்சர் வைத்திய முறையை அடிப்படையாகக் கொண்டது என்கிறார்களே. இது உண்மையா?

**பதில்:** மூக்குக் குத்துவதும், பக்தர்கள் நாக்கிலே வேல் குத்துவதும், ஏமாந்தால் நண்பர்கள் முதுகில் குத்துவதும் அக்யுபஞ்சரா? இவையெல்லாம் வைத்திய முறைகளுக்கு உட்பட்டதல்ல.

பிரபாகரன்,
திருமலை.

**கேள்வி:** பித்தரே, பச்சை குத்துவதால் ஏதாவது நன்மை விளையுமா?


**பதில்:** பச்சை குத்திவிடுபவனுக்குப் பணம் கிடைக்கும். எதற்காகப் பச்சை குத்திக்கொள்ள வேண்டும்? இறைவன் படைத்த அழகான உடலை எதற்காக அசிங்கப்படுத்திக் கொள்ள வேண்டும்? பச்சை குத்துவதால் ஈரலில் வியாதி உண்டாகும் என நியூயோர்க் சுகாதார இலாகா தெரிவித்திருப்பதோடு இதற்குத் தடையும் விதித்துள்ளது.

எம். பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை

**கேள்வி:** உலகில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டு வருவது எது?

**பதில்:** அரசியல் ரீதியாக நோக்கினால் நல்லாட்சி. பொருளாதார ரீதியாக நோக்கினால் மூலவளங்கள், சமூக ரீதியாக நோக்கினால், நிம்மதி, குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான பிணைப்பு அதாவது கணவன்-மனைவிக்கு இடையிலான பற்று, முதுமையடையும் பெற்றோர்கள் மீது பிள்ளைகளுக்கு இருக்கின்ற பாசம், சகோதரர்களிடையே உள்ள ஒற்றுமை மற்றும் பல்வேறு மத நம்பிக்கைகளைக் கைக்கொள்கின்ற சமூகங்களிடையே காணப்படும் புரிந்துணர்வு. இதனால் தான் கடலிலும் கரையிலும் குழப்பங்கள் மலிந்து கொண்டு வருகின்றன.

# ரமழானே!



வானமகள் வளர்மதியை மடியில் வைத்து
வையகம் தந்திடவே ரமழான் பேறு
தேனதாய் இனித்தே மாந்தர் நெஞ்சில்
தேடரிய நன்மைகளைக் கோர்த்து வைக்கும்!

முப்பதுநாள் விரதமதை முத்தாய்த் தந்து
முக்திக்குள் இணைந்து முத்திரை பதிக்க
தப்பான மனஅழுக்கின் தடயம் நீக்கி
தகைசேர் வாழ்வுதனைச் சேர்த்து வைக்கும்!

பட்டினிக்குள் பக்குவத்தைச் சொல்லி வைத்து
பாவத்தின் படிகளைக் கழுவிக் கொள்ள
சட்டத்தின் கடமையாய் நோன்பு நின்று
சாந்தியை மனங்களில் மாந்தி மகிழும்!

நின்று வணங்கும் நிகரற்ற வழிபாடு
நிமலோனின் அருளுக்குள் எமை இணைத்து
வென்று சைத்தானை விரண்டோட வைத்து
வெற்றிப் பாதைக்காய் விழித்தது நிற்கும்!

ஒற்றுமைக் கயிற்றை உருக்காய் திரித்து
ஒன்றாக்கிப் பார்க்கும் ஒப்பரிய ரமழான்
வேற்றுமை நீக்கி வெற்றிதனைக் கூறும்
வேதத்தை இங்கே விழிகளாய்க் காட்டும்!

ஏழைகள் மனங்கள் இம்மண்ணில் மகிழ
எடுத்துக் கொடுக்கின்ற ஸக்காத் கரங்கள்
வாழக் கொடுக்கும் வளங்கள் சேர்ந்து
வைகறைப் பெருநாளைக் கொண்டாட வைக்கும்!

-கவிஞர் பதியதளாவ பாறூக்-

# எட்டியாந்தோட்ட ஸ்ரீ முருகப்பெருமான்

இறப்பர் காடு பால்சுரக்கும்
இடியாய் காய்கள் வெடிஉதிர்க்கும்
பரந்து கொடிகள் தரைபோர்த்தும்
பாங்கு வோடை இரைந்தேகும்
அரம்பை தேமா பலாக்கனிகள்
அழைக்கும் புட்கள் மனைசூழ்ந்து
வரம்பை மீறும் நதிபாயும்
ஊரின் நகரில் பெருங்கோயில்!

ஏந்தி மலர்கள் கரைச்சோலை
இதழ்கள் கொட்டி வரவேற்கும்
மாந்தி புட்கள் மலர்த்தேனை
மகிழ்ந்து வாழ்த்தி இசைமிழற்றும்
நீந்தி பாலர் களிகொள்வர்
நம்பி நங்கை நீராடி
வந்து உவந்து கரைசேர்வர்
நடப்பாள் கங்கை தடம்பார்த்து!

காற்றில் உராய்ந்து சிரிப்புதிர்க்கும்
கழனி பரப்பில் நெல்மணிகள்
கீற்றில் காற்று இசைமீட்டும்
காமர் தெங்கு பெருந்தோப்பில்
போற்றி சேயோன் புகழ்சாற்றும்
பூணும் ஆரம் பசுங்கிளிகள்
தேற்றிப் புரப்பான் திருமுருகன்
திருவூர் கோட்டம் வீற்றிருந்து!

உள்ளம் நெகிழ்ந்து துதிப்போர்க்கு
உமையாள் சேயோன் உய்வளிப்பார்
வெள்ளம் போல பக்தர்குழாம்
விழாவில் எங்கும் நிறைந்தோங்கும்
கொள்ளை கொள்ளும் கோபுரத்தை
கூப்பி நகரும் தழைத்தோங்கும்
அள்ளும் எட்டி யாந்தோட்டை
நகரின் கந்தக் கோட்டங்காண்!

-கவிஞர் ஸி.எஸ். காந்தி-



# முகமது நபிகளின் மகிமை

மஞ்சள் நிற மண்ணிலே
பஞ்சம் நிறைந்த பாவிகளிலே
வஞ்சம் எனும் தீயை அகற்ற
பிஞ்சுப் பிள்ளையாய்ப்
பிறந்தாரே-நபிபெருமான்!

வளம் குறையாத வாழ்க்கை
சேர்ந்திடவே
வலைக்குள் பின்னிய
மடமையை நீக்கிடவே
வளரும் சூதாட்டமும்
மதுவோட்டமும் மறைந்திடவே
வழி வகுத்த அண்ணல் இங்கு
நபிதானே!

நாற்பது வயதினிலே பெற்றார்
நபித்துவம்
நன்மைகள் செய்தால் வரும்
மகத்துவம்
நபியின் வாழ்வே அரும்
மருத்துவம்
நாள்தோறும் வாழ்ந்தால்! அதுவே
பெருந்தவம்!

வாசம் வீசும் ரோஜாவாக
நல்லடியார்களின் ராஜாவாக
நானிலம் போற்றும் தூதராக
மனிதப் புனிதர்களை உருவாக்கி
மதீனாவிலே மறைந்தார் எம்
பெருமான்-
நபிநாயகம்!



-ஏஸ்.ஏ.செய்யத் அக்ரம்
ஹிஜ்றாபுர மு.ம.வி.

# எந்த எதிர்பார்ப்பு



கண்ணில் மயிலிறகு பட
கன்னத்தில் காற்றின் ஈரம் தொட
மனதில் ஏக்கம் ஆயிரம் எழ
மலகிப்போன எதிர்பார்ப்புடன்

தயக்கம் தளர்த்தி
பயத்தைத் துரத்தி
காதலுக்கு கயிறு போடும்
கண்கள் முன்னால்....!

காதல் இல்லாவிடினும்
கால் வார்த்தையாவது
கதைப்பாயா?
எனக் கேட்டு நின்ற இதயம்!

வானம் வெடித்து வையகம் துடித்து
வெப்பெரு ஜந்துக்கள்
கால் தொடினும் முடியாது என்ற
முடிவு உன் அசைவுகளில்!

அப்போது சொன்னது
அறிவு கெட்ட மனசு
துல்லியமாக பார்க்கினும் - நீ
துரதிஷ்டசாலி!

காரணமறிய விரும்பிய
கள்ளமனம் புரிந்து கொண்டது
மௌனம் அவள் நீண்ட நேர
மொழி என்று!

சென்ன ஸலாம்
தொடுத்த வினா
பூரணமற்றதாக - புத்தியற்று
மத்தியில் நின்ற - நான்???

உள்ளம் வெடித்து துடிதுடித்து!
உயிர் மடிந்து பதைபதைத்த! - என்
உணர்வை அறிய
ஆண்டவனையன்றி யாருமில்லை!

எதிர்கால எதிர்பார்ப்பிற்கு
உயிர் கொடுத்த ஓவியமாய்
உன்னை காண
உள்ளம் குமுறியது
உடனே போய்ச் சொல்!
புத்தி சொல்லியது
பொறுமைதான் வழி!

உயிர் நாடியை சுண்டியிழுத்து
மண்டியிட வைக்கும் - அந்த
மாபெரும் சக்தி உன்
கண்களிலா?!

உனக்கு பிடிக்காத என்னை
எனக்கும் பிடிக்கவில்லை
உயிரை பிரிக்கவும் - எனக்கு
உரிமையில்லை!

சிரிப்பாக இருக்கிறது
என் கண்கள் கூட கண்ணீர்
வடிக்கிறது!
பொறுப்பாக இருக்கிறது
உன் பார்வைகள் கூட என்னில்
படுவதற்கு!

ஆதி தொடங்கி அந்தம் வரை -
வெல்லும் என் அசுர பலம்
உன் சம்மதத்திலிருந்து!!!

எனினும் என் இதயம் - இனி
இடியைக் கூட!
இடையறாது தாங்கும்!



எஸ். சியானி முஹம்மட்
ஒலுவில்

# கிரிக்கெட் உலகிற்கே அவமானம்



இலங்கையில் நடந்துவரும் முத்தரப்புக் கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தின்போது, ஷேவாக்கின் சதத்தைத் தடுக்க வேண்டுமென்றே முறையற்ற முறையில் (நோ போல்) பந்து வீசிய இலங்கை அணியின் பந்துவீச்சாளரான ரண்டீவுக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதித்ததோடு, அந்த ஆட்டத்தின் கட்டணத்தையும் அபராதமாக விதித்தது இலங்கைக் கிரிக்கெட் சபை.

அத்துடன், அவருக்கு வியூகம் வகுத்துக் கொடுத்த டில்ஷானுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த விவகாரம் கிரிக்கெட்டுக்கே பெரும் களங்கத்தை ஏற்படுத்தியது மட்டுமன்றி, உலகில் சிறந்த அணிகளில் ஒன்றாக விளங்கிவரும் இலங்கை அணியின் திறமையைப் பலரும் கேலி செய்யும் அளவுக்குக் கொண்டுபோய் விட்டுள்ளது.

இலங்கை - இந்திய அணிகள் மோதிய அந்தப் போட்டியில் ரண்டீவ், ஷேவாக் சதம் அடிப்பதைத் தடுப்பதற்காக முறையற்ற முறையில் பந்துவீசியமை சர்வதேச கிரிக்கெட் விதிகளுக்கு எதிரானது என்றும், கிரிக்கெட்டுக்குரிய உத்வேகத்தைச் சீர்குலைக்கும் செயல் என்றும் முன்னாள் வீரர்கள் பலர் கண்டனம் தெரிவித்தனர்.

இதுகுறித்து இந்தியக் கிரிக்கெட் சபை, இலங்கைக் கிரிக்கெட் சபைக்குக் கடும் அழுத்தம் கொடுத்தது.

இதனால், இலங்கைக் கிரிக்கெட் சபை விசாரணையை மேற்கொண்டது.

விசாரணையின் முடிவில் ரண்டீவ் சுயமாகச் செயற்படவில்லை என்பதும், சக வீரரான டில்ஷான்தான் அவரைத் தூண்டினார் என்பதும் தெரியவந்தது.

போட்டின்போது களத்தடுப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த டில்ஷான், ரண்டீவை நோக்கி ''வேண்டும் என்றால் 'நோ-போல்' வீசலாம்'' என்று கூறியுள்ளார். அவரின் அறிவுறுத்தலை ஏனைய இலங்கை வீரர்களும் அப்போது ஆட்சேபிக்கவில்லை.

இதுகுறித்த உண்மை, 'ஸ்டம்'பில் பொருத்தப்பட்டிருந்த மைக்ரோ போனில் பதிவாகியிருந்த ஒலிப்பதிவை ஆராய்ந்தபோது வெளிவந்தது.

முதலில் மைக்ரோ போனில் பதிவாகியிருந்த குரலுக்குரியவர் சங்கக்காரதான் எனத் தகவல்கள் வெளியாயின. எனினும், முழுமையான ஆய்வின் பின்னர் அது டில்ஷானின் குரல் என்பது தெரியவந்தது.

இதுகுறித்த விசாரணையை இலங்கைக் கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவர் டி.சில்வா தலைமையில் 6 பேர் கொண்ட குழு மேற்கொண்டது.

இலங்கை அணியின் மேலாளர் அனுர தென்னக்கோன், இந்த விவகாரம் குறித்து ரண்டீவ், டில்ஷான், சங்கக்கார உள்ளிட்ட அணி வீரர்களிடம் விசாரணை நடத்தினார். பின்னர், அவர் தமது விசாரணை அறிக்கையை 6 பேர் கொண்ட குழுவிடம் சமர்ப்பித்தார்.



அவரது பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது குறித்து 6 பேர் கொண்ட குழு கூடி ஆலோசித்தது. அத்துடன், கடைசி ஓவரின் வீடியோக் காட்சிகளையும் முழுமையாகப் பார்த்தது.

பின்னர், இலங்கை வீரர்கள் தவறு செய்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டதால், சம்பந்தப்பட்ட வீரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இதன்படி சர்ச்சையில் சிக்கிய ரண்டீவுக்கு ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இதனால் அவர் கடந்த வியாழக்கிழமை ஆட்டத்தில் விளையாடவில்லை. மேலும் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பங்கேற்றமைக்காக அவருக்கு வழங்கவிருந்த கட்டணம் முழுமையாக - அபராதமாகப் பறிக்கப்பட்டது.

இதேபோல் இந்த விவகாரத்தில் டில்ஷானின் தலையீடும் இருப்பதால் அவருக்கு அந்தப் போட்டியின் கட்டணம் அபராதமாக விதிக்கப்பட்டது.

விசாரணையின்போது சங்கக்காரவும் கண்டிக்கப்பட்டார். எதிர்காலத்தில் மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாதபடி பார்த்துக்கொள்ளும்படி அவருக்குப் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

ஐ.சி.சி.விருதை 2 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பெற்றுள்ள இலங்கை அணி இத்தகைய செயலை செய்திருக்கக் கூடாது என்று இலங்கை கிரிக்கெட் சபை தனது செய்திக் குறிப்பில் கூறியுள்ளது.

# இந்திய டென்னிஸ் உலகில் சானியாவுக்கு அடுத்து யார்?

சானியா மிர்சா, ஏறக்குறைய டென்னிசில் இருந்து விலகிவிட்டார். இந்நிலையில் சானியாவுக்கு மாற்றாக யாரைத் தேடுவது என்ற கேள்வி இந்திய டென்னிஸ் சங்க நிர்வாகிகளைக் குடைந்து கொண்டிருக்கிறது.

அதிலும் காமன்வெல்த் போட்டிக்கு சானியாவுடன் இரட்டையர் பிரிவு வீராங்கனையைத் தேட வேண்டிய அவசர அவசிய நிலையில் டென்னிஸ் தேர்வாளர்கள் இருக்கின்றனர்.

சானியாவுக்கு அடுத்தபடியாக சுனிதா ராவ், ஷிகா உபராய் ஆகிய இரு சிறந்த வீராங்கனைகள் இருக்கின்றனர். ஆனால் அரசு வழிகாட்டுதல் நிபந்தனைகளின்படி அவர்களைத் தேர்வு செய்ய முடியாது. இந்நிலையில் சீனியர் வீராங்கனையான நிருபமா வைத்தியநாதனைத்தான் அழைக்க வேண்டும்.

உலக அளவில் 153 என்ற வரிசை நிலைக்கு சானியா தாழ்ந்திருக்கலாம். ஆனால் தனக்கு அடுத்த நிலையில் உள்ள சிறந்த இந்திய வீராங்கனையான பூஜாஸ்ரீயை விட 240 இடங்கள் முன்னே இருக்கிறார் சானியா.

காமன்வெல்த் போட்டியில் சானியா ஆடுவார் என்றாலும், அவரை அவ்வப்போது முடக்கிப்போடும் காயம்தான் பயமுறுத்துகிறது.


## வேலை வாய்ப்பு

பிரபல முன்னணி தமிழ் பத்திரிகை நிறுவனமொன்றுக்கு GRAPHIC DESIGNERதேவை.

தகைமை : க.பொ.த. உயர்தரம்.

வயதெல்லை : 25 வயது முதல் 35 வயது வரை ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

(வெள்ளவத்தையில் விரும்பத்தக்கது)

................................................

## தொடர்பு

கீழ் காணும் முகவரிக்கு சான்றிதழ்களுடன் அலுவலக நேரத்தில் நேரடியாக வரவும்


32D, முதலாம் மாடி, ஹெம்டன் லேன் வெள்ளவத்தை, கொழும்பு - 06.


# பட்டினி கிடந்தால் உடலின் எடையைக் குறைக்க முடியாது

உடல் எடையை குறைக்க வேண்டும் என்பதற்காக, டயட் என்னும் பெயரில் பட்டினி கிடக்க வேண்டும் என்றோ, எப்போதும் கலோரி பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்றோ அவசியமில்லை. நன்றாக சாப்பிட்டுக் கொண்டே, சரியான முறையில் உடற்பயிற்சி செய்தாலும் உடல் பருமனை குறைக்க முடியும். கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், கொழுப்புச்சத்தை உடலில் சேர விடாமல், இருப்பதுதான். சரியான உடற்பயிற்சி மூலம் கொழுப்புச் சத்தை தசையாக மாற்ற முடியும். அதற்கான வழிகள் இதோ...

மாச்சத்து மிக்க,உணவுகளை எதிரியாக கருத வேண்டியதில்லை. உடனடியாக தேவைப்படும் ஆற்றலுக்காக உடல்,மாச்சத்தையே (கார்போஹைடிரேட்ஸ்) பயன்படுத்திக் கொள்கின்றது. மேலும் தசைகள் மற்றும் கல்லீரலுக்கு தேவைப்படும் கிளைகோஜனாகவும் மாற்றுகிறது. இவை போக எஞ்சியதே கொழுப்பாக மாற்றப்படுகிறது.

அரிசி, உருளைக்கிழங்கு போன்றவற்றை அளவோடு பயன்படுத்திக் கொண்டு காய்கறிகள் மற்றும் பழங்களை அதிகம் உட்கொள்ளலாம். இவை மாச்சத்தை வழங்குவதோடு நார்ச்சத்து, தாதுக்கள் மற்றும் வைட்டமின்களையும் கொண்டுள்ளன.



இவை எளிதாகவும், விரைவாகவும் பயன்படுத்தப்படுவதால், கொழுப்பாக மாறுவதில்லை. புரதச் சத்துக்காக மீன் உணவு பீன்ஸ் போன்றவற்றை சாப்பிடலாம். இந்த வகையில் அதிகமாக சாப்பிட்டாலும், உடல் எடை கூடிவிடுமோ என்ற அச்சம் தேவையில்லை.

நம்முடைய உடல் எப்போதுமே ரத்தத்தில் உள்ள சர்க்கரையை குறிப்பட்ட அளவில் வைத்திருக்க முயலும். பசித்திருக்கும் போது இனிப்பை சாப்பிட்டால் சர்க்கரையின் அளவு அதிகரிக்கும். பின்னர் தேங்கி விடும். இதனால் களைப்பும், பசியும் ஏற்படும்.

இந்த நிலையைச் சமாளிக்க சுலபமான வழி இரவுச் சாப்பாட்டை அளவோடு வைத்துக் கொள்வதுதான். இரவு நேரத்தில் கலோரிகளை சேர அனுமதித்தால் அவை ஆற்றலாக மாற்றப்படுவதில்லை. கொழுப்புச்சத்து சேர வைத்து விடுகிறது. இரவு சாப்பாட்டை மிதமாக வைத்துக்கொள்வதே இதற்கான தீர்வு.

உடற்பயிற்சி செய்த பிறகு உடல் செலவிடப்பட்ட ஆற்றலை புதுப்பித்துக் கொள்ள கலந்துக் கொண்டிருக்கும். இந்த நேரத்தில் பழங்கள், தயிர் போன்றவற்றைச் சாப்பிடுவது நல்லது.

உடற்பயிற்சி செய்த பிறகு 15 நிமிட இடைவெளியில் சதை மற்றும் கல்லீரலில் உள்ள கிளைகோஜன் வேகமாக புதுப்பிக்கப்படுவதாக ஊட்டச்சத்து நிபுணர்கள் கூறுகின்றனர்.

உடற்பயிற்சி தீவிரமாகவும் இருக்க வேண்டிய அவசியமில்லை.ஒரே போலவும் இருக்க வேண்டிய தேவை இல்லை. அவ்வப்போது உடற்பயிற்சி முறையை, மாற்றிக் கொள்ளலாம். காரணம், உடற்பயிற்சி முறைக்கு உடலும் பழகி விடுகிறது. இதனால் எதிர்பார்த்த பலன் கிடைப்பதில்லை. எனவே, 3 அல்லது 6 வாரத்திற்கு ஒருமுறை உடற்பயிற்சி முறையில் மாற்றம் செய்து, ஓடுவது ஜாகிங் செய்தவன் மூலம், உடற்பயிற்சியின் பலனை சீராகப் பெற முடியும்.

உங்களைப் போலவே உடலும் மாற்றத்தை விரும்பி வரவேற்கும் தெரியுமா? உடற்பயிற்சி மாற்றத்தின் மூலம்,அதிக வேலை செய்த தசைகளையும், ஆற்றலைச் செலவழிக்க வைக்கலாம்.

எப்போதெல்லாம் முடிகிறதோ ,அப்போது உடற்பயிற்சி செய்யலாம் என்றே சொல்லப்படுகிறது.எனினும் காலையில் உடற்பயிற்சி செய்வதே பயன்மிகுந்தது. அதிகாலை உடற்பயிற்சி உடலில் சேர்ந்திருக்கும் கொழுப்புச்சத்தை கரைக்கிறது.மேலும், காலை உடற்பயிற்சி, இதயத்துடிப்பை அதிகரித்து, தொடர்ந்து சீராக வைத்திருக்கிறது. எனவே, காலை மற்றும் மாலையில் முடிந்த அளவு உடற்பயிற்சி செய்வது நல்லது.

உடற்பயிற்சி செய்யுமுன் வெறும் வயிற்றுடன் இருக்கலாம். அன்று ஆப்பிள், வாழைப்பழம் போன்றவற்றை சாப்பிடலாம். 15 அல்லது 20 நிமிடத்திற்கு முன் சாப்பிட வேண்டும்.

தசைப்பிடிப்பு மிக்க உடல், அதிக கலோரிகளை கரைக்கக் கூடியது. தசைப்பிடிப்பு கொண்ட உடல் ஓய்வில் இருக்கும் போது கூட ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்கிறது.

எனவே,தசைப்பிடிப்பு ஏற்படக்கூடிய, எடை தூக்குதல் பயிற்சியை மேற்கொள்ளலாம். தசைப்பிடிப்பு இருக்கும் போது, ஓய்வு நேரத்திலும் கலோரி கரைக்கப்படுவதோடு உடற்பயிற்சிக்குப் பின் ஏதுவாக, ஆற்றல் புதுப்பிக்கப்படவும் ஆற்றல் பயன்படுத்தப்படுகிறது. தசைகளுக்குப் பயிற்சி அளிக்கும்போது அவை களைத்துப் போகும் வரை பயிற்சி செய்வதே ஏற்றது.



# கல்வியும் கலைத்திட்டமும்

கல்வியின் செயற்களமாக விளங்கும் கலைத்திட்டம் பற்றிய ஆய்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. வடிவம், உள்ளடக்கம், இயக்கம், இயங்குநெறி, இயங்குவிசை, இயங்குகளம் முதலாம் பல்வேறு பண்புகளின் அடிப்படையில் கலைத்திட்ட வடிவமைப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய ஆய்வுகள் பற்றிய அறிவு, ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், கல்விக் கொள்கை வகுப்போர் ஆகியோருக்கு மிகவும் வேண்டப்படுகின்றது.

கலைத்திட்ட மாதிரிகைகள் பெரும்பாலும் கருத்தியல் பின்புலத்தில் மேலெழுவதை அவதானிக்க முடியும். அத்தகைய மாதிரிகைகள் அனைத்தும் சமூக இயல்பை மீள உருவாக்கும் கருத்தியலுடன் இணைந்துள்ளமை யைத் தொடர்புபடுத்தி நோக்கும் பொழுதுதான் கல்வியின் செயலியக்கம் பற்றிய நடப்பியலைப் புரிந்துகொள்ள முடியும். கலைத்திட்ட மாதிரிகைகளைக் கூர்ந்து ஆய்வுக்கு உட்படுத்தும் பொழுதுதான் அவற்றுள் அடங்கிய கருத்தியல் விசை, உளவியல் செறிவு, உள்ளடக்கத் தகுதி, அறிவுக் கையளிப்பு, செயல் ஒழுங்கமைப்பு, கணிப்பீட்டு முறைமை முதலியவற்றின் நலன்களையும் மட்டுப்பாடுகளையும் தெளிவுற அறிந்துகொள்ளலாம்.

ஆசிரியத்துறையில் காலடி எடுத்துவைக்கும் ஒவ்வொருவருக்கும் கலைத்திட்டம் தொடர்பான அறிவு இன்றியமையாததாகும். பூரணமான கலைத்திட்ட மாதிரிகளை உள்ளடக்கி தமிழில் போதிய நூல்கள் வெளிவரவில்லையென்றே கூறவேண்டும். இலங்கையைப் பொறுத்தளவில், நாட்டில் இருக்கின்ற வரையறுக்கப்பட்ட வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி, எதிர்பார்த்த கல்வி இலக்கை அடைவதானால் பொருத்தமான கலைத்திட்ட மாதிரியைப் பயன்படுத்திக் கலைத்திட்டத்தை உருவாக்குவதுடன் மாத்திரம் நின்றுவிடாமல், அதனை முறையான விதத்தில் ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்திச் செல்லவும் வேண்டும். கலைத்திட்டத்தினுள் பாடசாலையில் கற்பிக்கும் பெருமளவு பாடங்கள் உள்ளடங்கியிருக்கும்.

''பாடசாலைக்கு உள்ளேயோ வெளியேயோ மாணவர்கள் தனித்தோ குழுவாகவோ பெற்றுக்கொள்ளும் அனைத்து அனுபவங்களும் கலைத்திட்டமாகும்'' என்று ஜோன் எப் கேர் குறிப்பிட்டுள்ளார். மாணவர்களை உளரீதியாகவும், உடல் ரீதியாகவும், மனவெழுச்சி ரீதியாகவும், சமூகரீதியாக வும், ஒழுக்கரீதியாகவும், அறரீதியாகவும் விருத்தி செய்வதில் கலைத்திட்டம் பெரும்பங்கு வகிக்கிறது. ''பாடசாலை யின் வழிகாட்டலின் கீழ் நிகழும் அனைத்துக் கற்றற் செயன்முறைகளும் அவை சார்ந்த அனுபவங்களுமே கலைத்திட்டமாகும்'' என்று நில்வினும், சூலரும் எடுத்தியம்பியுள்ளனர். கலைத்திட்டமானது பாட உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதுமாகும். பாடசாலையின் பணியாற்றல்களின் மூலம் பிள்ளைகள் பெறும் அனைத்து அனுபவங்களும் கலைத்திட்டமாகவே கொள்ளப்படும்.

''வெற்றிகரமாகச் செயற்படுத்தக்கூடிய வகையிலும் கல்விப் பிரேரனைகளின் இன்றியமையாக் கோட்பாடுகளையும் பண்புகளையும் முன்வைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியே கலைத்திட்டமாகும்.''

''மாணவர்களுக்கு தமது ஆற்றல்களின் உச்ச மட்டத்திற்குப் பொருத்தமான வாறு, உத்தேச கற்றல்பேறுகளை அடைவதற்கு உதவக்கூடியவாறாக பாடசாலையினால் வழங்கப்படும் திட்டமிடப்பட்ட சகல அனுபவங்களும் கலைத்திட்டமாகும்'' என்கிறார் எவான்ஸ். முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட கற்றல் பேறுகளுக்காக, மாணவர்களின் கற்றலை வழிப்படுத்துவதற்காகப் பாடசாலையினால் மேற்கொள்ளப்படும் திட்டமிடப்பட்ட அனைத்து முயற்சிகளும் கலைத்திட்டமாகும்.

கலைத்திட்டம் என்பதை வரையறுத்துக் கூறமுடியாது. மாணவர்களால் வெளிப்படுத்தப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் கலைத்திட்டமாகவே கொள்ளப்படும். ஜோன் எப்.கேர் என்ற கல்வியியலாளர் குறிப்பிட்டதற்கிணங்க அச்



செயற்பாடுகளும் அனுபவங்களும் பாடசாலையினுள் மாத்திரமன்றிப் பாடசாலைக்கு வெளியிலும் இடம்பெறமுடியும். மாணவர்கள் தனித்தனியே இயங்குவதனால் மாத்திரமன்றி குழுவாக இயங்குவதன் மூலமும் அந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

''ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தைகளை ஊக்குவித்து உறுதிப்படுத்துவதும், ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகளை இல்லாதொழிப்பதுடன் பூரணமான அறிவு, மனப்பாங்கு, திறன் என்பவை விருத்தி பெற உதவுவதற்காகப் பாடசாலையினுள்ளே அல்லது வெளியே தனியாகவோ, குழுவாகவோ ஆசிரியரின் உதவியுடனோ அல்லது இல்லாமலோ மாணவர்களுக்கு முன்வைக்கும் திட்டமிடப்பட்ட கற்றல் அனுபவங்களைக் கொண்ட கலைத்திட்டமே பூரண கலைத்திட்டமாகும்'' இதுவே முழுமையான கலைத்திட்டம் அல்லது பூரணமான கலைத்திட்டம் என்பதன் வரைவிலக்கணமாகும்.

கலைத்திட்டம் ஒரு முழுமையான செயற்பாடாகும். மாணவர்களில் விருத்தியை ஏற்படுத்தக்கூடிய அனைத்துப் பாடசாலைச் செயற்பாடுகளையுமே கலைத்திட்டம் குறித்து நிற்கிறது. முழுமையான பாடவிடயங்கள், செயற்பாடுகள், அனுபவங்கள், மணவர்களது பாடசாலை வாழ்க்கை போன்ற அனைத்தையும் கலைத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. கல்வியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைவதற்கு உதவுவதாகக் கலைத்திட்டம் உள்ளது. ✱

# சங்கீதம் படிக்கப்போன கழுதையின் கதை

# திண்ணன் என்ற மறவன் கதை

**பாரதியார் கதை**
**(சென்றவாரத் தொடர்ச்சி)**

என்ற வாக்கியத்தை எழுதி, அந்த நறுக்கோலையை மிகவும் அழகானதொரு பூமாலைக்குள் நுழைத்து வைத்து, அந்தப் பூவாணிச்சிப் பெண்ணிடம் கொடுத்து ''நீ இதை அரசன் மகள் முன்னாலே கொண்டுபோய் ஒருதரம் உதறிவிட்டு மாலையை அவனிடம் கொடு'' என்று சொல்லியனுப்பினாள். அவளும் அப்படியே பூமாலையைக் கொண்டு ராஜகுமாரியின் முன்னே ஒருதரம் உதறிய பின்பு, அதைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வீடுவந்து சேர்ந்தாள். ராஜகுமாரி அந்த நறுக்கோலை கீழே விழுந்து கிடப்பதைக் கண்டு அதையெடுத்து வாசித்தாள்.

''மன்னன் மகளே, காளை மறவன் என்ன செய்தால் உன்னைப் பெறலாம்?''

அங்கிரஸ் என்ற புரோஹிதப் பருந்து சொல்லுகிறது -

கேளாய் வீரவர்மராஜனே. அந்தப் பூவாணிச்சிப் பெண் மாலையை உதறியபோது நறுக்கோலை கீழே விழுவதை ராஜகுமாரி பார்த்தாள். பூவாணிச்சிப் பெண் அரண்மனையிலிருந்து தன் வீட்டுக்குத் திரும்பிப் போனவுடனே திண்ணன் அவளைக் கண்டு ''ராஜகுமாரியிடம் மாலையைக் கொடுத்தாயா?'' என்று கேட்டான். ஆமென்றாள். ''உதறினாயா'' என்று கேட்டான். ''செய்தேன்'' என்றாள். சரியென்று சொல்லிப்போய்விட்டான். மறுநாட் காலையில் பூவாணிச்சிப் பெண் வழக்கம்போல அரண்மனைக்கு மாலை கொண்டு போனாள். அப்போது ராஜகுமாரி அந்தப் பெண்ணிடம் ஒருநறுக்கோலையைக் கொடுத்து, நேற்று உன்னிடம் மாலை கொண்டு தந்த காளை மறவனிடம் இதைக் கொண்டு கொடு'' என்றாள்.

பூவாணிச்சிப் பெண் திகைத்துப் போய்விட்டாள். ''பயப்படாதே: கொண்டுபோ'' என்று ராஜகுமாரி சொன்னாள். பூவாணிச்சிப் பெண் நறுக்கோலையைக் கொண்டு திண்ணனிடம் கொடுத்தாள். அவன் வாசித்துப் பார்த்தான். அதிலே ''தெய்வமுண்டு'' என்றெழுதியிருந்தது.

பின்னொரு நாள் திண்ணன் தனியேயிருந்து யோசிக்கிறான்.

''இந்த அரசன் மகள் நம்மைப் பரிஹாஸம் பண்ணமாட்டாள். ஏதோ நல்ல வழிதான் காட்டியிருக்கிறாள். தெய்வத்தை நம்பினால் பயன் கிடைக்குமென்று சொல்லுகிறாள். சரி, அப்படியே நம்புவோம்,.... அந்தக் காலத்தில் தெய்வம் தவம் பண்ணுவோருக்கு நேரே வந்து வரம் கொடுத்ததென்று சொல்லுகிறார்கள். இந்த நாளில் அப்படி நடப்பதைக் காணோம்... அடா, போ! பழைய காலமேது? புதிய காலமேது? தெய்வம் எந்தக்காலத்திலும் உண்டு. தெய்வத்தைக் குறித்துத் தவம் பண்ணுவோம். வழி கிடைக்கும்'' என்று சொல்லி ஒரு காட்டுக்குப் போய், அங்கே காய் கனிகளைத் தின்று சுனை நீரைக் குடித்துக்கொண்டு தியானத்திலே நாள் கடத்தினான். அந்தக் காட்டில் இவனுக்கும் ஒரு வேடனுக்கும் பழக்கமுண்டாயிற்று. அந்த வேடன் இவனுடைய தவப்பெருமையையும், இவன் முகவொளியையும் கண்டு, இவனிடம் மிகுந்த பிரியங் கொண்டவனாய் இவனுக்கு மிகவும் சுவையுடைய தேனும் கிழங்குகளும் கொண்டு கொடுப்பான். இவன் வேடனுக்குத் தெய்வ பக்தியை ஏற்படுத்தினான். ஒருநாள் அந்த வேடன் இவனிடம் ஒரு மூலிகை கொண்டு கொடுத்து, ''இது மிகவும் ரஹஸ்யமான மூலிகை. இதைப் பத்திரமாக வைத்துக்கொள்ளு, ஒருவனுடம்பில் எத்தனை பெரிய புண் இருந்தாலும், இந்த மூலிகையில் ஒரு திணையளவு அரைத்துப் பூசினால், புண் இரண்டு ஜாமத்துக்குள் ஆறிப்போய் விடும்'' என்றான். அதை இவன் பத்திரமாக வைத்துக்கொண்டான். திண்ணன் குடியிருந்த பர்ணசாலைக் கருகே ஒரு பாம்புப் புற்றிருந்தது. அதில் கிழ நாகமொன்று வசித்தது. அதை ஒருநாள் வேடன் கண்டு கொல்லப்போனான். அப்போது திண்ணன் - ''ஐயோ, பாவம்! கிழப் பாம்பு. அதைக் கொல்லாதே; அது நெடுநாளாக இங்கிருக்கிறது. என்னை ஒன்றும் செய்வதில்லை. அதன் வழிக்குப் போகாதே'' என்று சொல்லித் தடுத்துவிட்டான். பின்னொரு நாள் அந்தப் பாம்பு தனியே செத்துக்கிடந்தது. அந்தப் பாம்பு சாகும்போது கக்கினதோ வேறென்ன விநோதமோ - அந்தப் பாம்புக்கருகே ஒரு பெரிய ரத்தினம் கிடந்தது. அதை நாகரத்தினமென்று திண்ணன் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டான். அன்றிரவே திண்ணன் ஒரு கனவு கண்டான். அதில் அவனுடைய இஷ்ட தேவதையாகிய மீனாட்சியம்மை தோன்றி'' உனது தவத்தால் மகிழ்ந்து உனக்கு நாகரத்தினம் கொடுத்தேன். இதைக் கொண்டுபோய் சௌக்யமாக வாழ்ந்துகொண்டிரு'' என்றாள். திண்ணன் அந்தக் கனவை நம்பவில்லை.

''நம்முடைய நினைவினாலேயே இந்தக் கனவுண்டாயிருக்கிறது. தெய்வமாக இருந்தால், ராஜகுமாரி வேண்டுமென்று தவஞ்செய்ய வந்தவனிடம் நாகரத்தினத்தைக் கொடுத்து வீட்டுக்குப் போகச் சொல்லுமா? செய்யாது. ஆதலால் இந்தக் கனவு தெய்வச்செய்கை யன்று. நம்முடைய மனதின் செய்கை'' என்று தீர்மானம் செய்து, அந்தக் காட்டிலேயே எப்போதும் போல தவஞ்செய்து கொண்டிருந்தான்

பிறகொருநாள், அந்தக் காட்டில் விக்கிரம பாண்டியன் வேட்டைக்கு வந்தான். அவன் திண்ணனைக் கண்டு ''நீர் யார்? இந்த வனத்தில் எத்தனை காலமாகத் தவம் செய்கிறீர்?'' என்று கேட்டான். அப்போது திண்ணன் சொல்லுகிறான்:-

''நான் பாண்டிநாட்டு மறவன். என் பெயர் திண்ணன். இங்கு பல வருடங்களாகத் தவஞ்செய்கிறேன். காலக்கணக்கு மறந்துபோய்விட்டது'' - என்றான்.

''என்னைத் தெரியுமா? நான் பாண்டிய நாட்டரசன்'' என்று பாண்டியன் சொன்னான்.

''தெரியும்'' என்று திண்ணன் சொன்னான்.

அரசன் இந்த மறவனுடைய அழகையும், ஒளியையும் கண்டு வியந்து, ''இந்த இளமைப் பிராயத்தில் இவ்வளவு [illegible] என்ன கருத்துடன் தவம் செய்கிறீர்?'' என்று கேட்டான்.

''மதுரையரசன் மகளை மணம் செய்யவேண்டித் தவம் செய்கிறேன்'' என்று திண்ணன் சொன்னான்.

அரசன் திகைப்படைந்துபோய், ''எங்ஙனம் கைகூடும்! அம்மவோ'' என்றான்.

''மீனாட்சி வேட்டவரம் கொடுப்பாள்'' என்று திண்ணன் சொன்னான்.

''மன்னன் மகளுக்கு நீ என்ன பரிசம் கொடுப்பாய்? என்று பாண்டியன் கேட்டான்.

(தொடரும்...)



# இளம் பெண் மூக்கை அறுத்து மானபங்கம்

ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ஒதுக்குப்புறமான கிராமம் அது.

நள்ளிரவு நேரம்... ஆயிஷா அசந்து தூங்கிக்கொண்டு இருந்தாள். திடுதிடுவென வீட்டுக் கதவு தட்டப்பட்டதில் அதிர்ந்து எழுகிறாள். வெளியே அவளது கணவனும், கணவனது குடும்பத்தினரும் ஆக்ரோஷமான அதட்டல்களுடன் கதவைத் திறக்கச் சொல்லி கத்திக்கொண்டு இருக்கிறார்கள். உடனே, உயிர் பயத்தில் ஆயிஷாவின் உடல் உதறத் தொடங்க, இறைஞ்சும் பார்வையுடன் அவள் தனது தந்தையைக் கையெடுத்துக் கும்பிடுகிறாள். ''நான் கதவைத் திறக்கலைன்னா, அதை உடைச்சுடுவாங்க'' - என்று ஆயிஷா அழுகிறாள். சில நொடிகள் மகளை வெறித்துவிட்டுக் கதவைத் திறந்துவிடுகிறார் தந்தை.

கண்களில் கொலை வெறியுடன் ஆவேசமாக உள்ளே பாய்கிறார்கள் அவர்கள். ''இனி, அவள் எங்கேயும் ஓடக்கூடாது. அவளுக்கு என்ன செய்யிறது என்று எனக்குத் தெரியும்... அவளை இழுத்துட்டு வாங்க!'' - என்று அந்தச் சின்ன கும்பலுக்கு உத்தரவிடுகிறான் ஆயிஷாவின் கணவன். வீட்டின் தட்டுமுட்டுச் சாமான்களுக்கு மத்தியில் ஒளிந்து இருந்த ஆயிஷாவை தலைமுடியைப் பற்றி இழுத்து வருகிறான் அவளது மச்சினன். ஆயிஷாவின் இரு கைகளையும் முறுக்கிப் பிடித்துக்கொண்டு அவளது கணவன் முன் நிறுத்துகிறார்கள். கையில் இருக்கும் துப்பாக்கியை உள்ளேவைக்கும் அவன், கூர்மையான கத்தி ஒன்றை எடுக்கிறான்.

திமிறக்கூடத் தெம்பு இல்லாத ஆயிஷா தன் சக்தி அனைத்தையும் திரட்டிப் போராடுகிறாள். ம்ஹூம்... ஆயிஷாவின் வலது காதை இழுத்துப் பிடிக்கிறான் அவளது கணவன். ''உன் அழகுதானே உன்னை வீட்டைவிட்டு ஓடவைச்சது. இனி எப்படி ஓடுவாய் என்று பார்க்குறேன்!'' - என்றபடி சரக்கெனக் கத்தியால் காது மடலை வெட்டுகிறான். மற்றொரு காதையும் துண்டாக்குகிறான். அதற்கு முன் அடி உதைகளுக்கு மட்டுமே பழக்கப்பட்டிருந்த ஆயிஷாவுக்கு அந்த இரத்தக் காய வலியைக் காட்டிலும் அதிர்ச்சிதான் அதிகமாக உறைக்கிறது. குபு குபுவெனப் பெருகும் இரத்தம் காதுகளை நனைத்து கன்னம் வழியே இறங்குகிறது. விஷமச் சிரிப்புடன் ஆயிஷாவின் மூக்கை இழுத்துப் பிடிக்கிறான் அவளது கணவன். ரத்தம் தோய்ந்த கத்தியை அப்படியே...

தரையில் கிடக்கும் தன் அங்கத்தைப் பார்த்ததும் கண்கள் இருண்டன ஆயிஷாவுக்கு. இரத்த இழப்பு அதிகரிக்க மூர்ச்சையாகி விழுகிறாள் ஆயிஷா. அதன் பிறகு என்ன நடந்தது என்று அவளுக்குத் தெரியாது.

சுமார் ஒன்பது மாதங்கள் கழித்து, இப்போது முகமாற்றுச் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்கிறாள் ஆயிஷா. 'ரைம்' பத்திரிகையின் அட்டையில் வெளிவந்த அந்தப் படத்தை முதலில் நம்பத்தான் முடியவில்லை. ஆனால், அப்படி நம்ப முடியாத சம்பவங்கள்தான் ஆப்கானிஸ்தானில் இப்போதும் நடந்துகொண்டு இருக்கின்றன.

ஆயிஷாவின் மாமா உள்ளூர் சண்டை ஒன்றில் ஒருவரைக் கொன்றுவிட்டார். அதற்கு ஈடாக அந்தக் குடும்பத்தினருக்கு ஆயிஷாவையும் அவளது தங்கையையும் வழங்கினார் ஆயிஷாவின் தந்தை. 12 வயதில் பூப்பெய்தியதும் ஆயிஷாவை அந்தக் குடும்பத்தில் ஒருவனுக்குக் கட்டிவைத்தனர். தலிபான் படையைச் சேர்ந்தவன் அவன். வருடத்தின் பல நாட்கள் அவன் தலைமறைவாகவே இருப்பான். வீட்டுக்கு வரும் மிகச் சில நாட்களில் ஆயிஷாவை ஆசை தீர அடித்துத் துவைப்பது அவனுக்குப் பிடித்த விளையாட்டு. மற்ற நாட்களில் சக்கையாகப் பிழியும் வேலைப் பளுவுக்கு இடையில் அடிமை - அகதி - துன்பம் இவைகளையே அனுபவித்துக்கொண்டு இருந்தாள் ஆயிஷா. ஒரு கட்டத்தில், அடி தாங்க முடியாமல் வீட்டை விட்டுத் தப்ப முயற்சித்தாள் ஆயிஷா. அந்தக் குற்றத்துக்காக காந்தஹார் நகரில் உள்ள பெண்கள் சிறையில் அடைத்தனர் காவலர்கள். அங்கே இருந்து ஆயிஷாவின் தந்தை அவளை மீட்டுவந்தார். மனைவி திரும்பிவிட்டாள் என்று அறிந்ததும், கணவன் அவளுக்கு அளித்த வரவேற்புத்தான் மேற்குறிப்பிட்ட சம்பவம்.

''ஆப்கானில் தலிபான்கள் அடக்கி ஒடுக்கப்பட்டுவிட்டார்கள். ஜனநாயகம் தழைத்து, மலர்ந்து, பட்டொளி வீசிப் பறந்துகொண்டு இருக்கிறது'' என்ற போலி பிரசாரம் மீண்டும் பல்லிளித்திருக்கிறது. ஆப்கானின் உள்ளார்ந்த பகுதிகளும் கிராமங்களும் இன்னமும் தலிபான்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. அங்கு அவர்கள் வைத்ததுதான் சட்டம். ஒரு பெண் குழந்தைகூட பள்ளிக்குச் செல்லும் காட்சியை அங்கே காணமுடியாது. இதுபற்றி ஆப்கன் அதிபர் ஹமீத் கர்சாயிடம் கேட்டால், ''என்ன செய்வது? பள்ளிக்குச் செல்லும் உரிமை வழங்குவதைக் காட்டிலும் பெண்களை உயிருடன் நடமாடவைப்பது இங்கு பெரும் சாதனை!'' - என்கிறார் விரக்தி கலந்த வார்த்தைகளில்!

ஆப்கான் தொலைக்காட்சியின் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சமூக சேவகி ஒருவர் சொன்னது இது... ''ஆப்கானிஸ்தான் வீதிகளில் குறைந்தபட்சம் ஆறு அடி இடைவெளி விட்டுத்தான் கணவனைப் பின்தொடர்ந்து மனைவி நடந்து வரவேண்டும். நிவாரணப் பணிகளுக்காக ஒரு கிராமத்துக்குச் சென்றிருந்தபோது அங்கு ஒரு தம்பதியினர் நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். ஆனால், ஆச்சரியம்... கணவனுக்கு ஆறு அடிகள் முன்பாக மனைவி சென்று கொண்டிருந்தார். எனக்குப் பயங்கர சந்தோஷம். உடனே ஓடிச்சென்று, அவளது கணவனைப் பாராட்டினேன். அமைதியாகக் கேட்டுக்கொண்டு இருந்தவன், ''இந்தப் பகுதியில் புதைத்துவைக்கப்பட்டிருந்த பல கண்ணிவெடிகள் இன்னும் அகற்றப்படவில்லை. அதனால்தான் என் மனைவியை எனக்கு முன்னால் நடக்கச் சொல்லி, அவள் பாதங்கள் கடந்த பாதையில் நான் நடக்கிறேன்'' - என்றான் அவன். நான் நிலைகுலைந்துவிட்டேன். இதுதான் ஆப்கானில் பெண்களின் நிலை.

ஆப்கானின் பாஸ்தூன் கலாசாரப்படி கணவனின் குடும்பத்துக்கு அவப் பெயர் தேடிக்கொடுத்த மனைவி மூக்கை இழந்தவள் போன்றவளாம். அதனால்தான் ஆயிஷாவின் மூக்கைத் துண்டித்திருக்கிறான் அவளுடைய கணவன்.

ஆயிஷாவுக்கு இப்போது 18 வயது. உலகம் முழுக்க இருந்து ஆதரவுக் கரங்களும் நிதி உதவிகளும் குவிவதால், தன் வாழ்க்கை புனரமைக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் அமெரிக்கா கிளம்பிச் சென்றிருக்கிறாள். தன் கணவனின் குடும்பத்தாரிடம் சிக்கியிருக்கும் தன் 10 வயதுத் தங்கையின் நிலை மட்டுமே இப்போதைக்கு ஆயிஷாவின் பெருங்கவலை. தன் மீதுள்ள கோபம், ஆத்திரம் அவளிடம்தான் பிரதிபலிக்கும் என்பதுதான் காரணம். ஒரு வார்த்தைகூட எழுதப் படிக்கத் தெரியாத ஆயிஷாவுக்கு 'ரைம்' பத்திரிகை என்றால் என்னவென்றே தெரியாது. இயல்பாகவே கூச்ச சுபாவம் கொண்ட ஆயிஷா, அந்த சம்பவத்துக்குப் பிறகு தனக்கு நெருக்கமானவர்களிடம் கூட முகத்தை மறைத்தபடியேதான் பேசுகிறார். அவரது முகத்தை அட்டையில் தாங்கிய பத்திரிகையின் பிரதி ஒன்றைக் கொடுத்தவுடன், அவசர அவசரமாக அவர் செய்த முதல் காரியம்... அந்தப் புத்தகத்தின் நடுப்பகுதியைக் கைகளால் மறைத்ததுதான். ✱

நன்றி - இணையம்


காணி தேவை

வவுனியா, மதவாச்சி,
புளியங்குளம், மாங்குளம்

மேலே குறிப்பிட்ட பிரதேசங்களில் நீர், மின்சார வசதிகளுடனான சுமார் ஐந்து (05) ஏக்கர் பரப்பளவுடைய வெற்றுக்காணி தொழிற்சாலை அமைக்கத் தேவை.

பிரதான பாதையில் அல்லது பிரதான பாதையிலிருந்து நாலு கிலோ மீற்றருக்கு (4km) மேற்படாத தூரத்தில் பாதை அருகில் காணி இருப்பது அவசியம்.

முழு விவரங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

சிரேஷ்ட முகாமையாளர்
த.பெ.இலக்கம் 26, கொழும்பு.
தொலைபேசி : 0777318612, 0114356209
மின்னஞ்சல் : mvland2010@gmail.com


# எந்திரன் பட விநியோக உரிமைக்காக முட்டி மோதும் விநியோகஸ்தர்கள்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு படம் நடித்தாலும், அவர் படம் வெளியாகும் தினமே திரையுலகின் திருவிழா என்பார்கள் ரசிகர்கள். ஒவ்வொரு படம் வெளிவரும்போம் அதை நிரூபித்து வருகிறார் ரஜனி.

இப்போது வெளிவரும் எந்திரன் படம் தமிழ்த் திரையுலகின் அத்தனை சாதனைகளையும் முறியடித்துக் கொண்டிருக்கின்றது. ஓடியோ விற்பனையில் இனி வேறு எந்தப் படமாவது இந்தச் சாதனையில் பாதியையாவது நெருங்குமா என்று கேட்கும் அளவுக்கு மிரள வைத்திருக்கிறது எந்திரன். இதுவரை நான்கு தடவைகள் மறுபதிப்பை வெளியிட்டுள்ளது 'திங்க் மியூசிக்' நிறுவனம்.

எவ்வளவு பெரிய இசையமைப்பாளர்கள் இசையமைந்திருந்தாலும் சில ஆயிரம் சிடிக்கள் விற்றாலே பெரிய விடயம் என்ற நிலைதான் இன்று நிலவுகிறது. ஆனால் ரஜினியின் எந்திரன் சிடிக்களோ வெளியான சில தினங்களில் 7 லட்சத்துக்கும் அதிகமாக விற்றுத் தீர்ந்திருப்பதாக விற்பனையாளர்கள் வியக்கிறார்கள்.

இந்தப் படத்தின் விநியோக உரிமையை பெரும் விலைக்கு விற்றுள்ளது 'சன் பிக்சர்ஸ்'. இந்திய சினிமா சரித்திரத்தில் மாநில மொழிப் படம் ஒன்று பிற மாநிலங்களில் அதிகமான விலைக்கு விற்பனையாகி இருப்பது இதுவே முதல் முறை. குறிப்பாக கேரளாவில் மம்முட்டி, மோகன்லால் படங்களின் விநியோக உரிமை இதில் பாதி கூடக் கிடையாது.

இதுவரை தமிழகம் மற்றும் உலக உரிமை விற்பனை விடயத்தில் மௌனம் சாதித்து வருகிறது 'சன் பிக்சர்ஸ்'. தமிழக உரிமையைப் பெறுவதில் பெரும் போட்டி நிலவுகிறது. ஆனால் இன்னும் யாருக்கும் விற்பனை செய்யப்படவில்லை.

குறிப்பாக சென்னை நகர உரிமையைப் பெறுவதில் பெரும் விநியோகஸ்தர்கள் முட்டி மோதுகின்றார்கள். ரஜினியின் 'சிவாஜி' பட உரிமையை வாங்கியவர்கள் வாங்கிய விலையை விட இரண்டு மடங்கு இலாபம் பெற்றனர். அந்த நப்பாசையில் என்ன அதிகமான விலை கொடுத்தாவது எந்திரன் உரிமையை வாங்கிவிடவேண்டும் என்று துடிக்கின்றனர்.

ஆனால் ஒரு விடயம் நிச்சயம். எந்திரன் படத்தின் விற்பனை உரிமை என்பது தமிழ் சினிமா, கனவிலும் நினைத்திராத பெரும் விலைக்குக் கைமாறவிருக்கிறது. ''இந்த பெருமைக்கெல்லாம் சொந்தக்காரர் சூப்பர் ஸ்டார் ரஜனி காந்த் தான். இவரை விட வேறு யாராலும் இந்தச் சாதனையை நிகழ்த்த முடியாது'' - என்கிறார் விநியோகப் பிரதிநிதி ஒருவர்.

# குயில்கள் வாழும் தேசம்...

சிறுகதை

''மிஸ்டர் சண்முகநாதன்..! இந்த உலகத்தில சகலத்துக்கும் ஓர் ஆயுட்காலம் பாவனைக் காலம் (எக்ஸ்பரிடேட்) இருக்கிறது. உடம்புக்கு வாகணங்களுக்கு எல்லாத்துக்குமே இது பொருந்தும். உங்களுக்கு எழுபத்திரண்டு வயசு..! சொ..! இந்த வயசில உங்களுக்கு மறதி, தலைச்சுத்து, தள்ளாட்டம் எல்லாம் சகஜம்... கடுமையான வேலைகளைச் செய்யாமல் நீங்கள் தான் நல்லா ஓய்வு எடுத்து உடம்பைப் பார்த்துக்கொள்ள வேண்டும்...!''

மருத்துவர் புன்னகைத்துக்கொண்டே கூறியது சண்முகநாதனுக்கு காதுக்குள் எதிரொலித்துக் கொண்டிருந்தது. வெயில் ஏறத்தொடங்கி வீதியில் இறங்கவே உடம்பு எரிந்தது. உடம்பு வரவர பலவீனமாவதை உணர்ந்தார். மருத்துவ பரிசோதனை நிலையத்தில் சிறுநீரை பரிசோதிக்க கொடுத்துவிட்டு அனிதாவிற்கு பால்மா வாங்க வேண்டுமென்ற ஞாபகம் வர கடை கடையாக ஏறியிறங்கினார். தேடியலைந்து ஒரு கடையில் இருக்க விலை கேட்டார். அவர்கள் இருநூறு ரூபா அதிகமாக கூற வாக்குவாதப்பட்டார். பால்மா எங்குமே வாங்க முடியாதென்பதை உணர்ந்து பெருமூச்சை விட்டுக் கொண்டே பணத்தைக் கொடுத்தார். கிராமஅலுவலரின் அலுவலகத்தினுள் நுழைய அங்கு எக்கச்சக்கமான சனங்கள் காத்திருந்தார்கள்.

''விதானையார் இல்லை..! ஆமிக் காம்பில கூட்டமென்று போயிட்டார். வர கொஞ்சம் லேட்டாகுமாம்...'' மதிலோரம் பீடி புகைத்துக்கொண்டிருந்த நண்பர் சிவராசா சொன்னார்.

''இனி நாளைக்கும் புதன் கிழமை வரமாட்டார். அதுதான் இப்படிச் சனம் காத்து நிற்குது. நீ ஏன் நிற்கிறாய்..?'' சண்முகநாதன் சைக்கிளை மதிலோடு சாத்திவிட்டு கேட்டார்.

''மூத்தவளுக்கு கலியாணம் சரி வந்திட்டுது. அதுதான் அவளை வெளியில அனுப்பப் போறன். ஒஸ்ரேலியா மாப்பிள்ளை. மூத்தவளை ஒரு மாதிரி செய்து குடுத்திட்டா கொஞ்ச காலம் இருந்திட்டு அடுத்தவளைப் பற்றி யோசிக்கலாம். பொம்பளைப் பிள்ளையளுக்கு கலியாணம் சரி வரும் போது செய்து வைச்சிர வேணும். உனக்கென்ன ஒரேயொரு பொம்பளப் பிள்ளை. ஒரு பிரச்சினையில்லை...'' சிவராசா சொல்ல.. சண்முகநாதன் விரக்தியுடன் சிரித்தார்.

''இன்றைய இந்த நாட்டு நிலமையில பிள்ளைகளே பெறக்கூடாது.. ஒரு பிள்ளையென்றாலும் வைச்சிருந்து பார்த்தாத்தான் தெரியும். என்ர பேரப்பிள்ளையின்ர எதிர்காலத்தை நினைக்க நெஞ்சு கொதிக்குது. நெருப்பைக் கட்டி மடியில வைச்சிருக்கிறன். மைதிலிக்கு கிளியரன்ஸ் எடுக்கிறது பற்றி கதைக்கத்தான் வந்தனான். மனிசரைப் போட்டு அலைக்கழிக்கிறாங்கள்.!''


''யாழ்ப்பாணத்தின்ர நிலமையைப் பார்த்தியே? சொந்த ஊருல வாழுறதுக்கு எத்தினை பதிவுகள் செய்யவேண்டிக் கிடக்குதென்று! அடையாளஅட்டை பதிவு, குடும்பப்பதிவு, குடும்பப்படபதிவு, மோட்டசைக்கிள்பதிவு, சைக்கிள்பதிவு, செல்போன்பதிவு கடவுளே இது எங்க போய் முடியுமோ தெரியேல்லையே?'' சிவராசா அலுத்துக்கொண்டார்.

''இதோட முடியுதே? நாளைக்கே செருப்புக்குள்ள வெடிகுண்டு வைச்சா வைச்சிருக்கிற செருப்புக்களையும் ஆமிக்காம்பில பதியச்சொல்லுவாங்கள் பாருங்கோ!'' கூட நின்றவர் சொல்ல மற்றவர்கள் வேதனையுடன் சிரித்தார்கள்.

''சிரிக்கிறீங்கள்...? எல்லாம் நடக்கும்..! எல்லா கேவலங்களும் தமிழருக்குத்தான்..! எங்கட கஷ்டத்தைப் பார்த்து ஒருத்தரும் - ஒரு நாடும் கவலைப்படவில்லை. பிறகென்ன சர்வதேசம் மண்ணாங்கட்டி..?'' அவர் ஆவேசமாய் சொல்ல..

''நீங்கள் வேற..! சர்வதேசம் ஏன் கேட்க வேணும்...? எங்களுக்குள்ள ஒற்றுமையில்லை. பதினைஞ்சு பிரிவாய்ப் பிரிஞ்சு நிற்கிறம்... அரசியலை விட்டுட்டு வேற கதை பேசுவம்..!''

''எங்கட சனமும் சேர்ந்துதானே எல்லாம் நடக்குது. இந்த சண்டையை வைச்சு எத்தினை பேர் உழைக்கினம் தெரியுமே? இது



தமிழன்ர குணம். எரியிற வீட்டுல பிடுங்குற குணம்.!''

அவரவர்க்கு ஏதேதோ பிரச்சினைகள் எல்லாவற்றையும் சண்முகநாதன் அமைதியாய் கேட்டுக் கொண்டிருந்தார். அவரின் சிந்தனை... எப்படியாவது மைதிலியையும் அனிதாவையும் கொழும்பிற்கு அழைத்துசென்று...

கிராம அலுவலர் தனது பழைய மோட்டார்சைக்கிளில் கரகரத்தபடி வந்திறங்கினார். கறுத்த புகையை மோட்டார்சைக்கிள் கக்கியபடியே தடதடத்து நின்றது. காத்திருந்தவர்கள் ஆரவாரப்பட அவர்களைப் பார்த்து முகத்தைச்சுழித்தார்.

''ஊரே திரண்டு வந்திருக்கிறியள். ஆர்மிக்காறார் பதியுங்கோ என்று சொல்லி வாய்மூடவில்லை. நீங்களோ இங்க பதிய அள்ளுப்பட்டு நிக்கிறீங்கள். உங்களையும் திருத்துறது கஷ்டம்.!''

''நீங்கள் சொல்லுவியள் ஜீ.எஸ்..! பிறகு செக்கிங் ரவுண்டப்பென்றால் என்ன செய்யிறது? இளம்பிள்ளைகளைப் பிடிச்சுக்கொண்டு போயிற்றா என்ன செய்யேலும்? யாரிட்டப்போறது?'' யாரோ உரத்துச் சொன்னார்கள்.

''முதல்ல சின்னவேலைக்கு வந்தவர்களை அனுப்பீற்றுத்தான். மற்ற குடும்பப் பதிவு பமிலி போட்டோ வேலை பார்க்கலாம். ஏனென்ரா அதுகள் கவனமாய் ஆறுதலாய்ச் செய்ய வேணும். இல்லாட்டி நான்தான் ஜெயிலுக்குப் போக வேணும்...!'' எல்லோரையும் நோட்டம் விட்டுக் கொண்டே சொன்னார். சண்முகநாதனைப் பார்த்ததும் உடன் அழைத்தார். சண்முகநாதன் அமைதியாய் அவர் முன் அமர்ந்து கொண்டு வந்த கடிதத்தை நீட்டினார்.

''மிஸ்டர் சண்முகநாதன் உங்கட பிரச்சினையைப் பற்றி காம்ப் கொமாண்டருடன் பேசினான். உங்கட மருமகனைப் பற்றி சந்தேகப்படுகினம். அவரைப் பற்றிய விசாரணைகள் நடந்து கொண்டிருக்காம். அந்த விசாரணைகள் முடியும் வரை அவரோடு தொடர்புடைய நீங்கள் ஊரைவிட்டு வெளியில போகமுடியாதாம்!'' கிராம அலுவலர் தன் நெற்றியைத் தடவிக் கொண்டே சொன்னார்.

''என்ன ஜீ.எஸ்..! அப்பாவிக் குடும்பஸ்தனை சந்தேகப்படுறதென்று சொல்லூறீங்களே? அவன் தான் காணாமற்போய் ரெண்டு வருசமாகுதே? இந்த விசாரணை முடியுமா..? இந்த நாட்டுல காணாமற்போனவங்கள் யாராவது திரும்பவும் உயிரோடு வந்ததா வரலாறு இருக்கா..? நீங்கள் இந்த உண்மைகளை சொல்ல வேண்டிய இடங்களுக்குச் சொல்லி மைதிலியையாவது காப்பாற்ற வழி செய்ய வேணும்..!''

''எப்படி முடியும்..? என்னையும் உங்களோடு தொடர்பென்று சந்தேகப்படுவாங்கள். இந்தக்காலத்துல எந்தப் புற்றில எந்தப் பாம்பு இருக்குதென்று தெரியாது. நீங்களும் மனிதவுரிமை ஆணைக்குழுவில முறையிட்டும் பேப்பரில போட்டும் தேவையில்லாத எதிர்ப்புக்களை சேர்த்திட்டீங்கள். உயிரோட இல்லாதவனுக்கு போராடப் போய் இப்ப உயிரோட இருக்கிறவங்களுக்கு ஆபத்தை வாங்கீட்டீங்கள். நான் பிள்ளைக்குட்டிக்காரன்..!''

''என்ன ஜீ.எஸ்...?! எல்லாம் தெரிஞ்சு நீங்களே இப்படி சொன்னா நாங்கள் என்ன செய்யிறது? இது ஒரு மனிதாபமான உதவி.. ஒரேயொரு கடிதம் மட்டும் தந்திங்களென்றா போதும்..!''

''இப்ப கூட மீறிறீங் வைச்சு இதைத் தான் சொன்னவங்கள். எதாவது பிழை நடந்தா ஜீ.எஸ் தான் முழுப்பொறுப்பு. ஆட்களைத் தான் உள்ள தூக்கிப் போடுவாங்களாம். எனக்கெதுக்கு வீண் வம்பு..? என்னை என்ன செய்யச்சொல்லுறீங்கள்..?''

''அவள் தான் சுகமில்லாமல் இருக்கிறாளே... இங்க வைத்தியம் செய்யமுடியாதென்று தானே வெளிநாடு கொண்டு போய் வைத்தியம் செய்யப்போறம். எல்லாத்துக்கும் மறுத்தால் என்ன செய்யிறது..? எதாவது வழி நீங்கள் தான் சொல்லவேணும்..!'' சண்முகநாதன் வேதனையில் உரத்துக் கேட்க கிராமஅலுவலர் நிமிர்ந்து பார்த்தார்.

''என்னோட ஏன் சண்டைக்கு வாறீங்கள்...? நீங்கள் அவசியமென்றா ஆமிக்காம்பில போய்க் கதைச்சு கிளியரன்ஸ் எடுங்கோ! அவ்வளவு தான் செய்ய முடியும்..!'' கிராமஅலுவலர் சொல்லிவிட்டு மற்றவர்களைப் பார்க்க சண்முகநாதன் சோர்ந்து போய் எழுந்துகொண்டார். தலை கிறுகிறுக்கத் தொடங்கியது.. மெதுவாக சைக்கிளை நிமிர்த்தி தள்ளாடியவாறே உழக்கி இராணுவமுகாமிற்கு சென்றார். அங்கும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வெளி நகரங்களிற்கு செல்ல அனுமதி பெறுவதற்காக காத்திருந்தார்கள். வரிசையில் நீண்ட நேர காத்திருப்பற்குப் பின்னர் சண்முகநாதன் அந்த முகாம் பொறுப்பதிகாரி முன்னமர்ந்தார். அவருடைய கடிதங்கள் வைத்தியரின் சிபாரிசுகளை பார்த்துவிட்டு அந்த அதிகாரி உதட்டை பிதுக்கினார்.. 'அந்த விசாரணை முடிந்த பின்தான் எதுவும் செய்யலாம்' என்று வழக்கம்போலவே கூற சண்முகநாதன் மௌனமாக திரும்பினார்.

****

இராஜேஸ்வரி சாப்பாட்டுக் கோப்பையை அருகில் வைக்க மைதிலி சிலும்பிய தலையை விலக்கி இரண்டு கைகளாலும் சோற்றை அள்ளி தன் வாயினுள் திணித்தாள். விழுங்க முடியாமல் விக்கினாள். புரக்கேற பருக்கைகள் தெறிக்க இருமினாள். மூக்கினாலும் உதட்டிலிருந்தும் நீர் வடிந்தது. இராஜேஸ்வரி அருகிலிருந்த துணியால் துடைக்க திமிறினாள். அனிதா பயத்துடன் சண்முகநாதனிடம் ஓட அனிதாவைத் தூக்கிக்கொண்டு வந்து பார்த்து ''என்ன செய்யிறாள். சாப்படுறாளா..?'' கேட்டார்.

''எல்லாம் கவிட்டுக்கொட்டுறாள். சாப்பாடு குடுக்கிறதென்றா பெரிய கஷ்ரமாய் இருக்கு. சாப்பிடாமல் இருந்தா எப்படி?'' எப்பதான் இவளுக்கு விடிவு வரப்போகுதோ தெரியேல்லையே. இராஜேஸ்வரி சொல்லிக்கொண்டே கோப்பையை இழுக்க மைதிலி சோற்றைக் கொட்டி நிலத்தில் தேய்க்கத்தொடங்க...

''சீச்சீ... விடு விடு... சாப்பிடாட்டி இரு..! இப்படிக்கொட்டி சிந்தாமல் விடு... எல்லாம் புளிச்சு நாறப் போகுது'' இராஜேஸ்வரி சொல்லிக்கொண்டே கோப்பையை பிறிக்க மைதிலி சோற்றை அள்ளிய கையால் தலைச் சொறிந்தாள்.

''எப்ப இனி குளிக்க வார்க்கிறது..?''

''முந்தாநாத்து தான் வார்த்தது. நாளைக்குப் பார்ப்பம். யாரும் உதவிக்கு வந்தாத்தான் முடியும்.. என்னால தனிய குளிக்க வார்க்க முடியாது...!''

''சோற்றை முகம் தலையெல்லாம் பிரட்டி வைச்சிருக்கிறாளே? மணக்கப் போகுது...!''

''துடைச்சுவிடுறன். நாளைக்கு வார்க்கலாம். டொக்டர் எல்லாரோடும் நல்லாய் பழக விடட்டாம். இவளிருக்கிற நிலமையில எப்படி வெளியில விடுறது..? இவளுக்கு அனிதாவையே அடையாளம் தெரியேல்லையே..?''

''சுகந்தலாமாதிரியை மட்டும் அன்றைக்கு கண்டு சிரிச்சவள் தானே...

(21 ஆம் பக்கம் பார்க்க)

கந்தர்மடம்
- தி. மயூரன் -







### அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் மேஷ ராசி அன்பர்களே!

எடுத்த காரியங்கள் இனிதே நிறைவேறும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். நல்ல பலன் கிடைக்கும். என்றாலும், தேவையற்ற பயணங்களையும் நண்பர்களிடம் முக்கிய விடயங்களை விவாதிப்பதையும் தவிர்ப்பது நல்லது.

உத்தியோகஸ்தர்கள், அலுவலகத்தில் எதிர்பார்க்கும் பணஉதவி கிடைக்கும். சுயதொழில் புரிபவர்கள் அதிக லாபம் பெற்றாலும் செலவுகளும் இருக்கலாம். வாடிக்கையாளரிடம் சுமூகமாக நடந்துகொள்வது அவசியம்.

கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் நல்ல வாய்ப்புகளைப் பெறுவர். புதிய ஒப்பந்தங்கள் நல்ல வருமானம் கொண்டு வரும். பெண் கலைஞர்கள் அதிக வாய்ப்புப் பெறுவர். பங்குச்சந்தை வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்ட எண்கள்: 5,7,9. அதிர்ஷ்ட நிறம்: பச்சை அதிர்ஷ்டக்கிழமை: புதன்.




### கார்த்திகை 2,3,4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீடம் 1,2ஆம் பாதங்கள்

நீதி நேர்மையுடன் ஆன்மிக எண்ணமும் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!

பல நன்மைகள் உங்களைத்தேடி வரும். ஆனால் வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களும் சந்திராஷ்டமம் உள்ளதால் இந்த நாட்களில் மன சஞ்சலமும், செயல்களில் குழப்பமும் இருக்கும். புதிய பொருட்களை வாங்குதல், பணப்பரிமாற்றங்கள் ஆகியவற்றில் கவனம் தேவை.

உத்தியோகஸ்தர்கள் பொறுப்புகளைக் கவனமாகச் செய்வது அவசியம். சுயதொழில் செய்பவர்கள் நல்ல வளர்ச்சியைக் காண்பார்கள். கூட்டுத்தொழில் சிறப்பாக நடைபெறும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9 அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.




### மிருக சீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3 ஆம் பாதங்கள்

அனைவரையும் கவரும் வகையில் காரியங்களில் வெற்றி பெறும் மிதுன ராசி அன்பர்களே!

உங்களுக்கு ஞாயிறு, திங்கள், செவ்வாய் காலை 8.45 மணிவரை சந்திராஷ்டமம் உள்ளதால் முக்கிய நபர்களைச் சந்திப்பது, பணம் சம்பந்தமான ஒப்பந்தங்களில் கையெழுத்து போடுவது போன்றவற்றைத் தள்ளிவைப்பது நல்லது. வெளிப் பயணங்களின்போது கவனம் தேவை.

உத்தியோகஸ்தர்கள் பிறர் வேலைகளில் தலையிட்டு வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் இருப்பது சிறந்தது. சுயதொழிலில் இருப்பவர்களுக்கு தொழிலில் ஏற்றம் உண்டு. சுறுசுறுப்பும் உற்சாகமும் மேம்படும். பங்குச்சந்தையில் நல்ல லாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட எண்கள்: 2,7,9 அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்




### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

கண்டிப்புடன் இருந்தாலும் பிறருக்கு உதவும் மனம் படைத்த கடக ராசி அன்பர்களே!

எடுத்த காரியங்களில் இதுவரை இருந்த தடைகள் நீங்கும். என்றாலும், செவ்வாய் காலை 8.45 மணி முதல் புதன் மற்றும் வியாழன் வரை சந்திராஷ்டமம் இருப்பதால் உங்கள் முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படக்கூடும்.

உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு பதவி உயர்வு கிடைத்து வேறு இடங்களுக்கு செல்லக்கூடும். இடமாற்றம் கேட்டு காத்திருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கலாம். சுயதொழிலில் உள்ளவர்கள் சுமாரான பலன்களைப் பெறுவர். கூட்டு வியாபாரத்தில் உள்ளவர்களில் ஒருவர் தனியே பிரிந்து சென்று தொழில் தொடங்க முயல்வார். கணக்குகளை கவனமாகக் கையாளுவது நல்லது. அதிர்ஷ்ட எண்கள்: 1,3,7 அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள் அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்




### மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

செயல்களில் நிதானத்துடன் ஈடுபட்டு வெற்றி பெறும் சிம்ம ராசி அன்பர்களே!

முயற்சிகளில் சுறுசுறுப்பும் உற்சாகமும் கொண்டு வெற்றி பெறுவீர்கள். வங்கி மற்றும் நிதி நிறுவன அதிகாரிகளைச் சந்திப்பது, அரசு அலுவலர்களைக் கண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பது போன்றவை வெற்றிகரமாக நடக்கும்.

உத்தியோகஸ்தர்கள் பொறுமையுடனும், கவனமுடனும் பொறுப்புகளில் ஈடுபடுவது அவசியம். சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்கு சிறு தடைகள் வரக்கூடும். கலைஞர்கள் தங்கள் தொழிலில் திருப்பம் காண்பர். பங்குச்சந்தை சுமாரான லாபம் தரும். நிலையான பங்குகளை தேர்ந்தெடுத்து வாங்குவது நல்லது. அதிர்ஷ்ட எண்கள்: 1,8,9 அதிர்ஷ்ட நிறம்: நீலம் அதிர்ஷ்டக்கிழமை: சனி




### உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை, 1,2 ஆம் பாதங்கள்

தன்னம்பிக்கையுடன் உழைத்து வெற்றி பெறும் கன்னி ராசி அன்பர்களே!

உங்கள் முயற்சிகள் வெற்றி பெறும் வாரம் இது. எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணம் கைக்கு வந்து சேரும். திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். வடதிசையில் இருந்து நல்ல செய்தி வரும்.

உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு பதவிமாற்றம் ஏற்பட்டு குடும்பத்துடன் சேர்ந்து வாழும் வாய்ப்பைப் பெறுவர். சுயதொழிலில் லாபம் அதிகரிக்கும். கலைஞர்கள் தங்கள் துறையில் நல்ல வளர்ச்சி காண்பர். பங்குச்சந்தையில் நல்ல லாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட எண்கள்: 2,7,9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்




### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

மலர்ந்த முகத்துடன் காரியங்களில் ஈடுபட்டு வெற்றி காணும் துலாம் ராசி அன்பர்களே!

இந்த வாரம் உங்களுக்கு நன்மைகள் பலவற்றை அள்ளித் தரும் வாரமாக அமைகிறது. அலுவலக அதிகாரிகளையும், வங்கி மற்றும் இதர நிதி சம்பந்தமானவர்களையும் இந்த வாரத்தில் சந்தித்தால் எண்ணிய காரியம் உடனே நிறைவேறும். மந்தமான சூழ்நிலை மாறி சுறுசுறுப்பும் உற்சாகமும் உண்டாகும். பொருளாதாரத்தில் உயர்வும், செயல்களில் முன்னேற்றமும் அடைவீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். கலைஞர்கள் பழைய ஒப்பந்தங்களில் மீண்டும் கவனம் செலுத்துவார்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்ட எண்கள்: 1,6,9 அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள் அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்




### விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

பார்த்த உடனே பறரை எடைபோடும் திறன்கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!

புதிய சூழ்நிலைகள் இந்த வாரம் உங்களை வரவேற்க காத்திருக்கின்றன. நிலம் சம்பந்தப்பட்ட சச்சரவு சமரசமாக மாறும். பழைய கடன்களை அடைக்க வாய்ப்பு உண்டாகும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, உயரதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவற்றைப் பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள். தயாரிப்புப் பணியில் உள்ள இயந்திரங்களின் பழுதுகளை நீக்கவும், மேம்படுத்தவும் முயற்சி செய்வீர்கள். கூட்டுத்தொழிலில் நண்பர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் லாபம் கிடைக்கும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளால் உற்சாகமாக இருப்பார்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். அதிர்ஷ்ட எண்கள்: 1,5,7 அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, ஆரஞ்சு அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு.




### மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

பேசும் திறமையால் வெற்றிகளைக் குவிக்கும் தனுசு ராசி அன்பர்களே!

பணம் கடன் வாங்கினாலும், கொடுத்தாலும் கவனம் தேவை. செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் அளவாகப் பழகுவது அவசியம். உறவினர் வருகை மனதிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

உத்தியோகஸ்தர்கள் தங்கள் பொறுப்புகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். சுயதொழில் செய்பவர்களுக்கு ஊழியர்களால் சிறு தொல்லைகள் ஏற்படலாம்.

கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களால் மனமகிழ்ச்சி அடைவார்கள். பங்குச்சந்தையில் எதிர்பாராத திருப்பம் உண்டு. அதிர்ஷ்ட எண்கள்: 2,6,9 அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள் அதிர்ஷ்டக்கிழமை: திங்கள்




### உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

அனுபவ ஞானமும், நுண்ணறிவும் கொண்ட மகர ராசி அன்பர்களே!

உங்கள் சிந்தனையும், செயலும் வலுப்படும். ஏற்றமான பலன்கள் தேடி வரும். நண்பர்கள் வருகையால் சில காரியங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் கவனமாகச் செயல்பட்டால் மட்டுமே மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியும். பதவி உயர்வு காரணமாக சிலர் வெளிருக்கு செல்ல நேரிடும். கலைஞர்கள் தங்கள் தொழிலில் புதிய திருப்பம் காண்பர். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். விருதுகள் பாராட்டுக்கள் கிடைக்கும். வெளிநாட்டுப் பயண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9 அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை அதிர்ஷ்டக்கிழமை: புதன்




### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

கற்பனை வளமும், எழுத்தாற்றலும் பெற்ற கும்பராசி அன்பர்களே!

சூழ்நிலையை நல்லவிதமாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள். இடைறுகள் அகன்று இன்பம் கூடும். சுபகாரியங்கள் நடைபெற முயற்சிகள் மேற்கொள்வீர்கள். மேற்கு திசையில் இருந்து வரும் நல்ல தகவல் உங்களை உற்சாகப்படுத்தும்.

உத்தியோகஸ்தர்கள் சம்பள உயர்வு, பதவி உயர்வுடன் இடமாற்றம் பெறும் வாய்ப்பும் உள்ளது.

குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். திருமணம் சம்பந்தமான தடைகள் நீங்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆரோக்கியம் உண்டாகும். குழந்தைகளுக்கு சிறுசிறு நோய்கள் ஏற்பட்டு அகலும். பங்குச்சந்தையில் நல்ல லாபம் உண்டாகும். அதிர்ஷ்ட எண்கள்: 2,5,7 அதிர்ஷ்ட நிறம்: வெண்மை அதிர்ஷ்டக்கிழமை: திங்கள்




### பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

உறுதியான உள்ளத்துடன் எல்லா செயல்களிலும் வெற்றிபெறும் மீன ராசி அன்பர்களே!

மனதில் உற்சாகமும், செயல்களில் வெற்றியும், அளிக்கும் சிறந்த வாரமாகும். முக்கிய மனிதர்கள் சந்திப்பு, அரசாங்க அதிகாரிகளைப் பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். ஆலய தரிசனங்களுக்கு குடும்பத்தோடு வெளி செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

உத்தியோகஸ்தர்கள், எதிர்பார்க்கும் பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவற்றைப் பெற கடுமையான முயற்சிகள் தேவைப்படும். வெளி பயணங்களில் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள்.

பெண்களுக்கு பாராட்டும் புகழும் கிடைக்கும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கிடைத்தாலும், வருமானம் எதிர்பார்க்கும் அளவுக்கு இருக்காது. அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9 அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு

# ஆண் பாவம்...!



"எல்லோரும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறார்கள். ஆனால், எங்களால் முடியவில்லை. நாங்கள் சிக்கிச் சீரழிந்துகிடக்கிறோம்." - இப்படிச் சொல்வது பாலஸ்தீனம் அல்லது இலங்கை அகதிகள் அல்ல. இந்தியாவில் மனைவியால் பாதிக்கப்பட்டு 'வாழ்க்கை இழந்தவர்கள்' தான் இப்படிக் கூறுகிறார்கள். இவர்கள் 'அகில இந்திய ஆண்கள் நல சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கி, அதன் மூன்றாவது ஆண்டு மாநாட்டை கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற இந்திய சுதந்திர தினத்தன்று ஏற்காட்டில் நடத்தி இருக்கிறார்கள்!

2005 ஆம் ஆண்டு கொல்கத்தாவை சேர்ந்த ஸோரூப் சம்ஹாரி என்பவரால் தொடங்கப்பட்டதுதான் இந்த அமைப்பு. மனைவிமார்களால் அதிகம் பாதிக்கப்பட்டதற்கு நிவாரணம் தேடவோ.... ஹனிமூன் ஜோடிகளுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்றோ... சுற்றுலாத் தலங்களாகப் பார்த்து மாநாடுகளை நடத்தி வருகிறார்கள். முதல் மாநாட்டை சிம்லாவிலும், இரண்டாம் மாநாட்டை கோவாவிலும் நடத்தி முடித்தவர்கள், இம்முறை அந்த மாநாட்டை ஏழைகளின் ஊட்டியான ஏற்காட்டில் நடத்துகிறார்கள்.

இந்த அமைப்பின் தமிழக மாநிலத் தலைவர் பிரான்ஸிஸ் தெரிவிக்கையில், "எனது மனைவி இன்னொருவனுடன் படுக்கையில் இருந்ததைப் பார்த்துவிட்டேன். ஆனால், என் மீது வரதட்சணை வழக்குப் போட்டு 500 பவுன் நகைகளும், 75 லட்சம் பணமும் கேட்டு பெண்வீட்டார் மிரட்டினார்கள். நானும் என் பெற்றோரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டோம். உலகத்தில் அரபு நாடுகளில் கூட இங்கு இருப்பது போல கணவர்களுக்கு எதிரான சட்டங்கள் இல்லை. இங்கு ஆண்களுக்கு எதிராக சுமார் 30 கிரிமினல் சட்டங்கள் இருக்கின்றன. ஆண்கள் சார்பாக ஒரு சட்டமும் இல்லாத நிலையில், பெண்கள் சார்பாக 84 சட்டங்கள் இருக்கின்றன.

திருமணமான ஆண் இன்னொரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்து இருந்தால், தண்டனை உண்டு. ஆனால், பெண் கள்ளத்தொடர்பு வைத்து இருந்தால் தண்டனை எதுவும் கிடையாது!

ஓர் இளைஞர் ஒரு பெண்ணைக் காதலித்துவிட்டு ஏமாற்றினால், சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், ஒரு பெண் ஓர் ஆணைக் காதலித்துவிட்டுக் கை கழுவிவிட்டுச் சென்றால் நடவடிக்கை கிடையாது. இதுபோன்ற சட்டங்கள் இருப்பதால்தான் பெண்கள் துணிச்சலுடன் தவறு செய்கிறார்கள். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் இதுபோன்ற சட்டங்களால் ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 512 ஆண்கள் தண்டனை பெற்று இருக்கிறார்கள். இந்திய ஜனாதிபதியான பிரதீபா பாட்டீலின் சகோதரர் தொடங்கி, அர்ஜுன்சிங், செம்மலை, எஸ்.எஸ்.சந்திரன், பிரசாந்த் எனப் பிரபலமான குடும்பங்கள்கூட பெண்களால் இதுபோல் பழிவாங்கப்பட்டு இருக்கிறார்கள்..." என்று ஒரு வி.ஐ.பி. பட்டியலைப் போட்டார்.

அகில இந்தியத் தேசியத் தலைவர் ஸோரூப் சம்ஹாரி, தெரிவிக்கையில் "நான் டெல்லியில் வசிக்கிறேன். என் அனுமதி இல்லாமல் என் மனைவி கருக்கலைப்புச் செய்தார். இதனால், மனரீதியாகப் பாதிக்கப்பட்டேன். அப்போதுதான் வலைத்தளம் மூலம் மனைவியால் பாதிக்கப்பட்டவர்களை ஒருங்கிணைத்து இந்த அமைப்பை ஏற்படுத்தினேன். இதில் சேர சந்தா எதுவும் கிடையாது. இலவசம்தான். இப்போது 84 ஆயிரம் பேர் இந்த அமைப்பில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆண், பெண் பாகுபாடு இல்லாமல் சட்டம் சமமாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

சமீபத்தில் நடத்தப்பட்ட தேசியக் குற்றப் புள்ளியியல் ஆய்வில் ஒரு வருடத்துக்கு மனைவியால் பாதிக்கப்பட்டு 58 ஆயிரம் ஆண்கள் தற்கொலை செய்திருக்கிறார்கள். 32 ஆயிரம் பெண்கள் மட்டுமே ஆண்களால் பாதிக்கப்பட்டுத் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்று தெரிய வந்துள்ளது. கால்நடைகளைப் பாதுகாக்கக்கூட இங்கு அமைப்புகள் இருக்கின்றன. ஆனால், ஆண்களைப் பாதுகாக்க அமைப்புகள் இல்லை. அதனால், பாதிக்கப்பட்ட ஆண்கள் எங்களை .498., .. என்ற வலைத் தளத்தில் தொடர்புகொண்டால் கட்டாயம் உதவுவோம்!" என்றார் நம்பிக்கையுடன். ★

## குயில்கள் வாழும் தேசம்...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்களும் கொஞ்சம் அலுப்பைப் பார்க்காமல் இவளை சுத்தமாக வைச்சிருந்து வாற போறாட்களுடன் பழக விட்டாத் தான் எதாவது தெளியும்.. இல்லாட்டி அவிட்டு வெளியில தான் விடவேணும். எதாவது நாங்களும் முயற்சி செய்து பாக்க வேணும்.. எவ்வளவு காலமாச்சு..!" சொல்லிக் கொண்டே சண்முகநாதன் வெளியே நகர்ந்தார். இன்னும் பயத்தில் அனிதா அவரின் கழுத்தை இறுக்கக்கட்டிக் கொண்டிருந்தாள்..

"எவ்விளவு றை பண்ணீட்டம். இனி நடக்கிறதுதான் நடக்கும்.. எங்களாலேயும் முடிஞ்சதை தானே செய்ய முடியும்..? அனிதாவே கிட்டப்போக வெறுக்கிறாள்..? என்ன செய்யமுடியும்..? ஒரு முறை வெளியில விட்டுப் பட்டபாடு தெரியும் தானே.. எங்கேயாவது போயிட்டா ளென்றா பிறகு தேடி என்ன பிரயோசனம்..?" இராஜேஸ்வரி சொல்லிக்கொண்டே அறையைப் பூட்டி வெளியே வந்தாள்.

"இந்தக்குழந்தையை நினைக்கத்தான் கவலையாயிருக்கு.. பாவம் துள்ளித் துடிக்க வேண்டிய வயதில இப்படியாச்சுதே..? தாய்ப்பாலும் குடிக்காமல் தாயன்பும் கிடைக்காமல் தகப்பனையும் காணாமல் வளருதே..? என்ன பாவம் செய்ததோ தெரியேல்லையே...?"

சண்முகநாதன் அறுபது வயதுவரை பிரதேசசபையில் எழுதுவினைஞராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். ஒரே மகள் மைதிலி அருகிலிருந்த பாடசாலையொன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருக்கையில் சக ஆசிரியர் தீபனை காதலித்து வந்தாள். வேறு மதம் வேறு சாதியென்றாலும் சண்முகநாதன் அவற்றையெல்லாம் பார்க்காமல் திருப்தியுடன் திருமணம் செய்து வைத்தார்.. பெண் குழந்தை பிறக்க அனிதா என்று பெயரிட்டார்கள். சமாதானம் முறிவடைந்து சண்டை தொடங்கும் வரை எல்லாம் நிம்மதியாயிருந்தது. தீபன் சாவகச்சேரிக்கு தனது அத்தையை பார்க்கச்சென்றவன் செல்லும் வழியில் நடைபெற்ற சுற்றிவளைப்பில் காணாமல் போயிருந்தான். இவர்கள் துடிதுடித்து தேடாத இடமில்லை.. செய்யாத முயற்சியில்லை. சண்முகநாதன் செய்த கடும் முயற்சியினால் ஊடகங்களில் அடிக்கடி செய்தி வந்து சற்றே பிரபல்யமாகி எல்லோருடைய கவனிப்புக்கும் சிலருடைய கோபத்துக்கும் ஆளாகியதனால் ஊரைவிட்டு வெளியே செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. தீபனுடன் காணாமல் போன பலரின் உடலெச்சங்கள் இடையிடையே கண்டுபிடிக்கப் பட்டுக்கொண்டிருக்க, மைதிலி தீவிரமாய் சிந்தித்து சித்தப்பிரமை பிடித்து அந்த அறையினுள்ளேயே முடங்கிவிட்டாள்.. பெருக்கெடுத்து ஓடிய ஆறு ஓய்ந்தது போல ஒடுங்கிவிட்டாள். சில நாட்கள் அமைதியாக இருப்பாள். சில நாட்கள் அழுது ஆர்ப்பாட்டம் செய்து சங்கிலியில் குருதி வழிய குதித்துப்புரள்வாள்.. அந்த நாட்களில் இராஜேஸ்வரியின் கந்தசஷ்டி கவசம் சத்தமாக கேட்கும்..

ஓட்டோக்காரன் சண்முகநாதனுடன் சேர்ந்து மைதிலியை பிடித்துத் தாங்கியவாறு கதிரையில் கொண்டு வந்து அமர்த்திவிட்டு சற்றுத்தள்ளி நின்று கொண்டான். வீட்டுக்கு அருகிலேயே வசிப்பதனால் நல்ல உதவி. வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் போதெல்லாம் அவனையே நாடுவதனால் வைத்திய சாலை நடைமுறைகளும் பழகிவிட்டான். அவளை அமர்த்தியதும் அவனே ஓடியாடி சகல வேலைகளையும் பார்ப்பான். வைத்தியசாலை நிறைந்து ஹோ என்ற இரைச்சலாயிருந்தது. அந்த பரபரப்புகளிலும் சோகம் நிரம்பியிருந்து. அந்த நோயாளிகளை அடக்குவதற்கு அழைத்து வந்திருந்தவர்கள் படாதபாடு பட்டுக்கொண்டிருந்தனர். வழமையாக அட்டகாசம் செய்யும் மைதிலி இன்று அமைதியாக இருந்தாள்..

"எப்படி இப்ப..? எதாவது முன்னேற்றம் இருக்கா..?" அந்த இளம் மருத்துவர் மைதிலியைப் பரிசோதித்துக் கொண்டு சின்னக்கண்களை உருட்டிக்கொண்டே கேட்டார். தொடர்ச்சியாக வந்து போவதனால் அந்த மருத்துவர் நல்ல சிநேகமாகி விட்டிருந்தார். இராஜேஸ்வரியும் சண்முகநாதனும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள்.. இராஜேஸ்வரி கண்கள் குளமாக... மூக்கைச் சீறிக்கொண்டே சொன்னரள்.

"எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை.. வரவர மோசமாகிற மாதிரி இருக்கு..!"

"நோ..நோ..! இதம்மா காய்ச்சல், வையித்துப்போக்கில்லை.. மருந்து குடுத்து ஒருகிழமையில சுகமா கிறதுக்கு.. கொஞ்சக்காலம் பொறுமையோட இருக்க வேணும். நோயாளியை பராமரிக்கிற நீங்கள் தான் இன்னும் மனத்துணிவோடு நம்பிக்கையோடு இருக்கவேணும்...!" மருத்துவர் கண்ணாடியை கழற்றிக் கொண்டே கூற

"என்ன டொக்டர்..! ரெண்டு வருசமாகப்போகுது..! இன்னும் எவ்வளவு காலத்துக்கு இந்த கஷ்டம்..? நாங்களும் களைச்சுப்போனம்..! மைதிலியின்ர குழந்தையின்ர நிலை என்ன..? அந்தப் பிள்ளையை நினைக்கத்தான் பெரிய வேதனையாயிருக்கு.. தாயையும் தகப்பனையும் பறிகொடுத்து நிற்குது.. எங்களுக்குடைய காலமும் போயிட்டுது.. இன்னும் எத்தனை காலத்துக்கு எங்களால பராமரிக்க முடியும்..?" இராஜேஸ்வரி கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சொல்ல, மருத்துவர் பெருமூச்சை உதிர்த்தார்.

உங்கட கஷ்டம் எனக்கு விளங்குது.. அந்தக்குழந்தை வளர்ற நேரம் இப்படியான துயரம் பிள்ளையையும் பாதிக்கப் போகுது. பிள்ளையின் எதிர்காலத்தைப் பற்றி முடிவெடுக்கவேணும். பிள்ளையை கொஞ்சம் பிரித்து வேற எங்கையாவது விடுறதுதான் எல்லாருக்கும் நல்லது..!"

"எப்படி டொக்டர்..? அனிதா ஒருத்திதானே எங்களுக்கு ஆறுதல்..! அவளையும் வேற யாருக்கும் கொடுத்துட்டு நாங்கள் எப்படி வாழுறது..? நாளைக்கே மைதிலிக்கு சுகமாகி அனிதாவைத் தேடினா என்ன செய்யிறது..?"

"அப்படியில்லையம்மா..! மைதிலிக்கு சுகமாகும்.. ஆகாமலே போகும்.. ஒரு வருசத்தில சுகமாகும் இல்லை பத்துவருசத்தில சுகமாகும்.. அது வரையும் அனிதா இந்த சூழ்நிலையில வளர்க்கிறது பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.. உங்களுக்கும் வயது போகுது..! இனி அவளை வளர்த் தெடுக்கிறது பெரும் சிரமம்தானே..? என்ன நான் சொல்லுறது..?" மருத்துவர் அவர்களை கூர்ந்து பார்த்துக் கொண்டே கேட்டார்.

"உண்மைதான் டொக்டர்..! அனிதாவின்ர வாழ்க்கையைப் பற்றித்தான் நாங்களும் யோசிக்கிறம். எங்களுக்கு பிறகு அவளை பராமரிக்கிறதுக்கு சொந்தபந்தமோ நட்புக்களோ இல்லை. எதாவது முடிவெடுக்கத் தான் வேணும்.. ஆனா ,அனிதாவை பிரிய மனமில்லை அதுதான்..?"

"அதுக்கும் நல்லவழிகள் இருக்கு..! இப்பிடியான பிள்ளைகளைப் பராமரிக்கிற கிறிஸ்தவ, இந்து அமைப்புகள் இருக்கு..! உங்களுக்கு விருப்பமான அமைப்பின் பொறுப்பில் அனிதாவை விடலாம். அவர்கள் சிறப்பாக பார்த்துக்கொள்வார்கள்.. இப்படியான குழந்தைகள் பலவற்றை சேர்த்துவிட்டிருக்கிறன்.. பயப்புடத்தேவையில்லை..!" மருத்துவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்..

"அப்பாவிப் பெடியனைக் காணவில்லை... இருக்கிறானா இல்லையா தெரியேல்லை.. மைதிலியை வெளிநாடு கொண்டு போய் ரீற்மென்ட் கொடுக்கலாமென்றா அதுக்கும் முடியவில்லை..! வேண்டாம் டொக்டர்.. இந்த நாட்டுல எங்கயும் நிம்மதியிருக்காது.. அவளை இந்த நாட்டுல யாரிட்டயும் கொடுத்துட்டு நொந்து சாகவேண்டி வரும்.. ஏதோ நடக்கிறது நடக்கட்டும்..!" சண்முகநாதன் கவலையுடன் பார்த்துக் கூற..

"சரியாய்ச் சொன்னீங்கள்..! இனிமேல் இந்த நாட்டுல நிம்மதி வரவே மாட்டாது.. அதுக்காக இந்த மாதிரிக் குழந்தைகளின்ர வாழ்க்கையைப் பற்றி சிந்திக்காமல் இருக்க முடியாது.! நீங்கள் விரும்பினா அதுக்கும் வழியொன்று இருக்கு..!" மருத்துவர் தனது குறுந்தாடியைத் தடவிக் கொண்டே கூற சண்முகநாதனும் இராஜேஸ்வரியும் அவரையே கண்கொட்டாமல் பார்த்தார்கள்...

"என்ர சிங்கள பிரண்ட் ஒருத்தன் ஒஸ்ரேலியாவில நல்ல வசதியாயிருக்கிறான்.. அவனும் டொக்டர் தான். நல்லவன்! ஆனா பிள்ளைகுட்டியில்லை.. அவனுக்கு ஒரு தமிழ்ப் பிள்ளையை தத்தெடுத்து வளர்க்க ஆசை...! உங்களுக்கு சம்மதமென்றா அவனுக்குக் கொடுக்கலாம். ஒருத்தராலும் முடியாத நல்லதொரு வாழ்க்கையை அனிதாவிற்கு ஏற்படுத்திக் கொடுப்பான்..!" மருத்துவர் கூறி முடிக்க சண்முகநாதன் இராஜேஸ்வரியைத் திரும்பி பார்த்தார்.

"தமிழனின்ர பிள்ளை சிங்களப்பிள்ளையா வளர்றதா அப்படி இப்படியென்று தத்துவமோ கிரந்தமோ பேசிப் பிரயோசனம் இல்லை! எங்கேயோ இந்தப்பிள்ளை சந்தோஷமாக இருந்து வளர்ந்தாச் சரி. வெளிநாடு தான் நிம்மதியாயிருக்க ஒரே சரியான வழி. நீங்கள் ஆகவேண்டியதை பாருங்கோ..!" சண்முகநாதன் கைகூப்பியவாறு கூற இராஜேஸ்வரியும் பெருகும் கண்ணீரோடு சம்மதமென தலையை ஆட்டினாள்.

வெளியே அனிதா ஓட்டோவில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்..

( முற்றும் ) ★

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்த தொடரில் வன்னி மகள் எஸ்.கே.சஞ்சிகா எழுதிய 'இயலாமை' என்ற உண்மைக்கதையில் வெளி வந்துள்ளது.

# இயலாமை



**வன்னி மகள்**
**- எஸ்.கே.சஞ்சிகா-**

முன்புறமாய் குடை பிடித்த படி ஓங்கி வளர்ந்திருந்த காட்டு மரங்களில், பறவைகள் விடியற் கீதம் இசைத்தன. இளங்கதிரோனின் கீற்றுக்கள் மெல்லத் தலை நீட்டத் தொடங்கின. துள்ளி எழுந்த கதிரேசன், சோம்பல் முறித்த வயோதிபத் தாயைப் பார்த்துப் புன்னகைத்தான். தன் எதிரே கிடந்த தண்ணீர்க் கலன்களில் இருந்து நீரை எடுத்து முகத்தை நன்கு கழுவி புது மனிதனாகினான். அவனுடைய மனநிலையைப் போலவே அவன் குடும்பத்தவர்கள் மன நிலையும். அவர்கள் யாவரும் தமது சொந்த இடத்திற்குப் போகும் ஆவலில் அறிவித்தலை எதிர்நோக்கி காத்திருந்தனர்.

முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் கடைசிநாளில் தான் அவனது குடும்பம் இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வந்தது. எத்தனையோ இடர்களைத் தாண்டி முகாமில் அடைபட்டு சொல்லெணாத் துயரங்களை அனுபவித்து. இன்றுதான் புதிய விடியலை அனுபவிக்க முடிகிறது. ''என்ர சொந்தக் காணிக்கிள்ள போய் சின்னக் கொட்டில் போட்டு என்ர கிணற்றுத் தண்ணியை குடிச்சால் தான் எனக்கு நிம்மதி'' எனக் கதிரேசன் அடிக்கடி கூறிக்கொள்வான்.

''என்னப்பா எங்கட கனகாம்பிகை அம்மனை எப்ப தரிசிப்பன் என்று கிடக்குதப்பா'' இது அடிக்கடி அவனது மனைவி கூறும் வார்த்தை. அவர்களது ஏக்கங்களுக்கு தீர்வாக இன்று சொந்தக் இடத்திற்கு மீள்குடியேற்ற நடவடிக்கை ஆரம்பமானது அவர்களுக்கு சந்தோசமே.

அறிவித்தல்கள் படையினரால் கொச்சைத்தமிழில் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மீளக்குடியமர கதிரேசன் பெயர் ஏற்கனவே அறிவிக்கப்பட்டி ருந்தது. ஆனாலும் அறிவிப்புகள் சரிபார்க்க அறுவத்தெட்டுத் தரம் அறிவிப்பார்கள். யாவரும் புறப்பட்டார்கள். பேருந்தில் ஏற்றப்பட்டார்கள். அது அவர்களைச் சுமந்து நகர்ந்தது. அவனுடைய மனச் சிறகு எதிர்காலக் கனவுகளை அசைபோட்டுச் சிறகடித்தது.

கிணற்று நீரை ஆசைதீர அள்ளிப் பருக வேணும். சின்னக் கொட்டிலாக முதலில் போட்டுக் கொண்டு, இருந்து கொண்டு காணியைத் துப்பரவாக்கி விட வேணும். கிணற்றடிப் பக்கத்தால வேண்டி வைச்சிருக்கிற தக்காளி, மிளகாயை, கீரையைப் போடவேணும். முதல் கையால இறைப்பம் பிறகு நீரிறைக்கும் இயந்திரத்தை வாங்கலாம் தானே. அவனது கனவுகள் நீண்டு கொண்டிருந்தன.

இரண்டு பெண் பிள்ளைகளையும் பதிவு செய்தவுடன் விடுதிக்கு அனுப்பிவிட வேணும். அது பாதுகாப்பானது. கழுகுகளையும், வல்லூறுக்களையும் வைச்சுக்கொண்டு கோழிக்குஞ்சு வளர்க்கலாமோ? என்று அவனது மனம் அச்சப்பட்டது. பிறகென்ன நானும் என்ர மனுசயும் மகன்ர பெடியனும் தானே (பேரப்பிள்ளை) கொஞ்சம் கொஞ்சமாக கனவுகள் நீண்ட பொழுது தான் ''தாத்தா தாத்தா அங்கபாருங்கோ'' என்று கவனத்தை திருப்பியது அந்த மழலைக் குரல்.

கதிரேசனுடைய ஒரே ஒரு மகன் விட்டுச் சென்ற யுத்தப் பரிசு அவன் (பேரன்). தாயும் தந்தையும் நிவாரணம் எடுக்கச் சென்ற போது இறந்துவிட, பாதுகாப்பாக அவருடன் இருந்த அந்தக் குழந்தை மட்டும் தப்பியது.

''தாத்தா தாத்தா'' அந்தக் குரலில் அவனின் குறும்பில் தனது மகனைக் காண்கிறான். ''என்னப்பா'' என அணைத்து அன்போடு தலையைத் தவுகிறான். தார் வீதிகளையும் உயரமான வவுனியாவின் கல்வீடுகளையும் பேரன் புதினமாக கதிரேசனுக்கு காட்டிக் கொண்டிருந்தான். இவையாவும் எங்கட சொந்த இடங்களிலும் உண்டுதான். ஆனாலும் நீண்ட இடைவெளிக்குப் பிறகு காணும் போது அந்தச் சிறுவனுக்கு புதுமையாகவே இருந்திருக்க வேண்டும். சிறிது நேரத்தின் பின்னர் உறங்கிவிட்டான்.

பேருந்து கிளிநொச்சியை நெருங்கிக் கொண்டிருந்தது. பல இடங்களில் மரஞ்செடிகள் இல்லாமல் பாதுகாப்பு அரண்கள் முளைவிட்டு இருந்தன. போரின் தடங்களை மரஞ்செடிகள், இடிபாடடைந்த வீடுகள் யாவுமே பறைசாற்றிக் கொண்டிருந்தன. ஏ9 அகலமாகக் காட்சிதந்தது ஏனைய சிறு வீதிகளில் பற்றைகள் மண்டிக்கிடந்தன. கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குள் பேருந்து சென்று நின்றது. ஆமிக்காரன்ர பதிவு, புலனாய்வுப் பிரிவினரின் பதிவு, புகைப்படமெடுப்பு எல்லா நடைகத்திற்குப் பின்னரும் விசாரிப்பு கிராமஅலுவலரிடம் ஒப்படைப்பு.

''எப்ப எங்கட இடத்துக்கு விடுவாங்கள்'' எனக் கிராம அலுவலரிடம் விசாரித்தான் கதிரேசன். ''நாளைக்கு விடுவதாக சொல்லுறாங்கள்'' என்று கிராமஅலுவலர் கூறியபடி நகர்ந்தார்.

''அட பக்கத்தில இருக்கிற என்ர ஊருக்குப் போக நான் படுகிற பாட்டைப்பார்'' என்று மனைவியிடம் தன்ர ஆதங்கத்தை வெளியிட்டான். அவளது மௌனமே பல மொழி கூறியது.

ஒரிடத்தில் அமர்ந்தான். சாந்தபுரக் கிராமம் நீர்வளமும், பயிர்ச் செய்கை வளமும் நிரம்பிய வளமான பூமி. அந்தக் கிராமத்தில் தான் அவனது பாட்டன், பூட்டன் பரம்பரையாக, ஆண்டாண்டு காலமாக உழவு செய்தும், கனகாம்பிகைக்குளம், இரணைமடுக் குளங்களில் மீன் பிடித்தும் வாழ்க்கைச் சீவியத்தை நகர்த்திக் கொண்டு, செம்மையாக வாழ்ந்தனர். தன்னுடைய கிராமத்தின் வாசனையை நினைக்கவே அவனுக்கு இனிமையாக இருந்தது.

அடுத்த நாள் அவர்கள் தமது கிராமத்தில் இறக்கி விடப்பட்டார்கள். அவனுடைய குடும்பத்துடன், இன்னும் ஆறு குடும்பங்கள் அன்று சாந்தபுரத்தில் குடியேறினார்கள். தான்னுடைய வளவிற்குள் காலடி எடுத்து வைத்தும் பத்துவயது குறைந்த உணர்வு. மிக உற்சாகமாக அவன் செயற்பட்டான். தரப்பாளை மாமரங்கள் இரண்டுக்கும் நடுவே கயிறோடி கட்டிக்கொண்டிருந்தான். மூத்தமகள் கிணற்றுநீரைக் கொண்டுவந்து தந்தைக்கு நீட்ட அவன் ஆசைதீரக் குடித்தான். மழை வந்தால் திடீரென தரப்பாளைக் கட்டுவது கடினம் என்பதால் தான் இந்த ஏற்பாடு. மற்றும் படி மரநிழலே போதுமே.

தூர்ந்து போயிருந்த தன் வீட்டைச் சுற்றி வேப்பங்கன்றுகளும் ஆமணக்கம் கன்றுகளும் முளைத்து நின்று சிரித்தன. வீட்டைச் சுற்றி செங்கல் அவர்கள் விழுந்துகிடந்தன. சுட்ட செங்கல்லால் கட்டியது அவனது வீடு. செங்கற்களும் கொஞ்சம் எஞ்சியிருந்தன. காணி எங்கும் கொத்துக் கொத்தாக நெருஞ்சி முட்களின் கூட்டணி. காலடி எடுத்து வைக்க வைக்க சரசரக்கும் சருகுகளின் ஓசை. செருப்புக் கால்களுடன் நடக்காத வீட்டின்மேல் செருப்புகள் அணிந்து ஏற மனம் பாடுபட்டது. அலம்பல்களை ஒன்று சேர்த்து விளக்குமாறை உருவாக்கி மூத்த மகளும், இளைய மகளும் சருகுகளை அகற்றிக் கொண்டிருந்தனர். கதிரேசன் நெருஞ்சிகளையும் பற்றைகளையும் வெட்டித் துப்பரவாக்கினான். ஓரளவு பெரிய இடத்தை அவர்கள் துப்பரவாக்கிவிட்டனர். மனைவி சாப்பிட அழைத்தாள். கிணற்று நீரை அள்ளி முகத்திலடித்து ஆசைதீர கால் முகம் கழுவும் பொழுது அவனுக்கு இனம் புரியாத சந்தோசக் கீற்றுக்கள் அலையலையாகிப் பரவின.

கொஞ்ச உணவுப்பொருட்களை பாடசாலையில் இருந்து வரும்போது நிவாரணமாக நிறுவனம் ஒன்று வழங்கியிருந்தது. உருளைக்கிழங்கு பிரட்டலும், கத்தரிக்காய் வெள்ளைக் கறியும், மீன்ரின் சம்பலும் புதிய உற்சாகத்தை, புதிய சந்தோஷத்தை, புதிய சுவையைத் தந்தன. தன் கிராமத்துக் காற்றுக்கும் புதிய சக்தியுண்டு என்பதை அவன் அனுபவித்தான். மனைவியின் மனச் சந்தோசத்தை சாப்பாட்டின் மூலம் அறிந்துகொண்டான். ஏற்கனவே சாப்பிட்டுவிட்டு, மாமரத்து அணில்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான் பேரப்பிள்ளை. வீட்டுமனிதர்களைக் கண்ட சந்தோஷத்தில் அணிற்பிள்ளைகளும் துள்ளியும் தாவியும் விளையாடிக் கொண்டிருந்தன.

கிணற்றை இறைத்தான், நிலத்தைகங கொத்திப் பண்படுத்தினான். தக்காளி, மிளகாய் நற்றுமேடை போட்டான். கீரைப்பாத்தி ஒன்றையும் அமைத்தான். ஒவ்வொரு புதிய புதிய நிகழவுகள் அரங்கேற்றிக் கொண்டு இருந்தன. சில நாட்கள் சென்றன. ஒரு நாள் திடீரென இராணுவத்தினர் வந்தனர். உடமைகளை மீள அடுக்கி பாடசாலைக்கு ஏற்றப் போவதாக கூறினர்.

கதிரேசனுக்கு மட்டுமல்ல ஏனைய குடும்பத்தவர்களுக்கும் அது ஏனென்று புரியவில்லை.

தங்களது சொந்தக்காணிகளில் குடியிருக்கும் போது, பிறகு ஏன் பாடசாலைக்கு? அவர்களது கேள்விகளுக்க விடைகூற யாருமில்லை. மீண்டும் பாடசாலையில் அகதியாய்... வசந்தத்தை இழந்த பறவைகளாய், முகாரி பாடுகின்றன மனங்கள்.

சிதைந்துபோன தமது பிரதேசங்களை சீர் செய்யவென்று சர்வதேச நாடுகளிடம் கையேந்தும் அரசு, தம்மைச் சொந்தக் காணிகளுக்கு ஏற்றி இறக்கியது ஏன்? தம்முடைய காணியை சுவீகரிக்க எடுத்த முயற்சியா? கதிரேசனின் மனம் பல நூறு கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தது.

கதிரேசனும் சிலரும் தமது காணியைப் பார்வையிட கள்ளத்தனமாக சென்றார்கள். சொந்தக் காணிக்கு, சொந்த இடத்திற்குள் களவாக நகரும் அவலம் வேறு யாருக்கும் வரப்போகிறது?

இராணுவ வாகனங்களின் இரைச்சல் காதில் விழ ஒவ்வொருவரும் பதுங்கிக் கொண்டனர். சிறியதும் பெரியதுமான மீன்களை ரக்கில் ஏற்றியபடி முன்னே சென்ற வாகனம் நகர்ந்தது. பின்னால் இன்னொரு வாகனம் தேங்காய்களையும், பலாப்பழங்களையும் ஏற்றிச் சென்றது. கதிரேனுக்கு எல்லாம் விளங்கியது. பெருமூச்சொன்றை அவன் வெளியிட்டான். அதைவிட வேறொன்றும் அவனால் செய்ய முடியவில்லை.

(தொடரும்)



# தலைமுடி வறட்சியா?

முடி உதிர்வது, முடியின் நுனிப்பகுதி வெடிப்பது, உடைவது என்பவை இன்று பெண்கள் சாதாரணமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள். இவர்கள் மாறி மாறி எதையாவது செய்வார்கள். ஆனால், எதிலும் சரியான தீர்வு கிடைக்காமல் திணறி விடுவார்கள். முடியை கவனித்து, பராமரிக்காவிட்டால், முடி உதிரும் வாய்ப்புகள் அதிகம். அதேபோல் முடியின் நுனிப்பகுதியும் பிளவுபடும். அதிகமாக வெயிலிலும், காற்றிலும் வேலை செய்பவர்களின் தலை முடி நடுவில் உடைவதும் நுனியில் பிளவுபடுவதும் சகஜமான விடயம். கிணற்றுத் தண்ணீரில் குளிப்பவர்களின் தலை முடி அதிகமாக உடைந்துபோக வாய்ப்பிருக்கிறது. மேலும், வயதான முடியும் அடிக்கடி உடைந்து போகும். இரசாயனம் கலந்த ஷாம்போவை உபயோகித்து முழுகக்கூடாது. சவர்க்காரம் போன்றவற்றை தலைமுடிக்கு உபயோகிப்பதும் நல்லதல்ல. நடுவில் உடைந்த முடியை மாதா மாதம் வெட்டி, டிரிம் செய்தால் விரைவிலேயே சரியாகிவிடும். அதேபோல் அவரவர்களின் முடிக்கு தகுந்த 'கன்டிஷனர்' உபயோகிப்பது நல்லது.

சாதாரணமாக மேக்கப் செய்து கொள்வதுடன் ஸ்மார்ட்டாகவும் தெரிய வேண்டுமானால், ஹெயர் ரீபொண்டிங் செய்துகொள்ளலாம். அதனால் முடி மிருதுவாக பட்டுப்போல இருக்கும். நேர் முடியாகவும் மாற்றிக்கொள்ளலாம். அதனால் பார்வைக்கு அழகாக இருக்கும். அதுமட்டுமல்ல, ஒரு நல்ல இமேஜையும் இது கொடுக்கும். ஹெயர் ரீபொண்டிங் செய்துகொள்ள விரும்புபவர்கள் பியூட்டி பார்லருக்குச் சென்று செய்து கொள்ளலாம். இதற்கான செலவும் குறைவுதான். அவரவர் முடியின் நீளம் மற்றும் அடர்த்தியைப் பொறுத்து கட்டணம் மாறுபடும்.

இதேவேளை ஒருவரது தலைமுடி வறட்சியாக இருக்கிறது என்றால் தலை முடிக்கு எண்ணெய் வைத்து மசாஜ் செய்யலாம். தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் ஒயிலால் கூந்தலை மசாஜ் செய்து முழுகலாம். ஷாம்போ போட்டுக் முழுகினால், கூந்தலில் கன்டிஷனர் தடவி மேலிருந்து கீழ் நோக்கி தண்ணீர் விட்டு முடியை அலசவேண்டும். கூந்தலை தேய்த்துக் கழுவக் கூடாது. முடியின் வேர்க்காலில் கன்டிஷனர் படாமல் முடியில் மட்டும் போடுவது நல்லது. முதலில் உங்களின் முடி சாதாரண முடி வகையா? அல்லது உடைந்த முடி வகையா? என்று தெரிந்து அதற்கேற்றால் போல் 'ஹெயர் ஸ்மூத்திங்' செய்துகொண்டால் கூந்தலில் வறட்சி போய்விடும்.

# நோன்புக் கஞ்சி தயாரிப்பது எப்படி?



## தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| பச்சரிசி - 500 கிராம் | பெரிய வெங்காயம் - 2 |
| பூண்டு - 1 முழுப் பூண்டு | கரட் - பாதி |
| கடலைப் பருப்பு - 50 கிராம் | தக்காளி - 2 |
| வெந்தயம் - 2 தேக்கரண்டி | சமையல் எண்ணெய் - 50 மில்லி லீற்றர் |
| இஞ்சி - இருவிரல் அளவு | பச்சை மிளகாய் - 23 (காம்பு நீக்கியது) |
| சீரகத்தூள் - 2-3 தேக்கரண்டி | புதினா + மல்லி - தலா ஒரு கொத்து |
| மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி | எலுமிச்சம் பழம் - 1 |
| மிளகாய் தூள் - அரை தேக்கரண்டி | தேங்காய்ப் பால் - 300 மில்லி லீற்றர் |
| உப்பு - தேவையான அளவு | ஆட்டு எலும்பு/கறி - 100 கிராம் |

**செய்முறை:**

1) சாதாரண தண்ணீரில் பச்சரிசி, வெந்தயம், கடலைப் பருப்பு ஆகியவற்றை நன்கு அலசி தண்ணீர் வடித்து தனியாக எடுத்து வைக்கவும். ஆட்டுக்கறி அல்லது நெஞ்செலும்பை நீரில் அலசி உப்பு, மஞ்சள் தூள், மிளகாய் தூள் ஆகியவற்றைக் கலந்து தயாராக வைக்கவும்.
2) தக்காளி, வெங்காயத்தை சிறு சிறு துண்டுகளாக நறுக்கவும்.
3) புதினா, கொத்தமல்லியை காம்பு நீக்கி இலைகளை மட்டும் எடுத்துக்கொள்ளவும்.
4) கரட் மற்றும் பாதி இஞ்சியை சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும்.
5) எஞ்சிய இஞ்சியையும், பூண்டையும் தோல்நீக்கி மிக்ஸியில் அளவாக அரைத்து வைத்துக்கொள்ளவும்.
6) சட்டியை அடுப்பில் வைத்து சூடாக்கி தேவையான அளவு எண்ணெய் விட்டு வெங்காயத்தை வதக்கவும்.
7) நன்கு வதங்கிய வெங்காயத்துடன் தக்காளியை சேர்த்து மேலும் வதக்கவும்.
8) ஆட்டிறைச்சி/நெஞ்செலும்பைக் கலந்து மேலும் சிறிது நேரம் வதக்கவும்.
9) வதங்கும்போது சீரகத் தூள், மஞ்சள் தூள் சிறிதளவு தண்ணீரில் கரைத்து ஊற்றவும்.
10) மல்லித் தழையைத் தூவி, சட்டியை 56 நிமிடங்கள் மூடிவைக்கவும்.
11) அடிப்பிடிக்காதபடி தேவையான அளவு நெருப்பைக் குறைத்து 13 கப் தண்ணீரில் கொதிக்கவிடவும்.
12) கொதித்த பிறகு அரிசியை சட்டிக்குள் இட்டு தொடர்ந்து 30 - 40 நிமிடங்கள் கொதிக்கவிடவும்.
13) கொதிக்கும்போது பாதி எலுமிச்சைச் சாற்றை ஊற்றவும்.
14) தேவையான அளவு உப்பிட்டு சட்டியின் அடிப்பாகம் பிடிக்காத வகையில் அடிக்கடி கிளறவும்.

# குழந்தைகளை வளர்க்க 10 வழி முறைகள்



**நல்லொழுக்கமுள்ள குழந்தைகளை உருவாக்குவதற்கு பெற்றோர் முயற்சிசெய்யவேண்டும். இதுவே சமூகத்தின் எதிர்பார்ப்புமாகும். பெற்றோரை பொறுத்தவரை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கும், குணாதிசயங்கள் இருக்கும். இருப்பினும், குழந்தைகளை இப்படித்தான் நடத்தவேண்டும் என்ற பொதுவானதொரு வழிமுறை இருக்கின்றது. அதனைப் பின்பற்றினால் ஒழுக்கமுள்ள குழந்தைகளை உருவாக்க முடியும். நாம் நினைத்தமாதிரியெல்லாம் குழந்தைகளை வளர்த்துவிட முடியாது. திட்டமிட்ட அடிப்படையில் அவர்களை வழிநடத்துபொழுது, நல்லபல விளைவுகள் ஏற்படும்.**

1. இந்த வயதில் குழந்தைகளுக்கு என்ன தெரியும் என்று அங்கலாய்ப்பவர்களைக் காணமுடியும். ஆனால், குழந்தைகளின் இளமைப் பருவம் தான் அவர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய நல்லதொரு பருவமாகும். அவர்கள் நல்லதொரு வழித்தடத்தின் கீழ் பயணிப்பது எப்படி என்பதை பெற்றோர் கற்றுக்கொடுக்க வேண்டிய தருணம் குழந்தைகளின் ஆரம்ப நாட்களாகும். ஒருமுறை அவர்களிடையே நல்லதொரு பண்பாட்டை, பழக்கவழக்கங்களை ஏற்படுத்திவிட்டால், அது அவர்களது வாழ்நாள் முழுவதும் தொடரும். அதிலிருந்து அவர்கள் மாறமாட்டார்கள்.
2. உங்களது குழந்தையுடனோ அல்லது சாதாரணமாக எதற்காகவோ நீங்கள் கோபமாக இருக்கும்போது, உங்களது குழந்தைகளைத் திருத்த நினைக்காதீர்கள். உங்களது குழந்தைக்கு நல்லதைத்தான் சொல்ல நினைக்கிறீர்கள். ஆனால், அதுவல்ல இப்போது பிரச்சினை... நீங்கள் எந்த நிலையில் அதனைச் சொல்கின்றீர்கள் என்பதுதான் பிரச்சினை. எனவே, கோபம் இல்லாத நிலையில் அதனைச் செய்யுங்கள்.
3. குழந்தைகளை எவ்வாறு நெறிப்படுத்துவது என்பது குறித்த திட்டத்தை குடும்பத்தலைவியும், தலைவனும் இணைந்து தீர்மானிக்க வேண்டும். அதனை இருவரும் இணைந்து நிறைவேற்றுவதற்கு திட்டமிடல் வேண்டும். ஒருவர் கறாராகவும், இன்னொருவர் மிருதுவாகவும் நடந்துகொண்டால், இருவருக்கும் மத்தியில் குழந்தைகள் விளையாட ஆரம்பித்து விடும். பெற்றோர்களில் கறாரானவர் மறுக்கின்றபொழுது, அடுத்தவரிடம் சென்று அனுமதி கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். இருவரும் ஒரு விடயத்தில் ஒத்த கருத்தில் இருந்தால்தான் குழந்தைகளை நெறிப்படுத்த முடியும்.
4. பெற்றோர்கள் தங்களது கொள்கைகளில் உறுதியைக் கடைப்பிடிக்க வேண்டும். அடிக்கடி சட்ட திட்டங்களை மற்றும் எதிர்பார்ப்புகளை மாற்றிக்கொள்வது குழந்தைகளைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடும். உதாரணமாக, சுவரில் எழுதிக் கொண்டிருக்கின்ற குழந்தையை இன்றைக்கு தடுப்பது, நாளைக்கு தடுக்காது அனுமதிப்பது, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இனிவரும் நாளில் நாம் சுவற்றில் எழுதினால் பெற்றோர்கள் கண்டிப்பார்களா, கோபப்படுவார்களா என்ற புரிந்துணர்வின்மை குழந்தைகளிடத்தில் தோன்றிவிடும்.
5. குழந்தைகளிடம் பொய் பேசாதீர்கள். அவர்களிடம் வழங்கக்கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். நீங்கள் அடிக்கடி பொய் பேசக்கூடிய பெற்றோராக இருந்தால்... அவர்கள் உங்களது வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கமாட்டார்கள். நீங்கள் உண்மையையே பேசினாலும் கூட அவர்கள் நம்பமாட்டார்கள்.
6. குழந்தை அடம்பிடித்து அழுகின்றதா... அது எதையோ உங்களிடம் எதிர்பார்க்கின்றது. அவ்வாறு அழும் குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்கு எதையும் கொடுத்து சமாதானப்படுத்தாதீர்கள். பின்னர் ஒவ்வொரு முறையும் அது விரும்புவதைப் பெறுவதற்கு அழ ஆரம்பித்துவிடும். அழுகையின் மூலமாக எதனையும் பெற முடியாது என்பதனை அது அறிந்து கொள்ளவேண்டும்.
7. தவறிழைத்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதை குழந்தைக்கு கற்றுக்கொடுங்கள். தவறிழைக்கக்கூடியது மனிதனின் சுபாவம். தவறிழைப்பவர்கள் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்பது இறைவனின் கட்டளையுமாகும். அது சக மனிதனுக்குச் செய்யக்கூடிய தவறாக இருப்பினும் சரி... அல்லது இறைவனுக்கு மாறு செய்யக்கூடிய பாவங்களாக இருந்தாலும் சரியே...! மன்னிப்புக்கோர வேண்டும் என்பதை குழந்தைகள் கற்றுக்கொள்ளும்பொழுது - தவறிழைக்க நேரும்பொழுது மன்னிப்புக்கோர வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் மிகுந்து காணப்படும்.
8. குழந்தை தவறு செய்த பின்பு, அதனை உணர்ந்து தனது தவறுக்காக வருத்தம் தெரிவிக்கின்றவேளையில் உடனே அதனை மன்னித்து மறந்துவிடுங்கள் மன்னித்து விட்டேன் என்பதை நேரடியாக குழந்தையிடம் சொல்லுங்கள்.
9. இளமையிலேயே கடவுள் நம்பிக்கையை குழந்தைகளுக்கு ஏற்படுத்துங்கள். நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொடுங்கள். உங்களது குழந்தைகளுக்கு நல்லொழுக்க போதனைகள் அவசியம். ஒழுக்கம் சார்ந்த நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை அவர்களுக்கு பரிசளியுங்கள்.
10. பெற்றோருக்கு கீழ்ப்படிதல் என்பது இறைவன் குழந்தைகள் மீது கடமையாக்கியதொன்று. தாயும், தந்தையும் இணைந்து இதற்கான பயிற்சியை வழங்கவேண்டும். ஆனால், குடும்பங்களில் நடப்பது வேறு. அதாவது, ''அப்பா வரட்டும்... உன்னை என்ன செய்கிறேன் பார்...'' என்று பிள்ளைகளை மிரட்டுவது தாய்மார்களது வழமை. இது தவறான வழிமுறை. முதலாவது, எப்பொழுது குழந்தை கீழ்ப்படியாமையைக் காட்டுகின்றதோ அப்பொழுதே கீழ்ப்படிவது எப்படி என்பதைக் கற்றுக்கொடுக்கவேண்டும்.

# ஏ.எம்.ரத்னத்துடன் கை கோர்க்கிறார் விஜய்!



ஏ.எம். ரத்னத்துடன் கை கோர்க்கிறார் விஜய். விஜயை வைத்து 'கில்லி', 'சிவகாசி' போன்ற வெற்றிப் படங்களைத் தந்தவர் ஏ.எம். ரத்னம்.

ஒரே நேரத்தில் 6 'மெகா பட்ஜெட்' படங்களைத் தயாரித்தவர். ஆனால், தொடர் தோல்விகளால் பெரும் நஷ்டம் ஏற்பட, படம் எடுப்பதை நிறுத்தியிருந்தார். வட்டியாகவே கோடிக்கணக்கில் அவர் செலுத்தி வருவதாகத் தகவல்.

இப்போது அந்தக் கஷ்டத்திலிருந்து சற்றே மீள அவருக்கு ஒரு வழி பிறந்திருக்கிறது. ரத்னத்தின் சூர்யா மூவீஸுக்காக நடிகர் விஜய் ஒரு படம் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளாராம். இந்தப் படத்தை இயக்கவிருப்பவர் விக்ரம் குமார். 'யாவரும் நலம்' படத்தை இயக்கியவர். சில தினங்களுக்கு முன்னர் விஜயிடம் ஒரு அக்ஷன் மசாலாக் கதையைச் சொன்னாராம். 'கில்லி' மாதிரி விறுவிறுவென திரைக்கதை இருக்கவேண்டும் என விஜய் சொன்னாராம்.

அப்படியே ஆகட்டும் என்று சொன்ன விக்ரம், சாலி கிராமத்தில் உள்ள ரத்னம் அலுவலகத்தில் கடந்த ஒரு வாரமாக கதையை பக்குமாக உருவாக்கி வருகிறாராம். 'த்ரீ இடியட்ஸ்' ரீமேக் பற்றி தெளிவான ஒரு அறிவிப்பு வந்ததும், இந்தப் படத்தை அறிவித்துவிடலாம் என்று ரத்னத்துக்கு வாக்களித்துள்ளாராம் விஜய்.

## எந்திரன் சாதனை மேல் சாதனை

எந்திரன் படத்தின் தெலுங்கு உரிமையை இலங்கை ரூபாவில் சுமார் 90 கோடி வாங்கியதாக ஒருவர் பேட்டியளித்தாலும், இருவர் போலிப் பத்திரங்களைப் பயன்படுத்தி இந்த விற்பனையை நடத்தியதும் அண்மையில் தெரிய வந்தது.

இதையடுத்து எல்லோர் மனதிலும் எழுந்த கேள்வி எந்திரனின் தெலுங்குப் பதிப்பு எத்தனை கோடிக்கு விலை போகும் என்பதே.

இறுதியாகக் கிடைத்த தகவலின்படி சுமார் 100 கோடிக்கு 'எந்திரன்' தெலுங்கு உரிமை வாங்கப்பட்டுள்ளதாம். ஒரு மொழி மாற்றுப் படம் இத்தனை பெரிய தொகைக்கு விலை போவது இந்தியாவில் இதுவே முதல் முறை.

எந்திரனின் கன்னட உரிமை சுமார் 27 கோடி ரூபாவுக்கு விற்பனையானதாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. இது கன்னட 'மெகா' படங்களின் பட்ஜெட்டுக்கு சமமான தொகை. அப்படியென்றால் எந்திரனின் சாதனைகள் மேலும் தொடரும் என உறுதியாகச் சொல்லலாம்.



## பிபாஷா பாசுவை இழுத்து வைத்து முத்தமிட முயற்சி!



பெங்களூர் விமான நிலையத்தில் தம்மை இழுத்து முத்தமிட முயன்ற பெண்ணிடமிருந்து தப்பிப் பிழைத்து மீண்டாராம் பிபாஷா பாசு. இதுகுறித்து 'டுவிட்டர்' தளத்தில் அவரே விவரித்துள்ளார்.

பிபாஷா பாசுவின் கவர்ச்சிகரமான அழகு உலகறிந்தது. கல்கத்தாவில் முன்பு காளி கோவிலுக்குப் போன அவரது மாரைப் பிடித்து பக்தர்கள் சேஷ்டை செய்ததையால் குழம்பிப்போன அவர் கோவிலிலிருந்து திரும்பினார்.

இந்த நிலையில் பெண்மணி ஒருவர் பிபாஷாவை வளைத்துப் பிடித்து 'கிஸ்'ஸடிக்க முயன்று அவரைப் பீதிக்குள்ளாக்கியுள்ளார்.

இதுகுறித்து டுவிட்டரில் பிபாஷா கூறியுள்ளவை வருமாறு:-

பெங்களூர் விமான நிலையத்தில் ஒரு வேடிக்கை நடந்தது. அன்ட்டி ஒருவர் என்னைப் பின்னாலிருந்து வளைத்து இழுத்து முத்தமிட முயன்றார், எப்படியோ நான் தப்பிவிட்டேன். முன்பு இலங்கைக்கு ஐபா பட விழாவுக்குப் போயிருந்தபோதும், ஒரு பெண் எனது கையைப் பிடித்து இழுத்துமுத்தமிட முயன்றார். இப்போது அன்ட்டி ஒருவர் முத்தமிட முயன்றுள்ளார். இதெல்லாம் எனக்கு வேடிக்கையாகவே உள்ளது என்று கூறியுள்ளார்.

ம்.........!

## அமிதாப்தான் எனது 'ரோல் மொடல்'



அமிதாப் பச்சன்தான் திரையுலகில் எனக்குத் தூண்டுதல் - 'ரோல் மொடல்' - குரு என ரஜினிகாந்த் கூறியுள்ளார்.

மும்பையில் நடந்த 'ரோபோ' படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட அவர், அங்கு பேசியவை வருமாறு:-

''எனக்கு இப்படி ஒரு வாய்ப்பைத் தந்தமைக்காக இங்குள்ளவர்களுக்கு நன்றி. எனக்கு ஜோடியாக நடித்த ஐஸ்வர்யாராய்க்கும் நன்றி. நான் மிகையாகச் சொல்லவில்லை. சமீபத்தில் நான் பெங்களூரில் உள்ள எனது சகோதரர் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கு பக்கத்தில் ஒரு ராஜஸ்தானி - தெரிந்தவர், அவரின் பெயர் நந்துலால், 60 வயதுக்கு மேலிருக்கும், என்னைப் பார்த்ததும்,

''என்ன ரஜினி, முடியெல்லாம் கொட்டிடுச்சே'' என்று பேச ஆரம்பித்தார்.

''நான் ஆமாங்க வயசாகுதில்ல'' என்று சமாளித்தேன்.

''அப்படீன்னா ஓய்வு பெற்றுவிட்டீங்களா'' என்றார்.

''இல்லை, 'ரோபோ' என்று ஒரு படம் நடிக்கிறேன்'' என்றேன்.

''இந்தப் படத்தில் ஐஸ்வர்யா ராய் நடிக்கிறாங்க'' என்றும் கூறினேன். உடனே அவர், ''ஓ, ஐஸ்வர்யா ராயா குட், சரி, ஹீரோ யார்?'' என்றார்.

''நான்தான் ஹீரோ'' என்றேன்.

''அவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு பாய் சொல்லிவிட்டுப் போனார்.

''ஆனால், அந்தப் பக்கம் போனதும்,

''அட, இந்த ஐஸ்வர்யா ராய்க்கு என்னாச்சு? இவருக்கு ஜோடியா நடிக்கிறாராமே. அபிஷேக் எப்படி ஒத்துக்கிட்டார்? அட, இந்த அமிதாப்பச்சனுக்குதான் என்னாச்சு?'' என்று கூறியது என் காதில் விழுந்தது.

''எனவே,

''ஐஸ்வர்யா ராய்க்கு நன்றி.

''நானும் அமிதாப்பும் 'அந்தா கானூன்', 'கிராப்தார்', 'ஹம்' என பல படங்களில் இணைந்து நடித்துள்ளோம். அப்போதிலிருந்தே என்மீது அவர் காட்டிய அன்பு, நட்பு மறக்க முடியாதது. முக்கிய முடிவு எடுக்கும் முன் நான் அமிதாப்பின் யோசனையைக் கேட்பது வழக்கம்.

''ரோபோவைப் பொறுத்தவரை, ஏற்கெனவே நான் ஷங்கருடன் 'சிவாஜி' படம் பண்ணியிருந்தாலும், இந்தப் படத்தில் சவாலான வேடம்.

''இந்தப் படத்தில் கமல்ஹாஸன், ஷாருக்கான் நடிப்பதாக இருந்தது. ஆனால், என்ன நடந்ததோ கடைசியில் நான் நடித்தேன். நான்தான் நடிக்கவேண்டும் என்பது கடவுளின் தீர்மானம் போலிருக்கிறது. அதை மாற்ற யாரால் முடியும்?

''இந்தப் படத்தில் பட்ஜெட் பல கோடி. தொழில்நுட்ப ரீதியாக மிகச் சிறப்பாக வந்துள்ளது இந்தப் படம். ஆனால், இது மட்டுமே இந்தப் படத்தின் வெற்றிக்குக் காரணமாகிவிடாது.

''35 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான படம் 'ஷோலே'. வசூலில் சரித்திரம் படைத்த படம். அந்தப் படத்தின் வெற்றிக்கு பட்ஜெட்டோ, பெரிய நடிகர்கள் நடித்ததோ மட்டும் காரணமல்ல. படத்தின் கதை, உணர்வுபூர்வமான நடிப்பு, அந்தப் பாத்திரங்கள், மனித நேயத்தை உணர்த்தும் காட்சிகள் போன்றவைதான்.

''அதேபோலத்தான் 'ரோபோ'விலும் சிறந்த கதை மற்றும் பாத்திரப் படைப்புகள் அமைந்துள்ளன. அதற்கு உறுதுணையாக படத்தின் 'மெகா பட்ஜெட்' அமைந்துள்ளது. இந்தப் படம் உருவாகியுள்ள விதம், இதன் இறுதி வடிவம் எனக்கு மிகுந்த திருப்தியளிக்கும் வகையில் உள்ளது.

''இந்தியாவின் முதல் விஞ்ஞானப் படம் இது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் படம் செப்டெம்பரில் வெளிவரவுள்ளது'' - என்றார் ரஜினி.



சின்னி ஜெயந்த் இயக்கியிருக்கும்

# 'நீயே என் காதலி'

கொமெடி நடிகர் ஓசையில்லாமல் ஒரு தமிழ்ப் படத்தை இயக்கியிருக்கிறார். இதற்கு, 'நீயே என் காதலி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். மென்மையான காதலை இந்தப் படத்தில் அழகாக சொல்லியிருக்கிறாராம்.

இந்தப் படத்தின் நான்கு பாடல்கள் பத்திரிகையாளர்களுக்காகத் திரையிடப்பட்டன. பாடல்கள், படம் பிடிக்கப்பட்ட விதம், சின்னி ஒரு தேர்ந்த இயக்குநர் என்பதை விளக்கும் வகையில் அமைந்திருந்தன. பாடல்களில் கவர்ச்சியையும் கொஞ்சம் அதிகமாகவே கலந்திருக்கிறார்கள். பிரேம்குமார் என்னும் புது இசையமைப்பாளர் இந்தப் படத்திற்கு இசையமைத்துள்ளார்.

## கன்னடத்தில் 'சிங்கம்'

கன்னடத்தில் 'சிங்கம்' படத்தை 'ரீமேக்' செய்யவுள்ளனர். இதில் கன்னட முன்னணி நடிகர் சுதீப் நடிக்கவுள்ளார்.
சன் பிக்சர்ஸ் வழங்கிய சிங்கம் வெளிவந்து வெற்றிகரமாக ஓடியதோடு வசூலில் சாதனையும் புரிந்தது. சூர்யா, அனுஷ்கா, விவேக் நடித்துள்ள இந்தப் படத்தை ஹரி இயக்கியுள்ளார்.
தேவிஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். திரையரங்குகளில் தற்போதும் இந்தப் படம் ஓடிக்கொண்டிருக்கிறது.
தற்போது இந்தப் படம் கன்னடத்திலும் 'ரீமேக்' ஆகிறது. அனேகமாக சுதீப் ஹீரோவாகலாம் என்கின்றன பெங்களூரிலிருந்து வரும் தகவல்கள்.

## கை மாறிய விஜயின் படம்

கைமாறியது விஜய் படம் காவலன். இயக்கம் என்று இடைக்கிடைக் காசு செய்து வருபவர் சக்தி சிதம்பரம். இவர் தயாரிக்கிற படத்தில் டைரக்டருக்கு என்னவெல்லாம் முக்கியத்துவம் இருக்குமோ, அதைவிட முக்கியத்துவம் தயாரிப்பாளருக்கும் இருக்கும்.
என்ன காரணத்தினாலோ இவர் கதைசியாக இயக்கித் தயாரிக்க 'குரு சிஷ்யன்' படத்தில் ரசி இல்லை. 'சென்டிமென்ட்' விஷயம் என்னா! கதை சிங்கள் ... போகும்போது ஒரு காட்சியில் கவர்ந்த ... தெரிந்து ... இப்போது விஜய் அதுவல்ல. சக்தி சிதம்பரத்தின் கைகளை ...
விஜய் அசின் இணைந்து நடிக்கும் 'காவலன்' (இந்த அட்டையில் இன்னும் எத்தனை நாளைக்கோ?) படத்தை 'ரெட் ஜெயண்ட்' உதய வாங்கிவிட்டாராம்.
அசின் மீது கடும் கோபம் கொண்டிருக்கிறது தமிழ்த் திரையுலகம். இந்தப் படத்தை விடுவோமா என்று முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள். இந்த நேரத்தில் இவ்வளவு தைரியமாக 'காவல் காதலை' சக்தி சிதம்பரம் வாங்கியிருக்கிறார் என்றால், இந்த தைரியம் யாருக்கும் வரவில்லையே என்று இன்னும் அதிர்ச்சி காட்டுகிறாராம் விஜய்.

## ரவுத்திரம் 2ஆம் கட்ட படப்பிடிப்பு ஆரம்பம்

ஜீவா நடிக்கும் 'ரவுத்திரம்' படப்பிடிப்பை ஆரம்பிப்பதற்காக, ஏனைய படங்களில் நடித்துக்கொண்டிருந்த ஸ்ரேயாவின் வருகையை எதிர்பார்த்திருந்தது. தற்போது, அவரின் வருகையால் படப்பிடிப்பை ஆரம்பித்துள்ளார்கள்.
'ரவுத்திரம்' படத்தில் நடிக்க ஒப்புக்கொண்ட ஸ்ரேயா, அந்தப் படத்தின் முதல்கட்டப் படப்பிடிப்புத் தொடங்கிய நிலையில் 'போக்கிரி ராஜா', 'டான்', 'சிக்குபுக்கு' ஆகிய படங்களில் நடிக்கச் சென்றுவிட்டார்.
இதனால் ஸ்ரேயா இல்லாமலே 'ரவுத்திரம்' படத்தின் முதல்கட்டப் படப்பிடிப்பை நடத்தி முடித்துவிட்டார்கள்.
இந்நிலையில் இரண்டாம் கட்டப் படப்பிடிப்புத் தொடங்கிய நிலையில் படப்பிடிப்பில் ஸ்ரேயா கலந்துகொண்டார். ஸ்ரேயாவின் வருகையால் மளமளவென படத்தின் வேலைகள் வேகமெடுக்கத்தொடங்கிவிட்டன.
ஜீவாவுடனான ஸ்ரேயாவின் காட்சிகள் அனைத்தையும் விறுவிறுவென எடுத்துவருகின்றனராம்.

## தம்பிக்கு உதவும் சிந்துமேனன்

தம்பி தயாரிப்பாளராக ஜொலிப்பதற்காக உதவி வருகிறார் நடிகை சிந்து மேனன். கடல்பூக்கள், சமுத்திரம், சில படங்களில் நடித்தவர் சிந்து மேனன். ஏராளமான கன்னடப் படங்களிலும் நடித்து வருகிறார் அவர்.
லண்டனில் மென்பொருள் இன்ஜினியராக உள்ள ரிஷியை திருமணம் செய்து கொண்டு அங்கேயே செட்டில் ஆகிவிட்டார்.
சிந்துவின் தம்பி கார்த்திக், தெலுங்கு, கன்னடத்தில் சில படங்களில் நடிக்கிறார். இதற்கிடையே சொந்தமாக கன்னட படங்களைத் தயாரிக்கவும் பணஉதவியும் செய்து வருகிறார் கார்த்திக். இதில் அவருக்கு பக்கபலமாக இருப்பது சிந்து மேனனின் கணவர் ரிஷி.



படம்-நடு நிசி நாய்கள்

## கோடி கொடுத்தால் தமன்னா ரெடி!



தமன்னா இப்பவெல்லாம் ஒரு கோடி ருபா (இலங்கை ருபாவில் கிட்டத்தட்ட 3 கோடி வரும்) சம்பளம் கொடுத்தால் மட்டுமே நடிப்பேன் என்று தம்மைத் தேடி வரும் பட வாய்ப்புக்களுக்கு மறுப்புத் தெரிவித்து வருகிறார்.
தாம் தனது சம்பளத்தை உயர்த்தியது தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில்,
"நான் குறைந்த தொகைக்கு நடிக்கத் தயாராக இல்லை. எனது தற்போதைத் நிலையின் அடிப்படையிலேயே எனது சம்பளத்தை உயர்த்த முடிவு செய்தேன். பொதுவாக படங்களின் 'பட்ஜெட்' அதன் தரத்தைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது. அதேபோன்றே எனது தற்போதைய நிலையை வைத்தே தயாரிப்பாளர்கள் எனது சம்பளத்தையும் வழங்கட்டும். நான் அவர்களிடமிருந்து அதிக தொகையை எதிர்பார்க்கவில்லை. நான் இதுவரை நடித்த அனைத்துப் படங்களிலுமே, எனது சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியுள்ளேன். என்னால் முடிந்த அளவிற்குச் சிறப்பாக நடிக்க வேண்டும் என்பதற்காகவே நான் எப்போதும் முயற்சித்துக்கொண்டு வருகிறேன்."
- இவ்வாறு தமன்னா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
தமன்னா, தற்போது கார்த்தி உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் பல படங்களில் நடித்துள்ளார். இந்நிலையில், தமன்னா எடுத்திருக்கும் இந்தக் கார் முடிவால் தயாரிப்பாளர்கள் கதிகலங்கிப் போயிருக்கின்றனராம்.



அம்ருதா

# ராணி துர்காவதி


5
புத்தாக்கம் - கே. கான்
6
ஸங்கிராம் ஷாஹ் விவாகச் செய்தியை துர்காவதியின் தகப்பனாருக்கு அனுப்பி வைத்தார்.
தங்கள் குலத்தோடு எங்களுடைய தொடர்பு உண்டாகட்டும். இது எமக்கு மிகவும் கௌரவத்துக்குரிய விடயமாக இருக்கும். நான் தங்கள் புதல்வி துர்காவதியை எனது மகன் தல்பதிக்கு மணப்பெண்ணாகக் கேட்கிறேன். - ஸங்கிராம் ஷாஹ்
தல்பத் அரசகுமாரன் தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சந்தேவா குலத்து அரசகுமாரியின் விவாகம் கோண்டு வம்சத்துடனா? இல்லை, ஒருபோதுமில்லை. ஸங்கிராம் ஷாஹ், உனக்கு இது கௌரவமானதாக இருக்கலாம். ஆனால், எமது குலத்துக்குக் களங்கம் ஏற்பட்டு விடும்.
துர்காவதியின் தகப்பனார் துக்கத்தோடு முடியாது என்று சொல்லிவிட்டார்.
இதனை உங்கள் அரசனிடம் கொடுங்கள்
சேவகி துர்காவதியிடம் ஓடிவந்தாள்.
கோண்டு அரசர் தனது மகனுக்கு உங்களைக் கேட்டிருக்கிறார்.
தல்பத்?
அப்படியா?
தகப்பனார் என்ன சொன்னார்?
சேவகியின் முகம் தொங்கிப் போய்விட்டது.
அவர் மிகக் கடுமையானவர்.
எப்படி? அவர் என்ன சொன்னார்? என்ன செய்தார்?
அவர் சொன்னார் – கோண்டு அரச குமாரனாக இருக்கலாம். அவனோடு சந்தேவ அரசகுமாரியின் விவாகம் எப்படி நடைபெற முடியும் என்று சொன்னார்.
7
இது தகப்பனாரின் பிழை. ஆண்களைப் பொறுத்தவரை, அவனுடைய பிறப்பையல்ல, செயலையும் பண்பாட்டையும் பார்த்தே முடிவு செய்ய வேண்டும்.
துர்காவதி மனதில் ஒரு தீர்மானத்தோடு மாளிகையின் உள்ளே சென்றாள்.
என்னவானாலும் பரவாயில்லை. நான் தல்பத்தையே மணம் செய்து கொள்வேன். உயர் குலக் கோழையை விட தாழ் குல வீரனுக்கு மனைவியாவது தான் விருப்பம் எனக்கு.
அவள் தல்பத்துக்கு கடிதம் எழுதினாள்.
சமூகத் தளைகள் அர்த்தமற்றவை. நான் எனது உள்ளத்தை உங்களுடைய வீரத்தின் முன்னால் பறிகொடுத்து விட்டேன். என்னை அடைந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.
8
அவள் சேவகியிடம் கூறினாள்.
இந்த கடிதத்தை கொண்டு அரசனின் மகனிடம் சேர்ப்பிக்க வேண்டும். ஆனால், யாருக்கும் தெரியக் கூடாது.
அரசகுமாரி என்னை நம்புங்கள்!
இதற்கிடையில் மஹோபா அரசன் சம்மதிக்காத செய்தி தல்பத்துக்குக் கிடைத்தது.
எவ்வளவு பெரிய அவமானம்! அப்பா, நீங்கள் ஏன் உங்களை இவ்வளவு தாழ்த்திக் கொண்டீர்கள்!
எங்கள் குலத்தில் நல்ல கன்னியர்களுக்குக் குறைவில்லை. யாரை விரும்பினாலும் அவளுடன் எனது திருமணம் நடந்துவிடும். கர்வம் பிடித்த ராஜ்புத் அரசனிடம் ஏன் கைநீட்டினோம்!
அவன் யோசனையில் மூழ்கியிருக்கும் போது...
மஹோபா நாட்டு ராஜகுமாரி துர்காவதி கடிதம் அனுப்பியிருக்கிறார்.
(தொடரும்)

# மூன்று அரைச் செவிடர்கள்




சித்தூரா என்னும் சிற்றூரிலே முத்தன் என்ற ஆடு மேய்ப்பவன் ஒருவன் இருந்தான். அவன் ஓர் அரைச் செவிடன். அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து தன்னுடைய ஆடுகளை ஓட்டிக்கொண்டு அருகிலுள்ள புல் வெளிக்குச் சென்று ஆடு மேய்ப்பான். இது அவனுடைய தினசரி வழக்கம்.

அவன் மனைவி காலை ஆறு மணிக்கு சமையல் செய்து காலைக்கும் மதியத்துக்கும் வேண்டிய கஞ்சியையும் கட்டுச் சோற்றையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போய்விடுவாள். முத்தன் ஆடுகளை மேய்த்துவிட்டு மாலையில் தான் வீடு திரும்புவான்.

ஒரு நாள் காலை ஏழுமணி வரை அவன் மனைவி கஞ்சி கொண்டு வரவில்லை. எனவே, அவன் வீட்டுக்குப் போய் கஞ்சி குடித்துவிட்டு வர நினைத்தான். ஆனால், ஆடுகளை எப்படித் தனியாக விட்டுவிட்டுப் போவது என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

சற்றுத் தூரத்தில் ஒரு வாய்க்கால் ஓடிக்கொண்டிருந்தது. அதில் ஒருவன் பல் விளக்கிக் கொண்டிருந்தான். முத்தன் அவனிடம் போய் நிலைமையைக் கூறி, "நான் வீடு வரை போய் கஞ்சி குடித்துவிட்டு அரை மணியில் வந்துவிடுகின்றேன். அதுவரை என்னுடைய ஆடுகளைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினான். பல் தேய்த்துக் கொண்டிருந்தவனும் ஓர் அரைச் செவிடன். அவனுக்கு முத்தன் கூறியது ஒன்றும் விளங்கவில்லை.

உடனே அவன் முத்தனை நோக்கி "நான் பல் விளக்கிக் குளித்துவிட்டுத் தான் போவேன், அதற்குள் என்னய்யா அவசரம்?" என்றான். முத்தனும் அவன் ஆடுகளைப் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி விட்டான் என்று நினைத்து வீட்டுக்குப் போய்விட்டான்.

கனக சுப்பையா



அரை மணி நேரம் கழித்து முத்தன் திரும்பி வந்தபோது அவனுடைய ஆடுகள் அமைதியாகவும் ஒழுங்காகவும் மேய்ந்து கொண்டிருந்தன. உடனே முத்தன் மகிழ்ந்து, இவ்வளவு நேரம் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததற்காக ஒரு நொண்டி ஆட்டுக் குட்டியை எடுத்துக்கொண்டு போய் பல் தேய்த்துக் கொண்டிருந்தவனிடம், "என்னுடைய பரிசை ஏற்றுக்கொள்ளுங்கள். இவ்வளவு நேரம் என்னுடைய ஆடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தமைக்கு நன்றி" என்றான்.

பல்தேய்த்துக் கொண்டிருந்தவன் முதலில் முத்தன் கையில் இருந்த நொண்டி ஆட்டைப் பார்த்தான். பிறகு முத்தனைப் பார்த்து, "இது என்ன அநியாயமாக உள்ளது! நான் சிவனே என்று பல் தேய்த்துக் குளித்துவிட்டு புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நானா இந்த ஆட்டின் காலை ஒடித்தேன்? நான் ஒடிக்கவில்லை. யார் ஒடித்தது என்றும் எனக்குத் தெரியாது" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

முத்தன் உடனே அவனைத் தடுத்து "சிறிது நேரம் ஆடுகளைப் பார்த்துக் கொண்டிருந்ததற்காக இந்த நொண்டி ஆடு போதாதா, நல்ல ஆடு வேண்டும் என்கிறீர்களே!" என்று வருத்தத்துடன் கூறினான்.


இவர்கள் இவ்வாறு ஒருவரை ஒருவர் போகவிடாமல் தடுத்து விஷயம் புரியாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இந்தச் சமயத்தில் மூன்றாவதாக ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவனும் ஓர் அரைச் செவிடன்.

மூன்றாவது அரைச் செவிடன் தனது மனைவியுடன் சண்டை போட்டு, கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி வேகமாக வந்துகொண்டிருந்தான். அவனிடம் போய் முத்தனும் பல் தேய்த்துக் கொண்டிருந்தவனும் தத்தம் விஷயங்களை விளக்கிக் கூறினர்.

மூன்றாவது அரைச் செவிடன் இருவரும் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுக் கடைசியில் சொன்னான்: "நீங்கள் இருவரும் என்ன சொன்னாலும் சரி, நான் என் மனைவியுடன் சேர்ந்து வாழ்வது என்பது இனி நடக்காத காரியம்; வேறு ஏதும் விஷயம் என்றால் கூறுங்கள்" என்றான்.

இந்தச் சமயத்தில் நான்காவதாக ஒரு வழிப்போக்கன் வந்து கொண்டிருந்தான். அவன் செவிடன் அல்ல. அவனிடம் போய் மூவரும் தத்தம் விஷயங்களைக் கூறினர். இதனைக் கேட்ட வழிப்போக்கன் சிரிப்பை அடக்க முடியாமல் முத்தனைப் பார்த்து, "நீ நொண்டி ஆட்டையும் கொடுக்க வேண்டாம். நல்ல ஆட்டையும் கொடுக்க வேண்டாம். நீ போகலாம்" என்று அனுப்பி வைத்தான். பின்னர் பல் தேய்த்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து, "நீ ஆட்டின் காலை உடைக்கவுமில்லை, ஒன்றுமில்லை. நீயும் புறப்பட்டுப் போய்ச் சேர்" என்று அவனையும் அனுப்பிவிட்டு, மூன்றாவது அரைச் செவிடனை நோக்கி, "நீ உன் மனைவியுடன் வாழ்ந்தாலும் சரி, வாழாவிட்டாலும் சரி, அது உன் இஷ்டம். உன்னை யாரும் தடுக்க மாட்டார்கள்" என்று கூறி அவனையும் அனுப்பிவிட்டான்.

அந்த மூன்று அரைச் செவிடர்களும் வழிப்போக்கனின் அறிவையும் திறமையையும் பாராட்டித் தத்தம் வழியே சென்றனர்.



இரு படங்களுக்கும் இடையில் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்துப் பாருங்கள்.

# அபூர்வ மூலிகையைத் தேடி... 3

இருவரும் இருளையும் பொருட்படுத்தாமல் நடந்துகொண்டிருந்தார்கள். பிரதான வீதியின் இரு மருங்கிலும் நீண்டு வளர்ந்திருந்த மரங்கள் பேய் உருவங்கள் போல் தோற்றமளித்தன.

"வசந்த், கொஞ்ச நேரம் இங்கே இருந்துவிட்டு நடப்போமா? கால் வலிக்குதே." இவ்வாறு சந்தோஷிகன் கேட்டான்.

"வேண்டாம், சந்தோஷ். இப்படி இருந்திருந்து நடந்தால் நாயாற்றுப் பாலத்தடிக்குப் போக விடிஞ்சிடும்.



அதன் பிறகு நாம் திட்டமிட்டபடி மண்கிண்டி மலையடிவாரம் போக கன நாள் எடுக்கும். ஆகவே, இன்று விடியறதுக்கு முன்னால் பாலத்தடிக்குப் போக வேணும். அங்கே கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு திரும்பவும் வெளிக்கிட வேண்டியதுதான். பொறுத்துக்கொண்டு நட சந்தோஷ்." - தனது பயணத்தை நிறுத்தாமலே சொல்லிக கொண்டு நடந்தான் சந்தோஷ்.

"அவன் சொல்வது சரிதானே. நாம் தாமதிக்கின்ற ஒவ்வொரு வினாடியும் அம்மாவைக் காலன் நெருங்கிக் கொண்டல்லவா இருப்பான்' என்று சந்தோஷிகனின் ஆழ்மனது யதார்த்தத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டது. எனவே, நடை வேகத்தைச் சிறிது அதிகப்படுத்திக் கொண்டான்.

இராமசாமி ரமேஷ்

வசந்தன் முன்னால் நடக்க சந்தோஷிகன் பின்னால் வந்துகொண்டிருந்தான்.

செம்மலைக் கிராமத்தில் பெரும்பாலான வீடுகள் இருளில் மூழ்கிக் கிடந்தன. எங்கோ சில நாய் கள் குரைத்துக் கொண்டிருந்தன. சந்தோஷிகன் தன் நம்பிக்கை ஊட்டுகின்ற பின்வரும் பாடலை முணுமுணுத்துக் கொண்டு வந்தான்.

தடையேதும் இல்லை துணிந்து நீ நின்றாலே

இடர்கள் வரமாட்டா ஒரு போதும் நீ நிமிர்ந்தால்

கவலைகளைக் களைந்துவிட்டு எழுந்து நில்லடா!

கண்களிலே புத்தொளியுடன் கருமம் ஆற்றுடா!

அவன் குரலில் இனிமையும் கம்பீரமும் இழையோடிற்று. அது முன்னால் நடந்துகொண்டிருந்த வசந்தனுக்கும் உற்சாகத்தைக் கொடுத்தது.

"வசந்த்."

"...ம்..."

"நாம அந்த மூலிகையை அடைஞ்சிடலாம் என்பதிலே உனக்கு நம்பிக்கை இருக்கா?"

"இதென்ன கேள்வி? நம்பிக்கை இல்லாமலா வந்தோம்? நாம சின்னவங்க, எம்மால் முடியாது என்று நீ நினைக்கிறாயா?"

"இருந்தாலும்..."

"சந்தோஷ். சிறியவங்களோ பெரியவங்களோ, துணிச்சல் இருந்தா எதிலையுமே வெற்றியடையலாம்."

அதன்பிறகு அவர்கள் மௌனமாக நடந்து கொண்டிருந்தனர். நேரமும் கரைந்து கொண்டிருந்தது. உடலை உரசிய வண்ணம் அடித்துக்கொண்டிருந்த உப்பளக் காற்றினால் உறக்கம் கண்களைத் தழுவிக்கொள்ளும் போல் தெரிந்தது. சடுதியாகப் பின்னால் திரும்பிப் பார்த்தான் வசந்தன்......அங்கே சந்தோஷிகனைக் காணவில்லை.

"சந்தோஷ், சந்தோஷ்" என்று கூப்பிட்டுப் பார்த்தான். ஆனால், எந்தப் பதிலும் வரவில்லை. அவன் மனதைப் பயம் கௌவத் தொடங்கிற்று. பார்வைக்குப் புலனாகும் தூரத்தில் மங்கலாகத் தெரியக் கூடிய உருவம் ஒன்று கூடத் தென்பட வில்லை. பையிலிருந்து டோர்ச் லைட்டை எடுத்து அங்குமிங்குமாக அடித்துப் பார்த்தான். சத்தமாகக் குரல் கொடுத்தும் பார்த்தான். உடனே ஏதோ முடிவுக்கு வந்தவனாய் வந்த வழியாகத் திரும்பி நடக்கலானான்.

சிறிது தூரம் சென்ற பிறகு பாதையின் குறுக்காக ஓர் உருவம் படுத்துக் கிடந்தது. டோர்ச்சை அடித்துப் பார்த்தபோது தான் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது அவனுக்கு.

"சந்தோஷ். டேய் சந்தோஷ்" என்று சத்தம் போட்டு எழுப்பினான். இரண்டு மூன்று தட்டு தட்டியபோது தான் அவன் மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தான்.

"டேய்..உன்னைக் காணாம எவ்வளவு பயந்திட்டேன் நான். இந்த நேரத்தில இப்படி படுத்துக் கிடக்கிறாயே. எழும்பு.... எழும்படா."

"கோவிச்சுக்காதே வசந்த். சரியான தூக்கம் வந்தது. அதுதான் படுத்திட்டேன். என்னை விட்டுட்டு நீ போக மாட்டாய் என்று எனக்குத் தெரியும்" என்று கூறியவனாகத் தலைக்கு வைத்திருந்த பையைக் கையில் எடுத்தபடி திரும்பவும் முன்னோக்கி நடக்கத் தொடங்கினார்கள். "இப்போதே பதினொரு மணியாகிட்டுது. இன்னும் மூன்று கட்டை நடந்தால் தான் நாயாற்றுப் பாலத்தை அடைய முடியும். இனி இப்படி ஏதாவது நீ செய்தால் நான் விட்டுவிட்டுத் தனியே போய்விடுவேன்" என கோபிக்கும் தொனியில் பேசினான் வசந்த்.

நள்ளிரவு 12 மணிக்கிடையில் நாயாற்றுப் பாலத்தை அடைந்துவிட வேண்டும் என வேகமாக நடந்தார்கள் இருவரும். எதிரில் எவருமே வருவதைக் காணமுடியவில்லை. இரவால் பிடிபடும் காலமென்றால் நாயாற்றுச் சிறுகடல் சொர்க்கபுரியாகவே ஜொலிக்கும். ஆனால், இன்று அந்தக் காலம் போய் கைவிடப்பட்ட தீவாகக் கிடந்தது நாயாற்றுப் பகுதி.

"வசந்த், இங்கே யானை, கரடி, புலி எல்லாம் வருமாமே, உண்மையா?" என்று சந்தோஷிகன் கேட்டான்.

"ம்...கரடி, புலி வராது. ஆனால், யானை வருமாம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றான் வசந்தன்.

இதற்குள் அலைகளின் ஆரவாரம் கேட்கத் தொடங்கியது. தாம் பாலத்தை நெருங்கிவிட்டோம் என அவர்கள் உணர்ந்தார்கள். இப்போது அவர்களின் மனதில் ஒருவித நிம்மதி பிறந்து விட்டது.

"ஹூய்...பாலத்துக்கே வந்திட்டோம்" என்று கூறியவனாக உற்சாகத்தில் குதித்தான் இளையவன். பாலத்தின் தொடக்கத்தை அடைந்தவுடன் பைகளை ஒருபுறமாக வைத்துவிட்டு ஓய்வெடுப்பதற்காக அமர்ந்து கொண்டார்கள். பின்னர் தாம் கொண்டுவந்திருந்த முட்டைமா கலவையை எடுத்துச் சாப்பிட்டார்கள்.

"சரி, சந்தோஷ், இங்கே கொஞ்சம் படுத்து ஓய்வெடுத்துக்கொள்வோம்... போக வேண்டிய நேரம் வரும்போது உன்னை நான் எழுப்புவேன்" என்றவாறு துணியை விரித்து பாலத்தின் மடியிலே படுக்கலானான். காற்று மெல்லிய சத்தத்தோடு இதமாக வீசிக் கொண்டிருந்தது.

(தொடரும்)



செல்வி. அபர்ணா செல்வராஜாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


திருமதி சிவானந்தி ஹரிதர்சினியின் மாணவியும், செல்வராஜா தம்பதியரின் புதல்வியுமான இவரின் அரகேற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக புகழ்பெற்ற நடனக் கலைஞரும், நாட்டிய ஆசானுமான பத்மபூஷண் வி.பி. தனஞ்ஞயன் இந்தியாவில் இருந்து வருகை தந்து சிறப்பிக்க உள்ளார்.


குறைந்த வட்டி அதிகூடிய பணம்

பவுணுக்கு ரூ. 29,000 வரை

மாதாந்த வட்டி 1.16% மட்டுமே!

COMMERCIAL BANK



P.G. Martin Wonderworld
297, Galle Road, Colombo 03.
Tel: 2577704, 2591560, 0722 24 6435
E mail - pgwonder@yahoo.com.au



முதியோர்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு பாரம்பரியம்.

12% [வ.வ.வீ 12.68%]
ஒவ்வொரு மாதமும் வருடாந்த வட்டி

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ | முதிர்ச்சி | வ.வ.வீ |
|---|---|---|---|---|
| 1மாதம் | - | - | 9.50% | 9.92% |
| 3மாதங்கள் | - | - | 11.00% | 11.46% |
| 6மாதங்கள் | - | - | 11.50% | 11.83% |
| 1வருடம் | 11.50% | 12.13% | 12.50% | 12.50% |
| 2வருடங்கள் | 12.00% | 12.68% | 13.50% | 12.69% |
| 3வருடங்கள் | 12.00% | 12.68% | 14.50% | 12.79% |

கொழும்பு திலீப் 0772 069 796 ஏரோன் 0772 702 368 மயூரன் 0773 522 916 உலகநாதன் 0773 464399

வருத்துறை: 0777 427 281 மாத்தறை: 0773 043 873 வெம்பிலிப்பிட்டிய: 0777 688 720 தீர்கொழும்பு: 0772 620 662 பண்டாரவளை: 0773 043 874

பொலன்னறுவை: 0772 929 576 வவுனியா: 0773 342 113 யாழ்ப்பாணம்: 0776 751 839 மட்டக்களப்பு : 0771 096995

BARTLEET GROUP

BARTLEET FINANCE LTD



"படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியா போய்ச்சேர முடியுமென நான் எண்ணினேன்.
நான் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்டேன்."



கண்ணன், வயது 40
இனந்தெரியாத நாடு ஒன்றில் திர்க்கதி நிலையில்

மனிதக் கடத்தல்காரர்களால் பிழையாக வழிநடத்தப்பட வேண்டாம்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் உங்களுக்கு வழங்கும் சேமநலச் செய்தி.


ஒருவர்: உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் கூறிய கதைகள். அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.



LIQUIDATION




50% BIS 70%




Möbel Ferrari

www.moebel-ferrari.ch

HINWIL Wässeristrasse 28
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

STILMÖBEL

Direkt-Kedit -
6 Monate ohne Zins



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பொக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2010, ஓகஸ்ட் 29 ஆம் திகதி வெளியிடப்பட்டது